RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி!
குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 31, 31 மே 2024 இதழ்:- 01

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
## உறவுகளே! யூன் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## பொது வேட்பாளரை நிறுத்தக் கூடிய ஒற்றுமை தமிழர்களிடம் இல்லை
## விக்கியின் வீடு தேடிச் சென்று ரணில் சொன்ன விடயம்!
## சிரித்துக் கொண்டு தெரியாது என்று சொன்ன பெருமகன்

பொது வேட்பாளரை நிறுத்த கூடிய ஒற்றுமை தமிழ் மக்கள் மத்தியில் இல்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னிடம் தெரிவித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள விக்னேஸ்வரனின் இல்லத்திற்கு 25 மே 2024 (7ம்பக்கம் பார்க்க)




ஈழநாடு:- மின்னிதழில் வாசிக்க eelanadu.ca

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins
Manulife

## இலங்கையை விசேட கண்காணிப்புப் பட்டியலில் சேர்க்குமாறு பைடன் தலைமையிலான அரசிற்கு பரிந்துரை



மத சிறுபான்மையினருக்கு எதிராக பௌத்த பிக்குகளால் தூண்டப்பட்ட ஒடுக்குமுறைகளைத் தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் தவறியிருக்கிறது. இலங்கையின் மதச்சுதந்திரம் தொடர்பான வருடாந்த அறிக்கையில் அமெரிக்க ஆணைக்குழு சுட்டிக் காட்டும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பௌத்த பிக்குகளால் மத சிறுபான்மையினருக்கு எதிராகத் தூண்டப்பட்ட அமைதியின்மை மற்றும் வன்முறைகளைத் தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் தவறியிருப்பதாக தமது வருடாந்த அறிக்கையில் (8ம் பக்கம் பார்க்க)

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvale Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## இறுதி யுத்தத்தில் கைது செய்யப்பட்டு இராணுவத்தினரால் கடும் சித்திரவதை அனுபவித்த பெண்களுக்காக குரல் கொடுக்கும் சுகந்தினிக்கு கொரியாவில் உயர் விருது



இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons) (வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

எந்தச் செய்தியையும் முந்தித் தரும் ஒரே ஏடு ஈழநாடு

THINKING OF

## SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
Sales Representative B.Comm.
Dir: 647-221-5220
piravien@gmail.com



21 Years Real Estate Experience

HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY





### Exceptional Opportunity to lease a prime stand-alone Building and nicely finished ground floor office space on Oshawa

- This property offers 19,500 Sq Ft of prime Industrial space
- Including 4,300 Sq Ft of Office space,
- 15,200 Sq Ft of Warehouse plus mezzanine space
- This building features 2 truck level doors within a heated dock area
- 2 Drive -in Doors with trailer parking on the side.


- Well-connected to highways (401,412 and 407)
- Easy access to public transit, providing great access to a strong labor pool
- Conveniently located near the GM plant








**Dundas / Henry**




Whitby $999,000
Bedrooms: 3+2 Washrooms: 2
Easy access to Whitby Go

**Midland Ave/ Eglinton Ave**



Scarborough $1,150,000
Bedrooms: 3 Washrooms: 2
Excellent Location, Min To Subway

**Taunton/Garden**



Whitby $969,000
Bedrooms: 3 Washrooms: 2
Professionally Renovated Home

**Lawrence /Morningside**



Scarborough $425,000
Bedrooms: 3 Washrooms: 2
Large Open Balcony

**Tapscott Rd/Mclevin Ave**

FOR LEASE



Scarborough $2,200
Bedrooms: 2 Washrooms: 1
Clean and well kept Townhouse

**Major Mac./Markham Rd**

FOR LEASE



Markham $1,850
Bedrooms: 2 Washrooms: 1
Excellent Location, Sep. Entrance

*Looking for more house?*

www.AgentSiva.com

WILL BRING THE BEST RESULTS!

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# 31வது ஆண்டில் உங்கள் அபிமான ஈழநாடு!

எம் இனிய வாசகர்களே!

கனடாத் தமிழ் ஊடகத் துறை வரலாற்றில் தனித்துவமான ஒரு முத்திரையைப் பதித்து தமிழ்த் தேசியப் பத்திரிகையாக விளங்கும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை 30ஆண்டுகளை நிறைவு செய்து இன்று 31வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின் றது.

கடந்த மூன்று தசாப்த கால அளவில் ஈழத் தமிழினத்தின் உரிமைக் குரலாக கனடா மண்ணில் விளங்கும் ஈழநாடு பத்திரிகை இத்தருணத்தில் தன்னை வளர்த்த வாசகர் களையும் விளம்பரதாரர்களையும் நினைவு கூருவதில் பேருவகை அடைகின்றது. ஈழநாடு பத்திரிகையின் கடந்த 30 ஆண்டு செயற்பாடுகளும் அது பயணித்த பாதைகளும் பற்றி உண்மையாக மதிப்பிடக் கூடியவர்கள் அதன் வாசகர்களாகிய நீங்களே அன்றி நாம் அல்ல.

30 ஆண்டுகள் ஈழநாடு பத்திரிகையைக் காப்பாற்றி வந்தவர்கள் நீங்களே. உங்களு டைய அங்கீகாரமே ஈழநாடு பத்திரிகையைக் காப்பாற்றி வந்திருக்கின்றது. இது உங்கள் பத்திரிகை என்ற அங்கீகரிப்பு ஈழநாடு பத்திரிகைக்கு இன்று வரையும் கிடைத்து ள்ளது.

அரசியல் ஆதாயங்களுக்காகவோ அல்லது வியாபார நோக்கங்களுக்காகவோ அன்றி எமது சொந்த புகழ் பாடுவதற்காகவோ ஈழநாடு பத்திரிகையை ஆரம்பிக்கவில்லை.

எம்மால் தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத் திற்கும் போராட்டத்தை வழிநடத்திய வீர வேங்கைகளுக்கும் அந்த மண்ணில் வாழு கின்ற மக்களுக்கும் இயன்ற வரை துணை நிற்க வேண்டும் என்ற அவாவினால் தூண்டப்பட்டே ஈழநாடு பத்திரிகை கனடா வில் பிறப்பெடுத்தது. அந்தப் பாரிய பணியை நாம் சிறப்பாக முன்னெடுத்து வந்தோம் என்பதை நெஞ்சில் கை வைத்து உறுதி யாகக் கூற முடியும்.

பத்திரிகை என்பது நடுநிலை என்ற நாடக மேடையில்ஒரு கபட வேடதாரி வேடத்தினை யேற்று அந்தப் பத்திரிகையும் ஆசிரியரும் நடிக்க வேண்டும் என்ற எதிர் பார்ப்பு இருந்த கால கட்டத்தில் பிறப்பெடுத்த ஈழநாடு பத்திரிகை அதனை முற்றாக நிராகரித்தது. இன்றும் அதனை நிராகரித்தே வருகின்றது.

நாம் எமது இனத்தின் பக்கமும் இனப் போராட்டத்தை நடத்தியவர்கள் பக்கமும் முழுமையாக நின்றோம் என்பதை வாசகர்கள் அறிவார்கள். அந்தப் பக்கங்களின் அருகில் நாம் நெருங்கி நின்றமையால் தான் கடந்த 30 ஆண்டுகளை எம்மால் கடந்து பயணிக்க முடிந்தது.

ஓர் பத்திரிகையின் வெற்றி என்பது அது எத்தனை பக்கங்களுடன் வெளி வருகின்றது என்பதிலோ அல்லது எத்தனை பக்கங்களை விளம்பரங்களால் நிரப்பி இனநலன் சாரா வர்த்தக நோக்கத்தைக் கொண்டு யாரையும் தலை மேல் தூக்கி வைத்து புகழ்மாலை போட்டு பிரமுகர்களாக்கும் செய்திகளுடன் வாசகர்கள் மீது திணிக்கப்படுவதிலோ தங்கி இருப்பதில்லை.

மாறாக அவ் ஊடகம் எவ்வகையான தரத்தி லுள்ள வாசகர்களைச் சென்றடைகிறது என்ப திலும் அது எத்தகைய தாக்கத்தை வாசகப் பரப்பில் ஏற்படுத்துகின்றது என்பதிலுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்பதை ஏற்பவர்கள் ஈழநாடு பத்திரிகையின் காத்திர மான பாத்திரத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்றே நம்புகின்றேன்.

தரமான - தெளிவான தகவல்களையும் செய்திகளையும் வழங்குவதில் ஈழநாடு பத்திரிகை என்றுமே முன்னின்று வருவதால் அதன் செல்வாக்கு, போட்டித் தன்மை அற்ற நிலைமையை உருவாக்கியுள்ளதுடன் கனடி யத் தமிழ் வாசகர்கள் மத்தியில் தனக்கென ஓர் மதிப்பையும் மரியாதையையும் பேணி வரு கின்றது.

எந்தச் செய்தியை எழுத எடுத்தாலும் அதனை விளக்கமாக உண்மையாக தெளிவாக எழுத வேண்டுமென்ற ஒரு கொள்கையை வகுத்துச் செயற்பட்டு வருகின்றது. ஒரு செய்தியின் மூலம் எதைச் சொல்ல முற்படுகின்றோமோ அது தெளிவாக ஒரு வாசகரிடம் அல்லது சாதாரண மக்களிடம் போய்ச் சேர வேண்டும். செய்திகளைப் வாசிக்கும் மக்கள் குழப்பமடை யாக் கூடாது என்பதில் ஈழநாடு பத்திரிகை மிகக் கவனமாகவே இருந்தது. இருக்கின் றது.

ஈழநாடு பத்திரிகை கடந்து வந்த பாதை ஈழத் தமிழன் வரலாற்றில் முக்கியமானதொரு கால கட்டம். நிகழ் காலத்தோடு எதிர் காலத்திலும் எமது எழுத்துக்களை மக்கள் பேசக் கூடிய தாக எழுதுவது என்ற உயர்ந்த எண்ணம் எம்மடம் ஆழ வேரூன்றி இருந்தது.

பொறுப்புமிக்க ஊடகம் என்ற வகையில் நாம் இறுக்கமான நடைமுறைகளைப் பின் பற்றி னோம். அதனால் பல விளம்பரங்களை இன்று வரை நாம் இழந்திருக்கிறோம்.- நண்பர்கள் பலர் எதிரி யாகிப் போனோர்கள் - அதற்காக ஓர் இலட்சியத்தை நோக்கிய பயணத்தில் ஒரு ஊடகம் எப்படி இருக்க வேண்டும் என்ற வரையறையை விட்டு விலக நான் தயாராக இருக்கவில்லை.

நெருக்கடி மிகுந்த கால கட்டங்களையும் சோதனைகளையும் - சவால்களையும் குழி பறிப்புக்களையும் கடந்து- கடந்த 30ஆண்டு களை நான் கடந்து வந்திருக்கிறேன் என்றால் அதற்கான மனத் துணிவையும் ஆத்ம பலத்தையும் தந்தவர்கள் வாசகர்களாகிய நீங்களும் துணை நின்ற வர்த்தகர்களுமே.

இன்றும் ஈழநாடு பத்திரிகை தனது தமிழ்த் தேசியப் பணியை நன்கு உணர்ந்துள்ளது. வெறும் உணர்ச்சிகளுக்கும் கோஷங்களுக்கும் அப்பால் தாயகத்தின் இன்றைய யதார்த்த நிலையை வெளிக் கொணர்வதில் அக்கறை செலுத்துகின்றது.

ஒரு இனம் ஆகாயத்தில் வாழ முடியாது. அந்த இனம் வாழ நிலம் வேண்டும். அந்த நிலத்தை நாம் பாதுகாத்தே தீர வேண்டும். எந்த மண்ணுக்காக - எந்த மக்களுக்காக 55 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகள் தங்கள் உயிர்களை அர்ப்பணித்தார்களோ அந்த மண் ணில் அந்த மக்கள் சுய கௌரவத்துடன் வாழ நாம் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். வன்னிப் பெருநிலப்பரப்பில் நிகழ்ந்த பேரவலத் தின் போது தாய் தந்தையரை இழந்து யாருமற்றவர்களாக்கப்பட்ட குழந்தைகள், போர்க் களத்தில் எதிரியுடன் மோதி களப் பலியான மாவீரர்களின் பிள்ளைகள் என சுமார் 423க்கு மேற்பட்ட குழந்தைகளை சிறப்பான முறையில் பராமரித்து வரும் அன்பு இல்லத் திற்கு கடந்த செப்டம்பர் 2011 முதல் அவர் களது மூன்று வேளை உணவுக்கான செல வினை பொறுப்பேற்று 13வருடங்களுக்கு மேலாக மனித நேயம்மிக்க கனடா வாழ் தமிழ் உறவுகளின் ஆதரவோடு சிறப்பாகச் செயற் பட்டு வருகின்றோம். அவர்களுக்கான உணவுத் தேவைகளை வழங்கி வரும் அனைத்து நல்லிதயங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். அந்தக் குழந்தைகளது உணவுத் தேவையை நிறைவு செய்வது மட்டுமல்ல அவர்களது வாழ்க்கைக்குத் தேவையான கல்வியையும் நாம் வழங்கி வரு கின்றோம். அதன் பலனை இன்று எமது கண்கள் ஊடாகப் பார்க்கின்றோம்.

ஆம்! எமது இல்லப் பிள்ளைகள் 15 பேர் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி கொழும்பு யாழ்ப்பாணம் மட்டக்களப்பு பல்கலைக்கழகங் களில் கல்வி கற்று வருகின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதாந்தச் செலவு 25,000 ருபா தேவைப்படுகின்றது. அத்துடன் எமது 3 இல்லப் பிள்ளைகளின் பிரத்தியேகக் கல்வி மற்றும் உடைகளுக்கு வருடந்தோறும் மேலதிக செலவுகள் ஏற்பட்ட வண்ணமே யுள்ளன.


இவற்றை நிவர்த்தி செய்யும் பொருட்டு 28 யூலை 2024 ஞாயிற்றுக்கிழமை இராப்போசன விருந்து நிகழ்வை ஒழுங்கு செய்துள்ளோம். இது எமது 13வது ஆண்டு நிகழ்வாகும். மேலதிக விபரங்களை 12, 13ம் பக்கங்களில் பார்க்கலாம். உங்களுடைய ஒத்துழைப்பை யும் ஒத்தாசையும் வழங்கி எமது மண்ணின் விடிவுக்காக வித்தாகிப் போனவர்களின் பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கு கல்விக்கும் கை கொடுங் கள் என்று கேட்டு இரந்து நிற்கின்றோம். விழாவில் கலந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் 416 841 9600 தொலை பேசியில் தொடர்பு கொண்டு முற்பதிவு செய்து கொள்ளலாம்.

எங்கள் வாழ் நாளில் ஒரு மலையைப் புரட்ட முடியவில்லையே என்று கவலைப்படுவதை விட தாய் மண்ணில் ஒரு குழந்தைக்கு கல்வியைக் கொடுத்து அதனது வாழ்வில் மகிழ்ச்சியைக் கொடுத்தோமே என்ற நிறை வோடு ஈழநாடு பத்திரிகை தனது பணி யினைத் தொடர்கின்றது. அந்தப் புனிதப் பணியைத் தொடர்ந்து சிறப்பாகச் செய்வ தற்கு எமது வாசகர்களாகிய நீங்கள் தான் அடித்தளமிட்டவர்கள். உங்கள் ஒத்துழை ப்பும் ஒத்தாசையும் நல்லெண்ணமும் அது காட்டுகின்ற நல்லாதரவும் தான் எங்கள் வளர்ச்சியும் உயர்ச்சியும் என்பதை யாரும் மறக்க முடியாது.

எம் இனிய வாசகர்களே! தாய் மண்ணில் எமது மண்ணையும் எதிர்காலந் சந்ததியை யும் சூழ்ந்துள்ள கொடிய ஆக்கிரமிப்பில் இருந்து நம்மை நாமே காப்பாற்றிக் கொள் வோம். இதுவும் கடந்து போகும் என்ற உறுதியோடு எழுந்து நிற்போம். தாயக மண் ணையும் மண்ணின் எதிர்கால மைந்தர்களை யும் வாழ வைக்க முன் வாருங்கள் என்பதே எமது இவ்வாண்டு ஈழநாடு பத்திரிகையின் வேண்டுதலாகும். அதற்காக தொடர்ந்து உழை ப்போம்!

T.K.பரமேஸ்வரன் (ஆசிரியர் - ஈழநாடு)

ஈழநாடு வாசகர்களின் கவனத்திற்கு! எந்தச் செய்தி யையும் முந்தித் தரும் ஒரே ஏடாக கடந்த 31 ஆண்டு களாக வெளி வந்து கொண்டிருந்த உங்கள் அபிமான ஈழநாடு 03 மே 2024 வெள்ளிக்கிழமை முதல் மாதம் இரு முறையாக வெளி வருகின்றது. அடுத்த இதழ் 31 மே 2024 வெள்ளிக்கிழமை என்பதை வாகர்களுக்கு அறியத் தருகின்றோம். இது ஓர் தற்காலிக ஏற்பாடே. எனது கண் சம்பந்தமான சிகிச்சை காரணமாக இந்த ஏற்பாடு. இதேவேளை eelanadu.ca என்ற மின்னி தழ் மூலமாகவும் முகநூல் மூலமாகவும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வாசிக்கலாம். அன்பு இல்லக் குழந்தைகளின் வாழ்வாதார உதவிகள் வழமை போல் நடைபெற்று மாதம் இரு முறை வெளிவரும் ஈழநாடு அச்சுப் பத்திரிகையில் பிரசுரமாகும் என்பதை யும் அறியத் தருகின்றேன். என்றும் அன்புடன்
T.K. பரமேஸ்வரன் -ஈழநாடு ஆசிரியர்

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# வன்னி ஊடகவியலாளரின் புகைப்படங்களுக்கு ஐ.நா. அங்கீகாரம்



இலங்கையில் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் வெளியிடப்பட்ட விசேட அறிக்கைக்காக, வன்னியில் முன்னணி தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் எடுத்த புகைப்படங்களை ஐக்கிய நாடுகள் சபை பயன்படுத்தியுள்ளது.

மே 21 அன்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் வெளியிடப்பட்ட 'பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் மரபு இலங்கையை ஆட்டிப்படைக்கிறது' (Legacy of enforced disappearances haunts Sri Lanka) என்ற கட்டுரைக்கு புகைப்பட ஊடகவியலாளர் கனபதிப்பிள்ளை குமணன் எடுத்த புகைப்படங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையில் யுத்தத்தின் போது பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது எனக் கேட்டு இலங்கையில் நீண்ட காலமாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் சங்கத்தைச் சேர்ந்த தாய்மார்களின் அனுபவங்களை மையப்படுத்தி இக்கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது. இலங்கையில் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் உள்ளூர் பொறுப்புக்கூறல் இல்லாமை தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையுடன் இணைந்து இந்தக் கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது.

ஒருவேளை நான் மீண்டும் என் மகனைப் பார்ப்பேன் அல்லது குறைந்த பட்சம் அவன் எங்கே புதைக்கப்பட்டான் என்பதைக் கண்டுபிடிப்பேன். கடந்த 2009ஆம் ஆண்டு முதல் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை கண்டு பிடிக்கக் கோரி முடிவில்லாத போராட்டத்தில் ஈடுபட்டு வரும் 72 வயதான தாய் ஒருவர் இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள கட்டுரையில் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அகதிகள் முகாம்களுக்கு, கிராமங்களில் உள்ள வெகுஜன புதைகுழிகளுக்குச் சென்றதோடு, ஏனைய தாய்மார்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் மனைவிமாருடன் 2,650 நாட்களைக் கடந்து அமைதியான ஆர்ப்பாட்டங்களை நடத்தி வரும் அவர், அதிகாரிகளிடம் கேட்கின்றார் எங்கள் பிள்ளைகள் எங்கே? எங்கள் கணவர்மார் எங்கே?

இலங்கையில் உள்நாட்டுப் போர் 15 ஆண்டுகளுக்கு முன்பே முடிவுக்கு வந்தாலும், பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உண்மைக்காகவும், தங்கள் அன்புக்குரியவர்களுக்கான நீதிக்காகவும் தொடர்ந்து போராடி வருகின்றனர். ஒன்றரை தசாப்தங்களுக்குப் பிறகும், அவர்கள் தங்கள் அன்புக்குரியவர்களின் தலைவிதி அல்லது இருப்பிடம் பற்றிய எந்த தகவலும் கிடைக்கவில்லை.

பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் மரபு இலங்கையை ஆட்டிப் படைக்கிறது என்ற தலைப்பில் வெளியிடப்படடுள்ள இந்த கட்டுரையில் பயன்படுத்தப்பட்டுள்ள இரண்டு புகைப்படங்களின் உரிமையாளரான கனபதிப்பிள்ளை குமணன் பொதுவாக போரினால் பாதிக்கப்பட்ட மக்களைப் பற்றி வன்னியில் பல ஆண்டுகளாக அறிக்கையிட்டு வருகின்றார்.

ஊடகங்களில் பாதுகாப்புப் படையினரின் அச்சுறுத்தல்களுக்கு மேலதிகமாக, மூன்று வருடங்களுக்கு முன்னர் ஒரு போலி மரக் கடத்தலை அம்பலப்படுத்தியதற்காக அவர் தனது தொழில்முறை நண்பரான சண்முகம் தவசீலனுடன் சேர்ந்து கடுமையான தாக்குதலையும் சந்திக்க வேண்டியிருந்தது.

வன்னியில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான பல வன்முறைச் சம்பவங்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**மே மாதம் முதல் குறுகிய காலத்திற்கு மாதம் இரு முறையாக வெளிவரும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் அடுத்த அச்சுப் பத்திரிகையை 14 யூன் 2024 வெள்ளிக்கிழமை அனைத்து வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.**

**பிரதி வெள்ளிக்கிழமை தோறும் eelanadu.ca மின்னஞ்சல் மூலம் வாசிக்கலாம்**

**தொடர்புகளுக்கு 416 841 9600**




கனடா – அருள்மிகு

## ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் பக்தர்களுக்கு வணக்கம். கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் இலாப நோக்கமற்ற தொண்டு நிறுவனமாக கனடா அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதுவரை காலமும் கோயில் நிலம் வாங்குவதற்கு நன்கொடை கொடுத்த பக்தர்கள் அனைவரும் உங்கள் பழைய பற்றுச்சீட்டை கோயிலில் கொடுத்து கனடிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலக்கம் பதியப் பெற்ற புதிய பற்றுச்சீட்டை கோயிலில் பெற்றுக் கொண்டு அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இனி வரும் காலங்களில் கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலுக்கு நிலம் வாங்குவதற்கும் இப்போது நடைபெறும் திருப்பணிக்காக நன்கொடை செய்வதற்கும் அல்லது எந்தவிதமான பூஜைகள் திருவிழாக்களிற்கும் கோயிலில் பணம் கொடுக்கும் போது அதற்குரிய பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளுவதன் மூலம் அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக்கொள்ளலாம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஓம் தாயே மகமாரி – நிர்வாகசபை

**இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்**

# பொது வேட்பாளர் குறித்து விசேட சந்திப்பு




தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் கருத்து பரிமாற்ற நிகழ்வொன்றினை நடத்தவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் 27 மே 2024 திங்கட்கிழமை நடாத்திய ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், பொது வேட்பாளர் தொடர்பிலான முன்னெடுப்புக்களை முன்னெடுத்து வரும் சிவில் சமூக பிரதிநிதிகள், பத்தி எழுத்தாளர்கள் உள்ளிட்டவர்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் என்னை நேரில் சந்தித்து கதைத்தார்கள்.

பொது வேட்பாளர் தொடர்பிலான எனது நிலைப்பாட்டை அவர்களுக்கு கூறினேன். அவர்களும், பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பிலான தமது கருத்துக்களையும் கூறினார்கள்.

பொது வேட்பாளர் தொடர்பில் பொது வெளியில் கருத்துக்களை பரிமாறும் நிகழ்வினை நடாத்தி .அதில் ஆரோக்கியமான கலந்துரையாடலை நடாத்துவோம் என நான் தெரிவித்திருந்தேன். அதற்கு அவர்களுக்கும் சம்மதித்தர்கள்.

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 09ஆம் திகதி பொது வேட்பாளர் தொடர்பில் கருத்துக்களை பரிமாறும் நிகழ்விற்கு ஏற்பாடு செய்துள்ளேன். அதில் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டாது, இவர் அவரின் ஆள் இவரின் ஆள் என தாக்கி பேசாது தமது கருத்துக்களை முன் வைத்து ஆரோக்கியமான கருத்து பரிமாற்றம் இடம் பெற்றால் மக்களுக்கும் தெளிவு கிடைக்கும். அதற்கவே அந் நிகழ்வை ஒழுங்கமைத்துள்ளேன்'' என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேலும் தெரிவித்தார்.

# விடுதலைப்புலிகள் நிர்மாணித்த தமிழீழ நாடாளுமன்ற கட்டிடத்தில் ரணில் உரை!




ஜனாதிபதி பணி நிமித்தம் வருகை தந்துள்ள நிலையில் தேர்தல் பிரச்சாரங்கள் கூடாதென தெரிவித்துள்ளார் கூட்டமைப்பின் எம்.ஏ.சுமந்திரன்.

யாழ்ப்பாணத்தில் 2005ம் ஆண்டில் ஜனாதிபதி தேர்தலில் ரணிலிற்கு வாக்களிக்க தவறிய தமிழ் மக்கள் இம்முறை அத்தகைய தவறை செய்ய மாட்டார்களென தெரிவித்துள்ள எம்.ஏ.சுமந்திரன் கிளிநொச்சியில் தமிழீழ நீதிமன்ற கட்டடத் தொகுதியில் பணி நிமித்தம் வருகை தந்துள்ள நிலையில் தேர்தல் பிரச்சாரங்கள் கூடாதென தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளால் இரணைமடுவில் அமைக்கப்பட்ட போதும் பின்னர் செயற்படுத்தப் படாது கை விடப்பட்டதாக கூறப் படும் தமிழீழ நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் பொதுமக்களிற்கான காணி உறுதிகள் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றிருந்தது.

அங்கு உரையாற்றிய முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஊடகங்கள் ஜனாதிபதி ஆற்றி வரும் பணிகளை கண்டு கொள்வதில்லையென தெரிவித்ததுடன் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு வாக்களித்து ஆதரவளிக்க கோரியிருந்தார்.

அவரை தொடர்ந்து உரையாற்ற வந்திருந்த எம்.ஏ.சுமந்திரன் 13ம் திருத்த சட்டத்தின் கீழான காணி அதிகாரம் மாகாணசபைகளிற்கு வழங்கப்படவேண்டுமென கோரியதுடன் காணி உரிமம் வழங்குவது போன்ற ஜனாதிபதியின் பணி நிமித்தமாக நிகழ்வுகளை தேர்தல் பரப்புரையாக கடைப்பிடிக்க கூடாதென கேட்டுக்கொண்டார்.

இதனிடையே எம்.க.சுமந்திரனின் உரையினை தான் அறிந்த ஆங்கிலத்தில் அமைச்சர் டக்ளஸ் மொழிபெயர்க்க முற்பட நிலைமையினை புரிந்த கொண்ட அவர் தனது உரையினை தமிழ், ஆங்கிலமென இரு மொழிகளிலும் முன்னெடுத்திருந்தார்.

# வெளிநாட்டு நிறுவனங்கள், வெளியாட்களுக்கு காணிகளை விற்காதீர்கள் - சுமந்திரன் வலியுறுத்து



வெளியாட்களுக்கு காணிகளை விற்க வேண்டாம் என பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

ஜனாதிபதி மக்களுக்கு காணி உரிமையை வழங்கியுள்ளார். இதில் சிலருக்கு விளக்கம் குறைவாக இருக்கிறது. இதில் வழங்கப்பட்ட அநேகமான காணிகள் மக்கள் பரம்பரையாக வாழ்ந்து வந்த காணிகள். இப்பொழுது அவர்களுக்கு முழுமையான அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கிறது.

சிலருக்கு இந்த காணி உரிமைகள் வழங்கப்பட்டாலும் சில கட்டுப்பாடுகளுடன் காணி உரிமைகள் வழங்கப்பட்டது. இப்பொழுது அந்த கட்டுப்பாடுகள் எல்லாம் நீக்கி அவர்களுக்கு முழுமையான அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த காணி உரிமைகளை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் என அவர்களுக்கு அறிவுரை கூறுவது எங்களுடைய கடமை. வெளியாட்களுக்கு இதனை விற்க வேண்டாம், ஈடு வைத்து இழந்து விட வேண்டாம், வெளிநாட்டு நிறுவனங்கள் இதனை கொள்வனவு செய்வதை அனுமதிக்க வேண்டாம் என தெரிவித்தார்.

**Condo For Rent**

Kennedy / Ellesmere சந்திப்புக்கு அருகில் Freshly Renovated செய்யப்பட்ட 3 Bed rooms 1 Washroom கொண்ட Condo உடனடியாக வாடகைக்கு விடப்படும். கார் தரிப்பிடம், T.V, இன்டர்நெட் இலவசம். 24 மணி நேர பஸ் சேவை மற்றும் தமிழ் வர்த்தக நிலையங்கள் மளிகைக் கடைகள் அருகில் அமைந்துள்ள குடியிருப்புக்கு மிகவும் உகந்த இடம்.

தொடர்புகளுக்கு 416 757 0034

# நிலைப்பாடுகளை நேர்மையாக கூறுங்கள்

தமிழ் பொது வேட்பாளர் விடயமானது, தமிழ் தேசிய அரசியல் பரப்பில் காணப்படும் பலவீனங்களை அம்பலப்படுத்தியிருக்கின்றது. தமிழ் தேசிய கட்சிகள் என்போர் எந்தளவிற்கு பலவீனமாக இருக்கின்றனர் என்பதையும் தெளிவாகவே நிரூபித்திருக்கின்றது.

தமிழ் பொது வேட் பாளரை நிறுத்தும் முயற்சி வெற்றி பெறுமா அல்லது தோல்வியடையுமா என்பது வேறு விடயம். ஒரு வேளை அந்த முயற்சி தோல்வியும் அடையலாம் அவ்வாறு தோல்வியடைந்தால் அதற்கு ஒரேயொரு காரணம் தான் இருக்க முடியும் அதாவது, தமிழ் தேசியத்தை முன்னிறுத்துவதாக கூறிக் கொள்ளும் அரசியல் கட்சிகளில் பெரும்பாலானவை தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை முன்னெடுக்க உதவவில்லை என்பதே தோல்விக்கான ஒரேயொரு காரணமாக இருக்க முடியும்.

இன்று வரையில் தமிழ் தேசிய கட்சிகள் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் தங்களின் உத்தியோகபூர்வமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (முன்னணி) மட்டுமே, தேர்தல் பகிஷ்கரிப்பை அறிவித்திருக்கின்றது ஆனால் அந்த பகிஷ்கரிப்புக்காக அவர்கள் பெரும் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதில்லை.

ஏனெனில், அவ்வாறு முன்னெடுத்த பின்னரும் மக்கள் வாக்களித்து விடுவார்கள் என்னும் அச்சமே அதற்கான காரணமாகும். ஏனெனில், பெரும்பான்மையான மக்கள் தேர்தலில் வாக்களிப்பார்கள் சாதாரண மக்களை பொறுத்தவரையில், வாக்களிப்பது ஒன்று தான், அரசியலில் பங்களிப்பதற்கு கிடைக்கும் ஒரேயொரு வாய்ப்பாகும். இதன் காரணமாகத் தான் காங்கிரஸ் பகிஷ்கரிப்பு தொடர்பில் பேசிய போதும், அதனை எவருமே பொருட்படுத்தவில்லை. தமிழ் மக்கள் சரத் பொன்சேகாவுக்கு வாக்களித்தார்கள்.

ஆனால், தேர்தலை பகிஷ்கரிக்கும் கோரிக்கையை பொருட்படுத்தவில்லை. இதற்கு பின்னரும் பகிஷ்கரிப்பு தொடர்பில் பேசுவதானது, அரசியல் அறிவுக்குறைபாடாகவே இருக்க முடியும். ஆனால், ஒரு தமிழ் வேட்பாளரை நிறுத்தி, அவருக்கு வாக்களிக்குமாறு கூறும் போது நிச்சயம் மக்கள் வாக்களிப்பார்கள். ஆனால், அதற்காக அனைவரும் ஒற்றுமையுடன் பணியாற்ற வேண்டும்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி வழமை போல் அதன் நழுவலான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கின்றது. ஆரம்பத்தில, தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை, கொள்கை ரீதியாக ஆதரிப்பதாக கூறியிருந்த ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளில் சிலவும் தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. தடுமாற்றமான பதிலையே தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருகின்றனர். ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் தீர்மானம் ஒரு தமிழ் தேசிய நிலைப்பாடாகும். இதன் மூலம் தமிழ் மக்களை பெருமெடுப்பில் வாக்களிக்க வைக்க முடியுமா அல்லது முடியாதா என்னும் சந்தேகம் அவசியமற்றது.

ஏனெனில், கடந்த மூன்று ஜனாதிபதி தேர்தல்களின் போது, தங்களின் வேண்டுகோளுக்கு இணங்க மக்கள் வாக்களித்தனர் எனக் கூறிக் கொள்வோர், எவ்வாறு மக்கள் மீது சந்தேகம் கொள்ள முடியும்? எனவே இங்கு பிரச்னை வேறு அதாவது, தமிழ் மக்கள் சார்ந்து தீர்மானகரமான முடிவுகளை மேற்கொள்வதற்கு தமிழ் தேசிய கட்சிகள் தயங்குகின்றன? எதனால் இந்தத் தயக்கம்?

இதற்கு பின்னால் இருக்கின்ற காரணங்கள் என்ன? நிச்சயமாக தமிழ் மக்கள் நலன்சார்ந்து, எந்தவொரு காரணமும் இருக்க வாய்பில்லை. எனவே தமிழ் தேசிய கட்சிகள் என்போர் —குறிப்பாக இலங்கை தமிழ் அரசுக் கட்சி அதேபோன்று, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி யில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளும், தமிழ் வேட்பாளர் தொடர்பில் தங்களின் தனியான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும்.

அது ஆதரவாகவும் இருக்கலாம் அல்லது எதிராகவும் இருக்கலாம் எதுவாக இருப்பினும் மக்களுக்கு தங்களின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும்.

# இறுதி யுத்தத்தில் கைது செய்யப்பட்டு இராணுவத்தினரால் கடும் சித்திரவதை அனுபவித்த பெண்களுக்காக குரல் கொடுக்கும் சுகந்தினிக்கு கொரியாவில் உயர் விருது



ஈழத்தமிழ் பெண்களின் உரிமைக்காக குரல் கொடுக்கும் மனித உரிமை செயற்பாட்டாளர் சுகந்தினி மதியமுதன் தங்கராஜிற்கு தென்கொரியாவின் மே18 நினைவு அறக்கட்டளை 2024 குவாங்ஜீ விருதினை வழங்கி கௌரவித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தினதும் அதன் பாதுகாப்பு படையினரினதும் ஒடுக்குமுறையால் பாதிக்கப்பட்டுள்ள யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் பெண்களின் உரிமைகள் அவர்களை வலுப்படுத்துதல் ஆகியவற்றிற்காக அமரா என்ற அமைப்பை ஆரம்பித்து சுகந்தினி தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்.

சுகந்தினி 2009 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை பாலியல் வன்முறைகளில் இருந்து தப்பியவர். இராணுவத்திடம் அனைத்தையும் இழந்த பல பெண்களிற்கு நம்பிக்கையை ஏற்படுத்துபவராக துணிச்சல் தைரியத்தின் அடையாளமாக சுகந்தினி காணப்படுகின்றார் என மே 18 நினைவு அறக்கட்டளை தெரிவித்துள்ளது.

சுகந்தினியின் செயற்பாடுகள் எங்கள் அமைப்பின் உணர்வுகளோ நெருக்கமானதாக காணப்படுகின்றது என கருதுகின்றோம் என தெரிவித்துள்ள மே 18 நினைவு அறக்கட்டளை இலங்கையில் தமிழ் பெண்களின் மனித உரிமை நிலவரத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான அவரது முயற்சிகளிற்கு உறுதியான ஆதரவை வழங்குகின்றோம் எனவும் தெரிவித்துள்ளது.

சர்வதேச சமூகத்தின் அக்கறையும் கவனமும் ஒத்துழைப்பும் ஆதரவும் தமிழர் பகுதிகளில் பாதுகாப்பு படையினரின் அக்கிரமங்கள் குறித்த வெளிச்சத்திற்கு வருவதற்கு உதவியாக அமையும் என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. இரண்டு காரணங்களிற்காக நான் விடுதலை இயக்கத்தில் இணைந்தேன் என தெரிவித்துள்ள சுகந்தினி ஒன்று தமிழர்களை சிங்கள அரசின் ஒடுக்குமுறையிலிருந்து விடுவிப்பது மற்றையது இலங்கையின் இராணுவ இயந்திரத்தின் பாலியல் வன்முறைகளில் இருந்து தமிழ் பெண்களை பாதுகாப்பது என தெரிவித்துள்ளார்.

2009 இல் ஆயுதமோதல் முடிவிற்கு வருவதற்கு முன்னர் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆட்சியின் கீழ் தமிழ் பெண்களின் பாதுகாப்பும் கௌரவமும் குறிப்பிடத்தக்க அளவிற்கு பாதுகாக்கப்பட்டது என சுகந்தினி தெரிவித்துள்ளார். பெண்கள் இரவில் அச்சமின்றி நடமாட முடிந்தது அவர்கள் தன்னிறைவு கொண்டவர்களாக சுதந்திரமாக வாழக் கூடியவர்களாக வலுப்படுத்தப்பட்டார்கள் பெண்களின் சுய வேலைவாய்ப்பிற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன பாதுகாப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டன ஆணாதிக்க சமூகத்தின் மூலம் உருவாக கூடிய சமூக தடைகளை உடைப்பதற்கான விழிப்புணர்வு வழங்கப்பட்டது எனவும் சுகந்தினி தெரிவித்துள்ளார்.

அனைத்து துறைகளிலும் பெண்களிற்கு சம வாய்ப்பு வழங்கப்பட்டது இது மெல்ல மெல்ல ஆணாதிக்க சமூகஉணர்வுகள் மறைவதற்கு வழி வகுத்தது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் 2009 இல் இடம்பெற்ற இனப்படுகொலையுடன் முடிவடைந்த இராணுவநடவடிக்கையின் பின்னர் நிலைமை மாற்றமடைந்தது என தெரிவித்துள்ள சுகந்தினி பாலியல் வன்முறைகள் சித்திரவதைகள் போன்ற சம்பவங்கள் குறித்த தகவல்கள் வெளியாகின இவை குழந்தைகள் வயது முதிர்ந்தவர்களிற்கு எதிராகவும் இழைக்கப்பட்டன என தெரிவித்துள்ளார்.

தான் கைது செய்யப்பட்டு வவுனியாவின் மிக மோசமான ஜோசப்முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டதை சுகந்தினி நினைவு கூர்ந்துள்ளார். அங்கு மிகவும் பயங்கரமான சித்திரவதைகளை எதிர்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

## ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகருக்கு கண்டனக் கடிதம்

ஐ.நா மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் வோல்கர் டர்க்கிற்கு ஜெனீவாவுக்கான இலங்கையின் தூதர் ஹிமாலி அருணதிலக கண்டனக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

இலங்கையின் மனித உரிமைகள் பதிவு குறித்து அவரது அலுவலகம் கடந்த 17ஆம் திகதி வெளியிட்ட அறிக்கை, ஒரு தேவையற்ற மற்றும் ஒரு தலைப்பட்ச முன் முயற்சி என்று ஹிமாலி தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிக்கைக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தின் எந்த ஒப்புதலும் இல்லை என்று ஹிமாலி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில் தொடர்ச்சியான நல்லிணக்க முயற்சிகளில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நேரத்தில், உயர்ஸ்தானிகரின் அறிக்கை, பக்கச்சார்பானது, அரசியல் மயமாக்கப்பட்டது மற்றும் சுயமாக உருவாக்கப்பட்டது என்று ஜெனீவா



வுக்கான இலங்கையின் தூதர் ஹிமாலி அருணாதிலக்கவின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டில் இலங்கையில் ஆயுதக் மோதல் முடிவடைந்த 15ஆம் ஆண்டு நிறைவின்போது இந்த அறிக்கை வெளியிடப்பட்டமை குறித்து ஹிமாலி கேள்வி எழுப்பியுள்ளார் இத்துடன் கடுமையான பொருளாதார நெருக்கடியின் பின்னணியில் இலங்கை அரசாங்கம் செய்த பணிகளையும் ஹிமாலி அருணதிலக கோடிட்டுக் காட்டியுள்ளார்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# முல்லைத்தீவு மாவட்ட மக்களின் பிரச்சனையை ரணிலால் தான் தீர்க்க முடியும் - செல்வம் புகழாரம்



முல்லைத்தீவு மாவட்ட மக்களின் பிரச்சனைகளை உங்களால் தான் தீர்த்து வைக்க முடியும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற உறுமய காணி உரித்து வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்திற்கு ஜனாதிபதி வருகை தந்தையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இம்மாவட்டத்தில் பல பிரச்சனைகள் உள்ளன. அவற்றை உங்களால் தான் தீர்த்து வைக்க முடியும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருக்கிறது.

இந்த மாவட்ட அபிவிருத்திக் குழுவை உங்கள் தலைமையில் நடத்தி முல்லைத்தீவு மாவட்ட மக்களின் காணி உள்ளிட்ட பிரச்சனைக்குத் தீர்வு வழங்க வேண்டும். காணி உறுதியில்லாத மேலும் பலர் உள்ளனர். சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாத நிலை உள்ளது. எமது மக்களின் அனைத்து பிரச்சனைகளையும் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்கின்றேன் எனத் தெரிவித்தார்.

# பொது வேட்பாளரை நிறுத்தக் கூடிய ஒற்றுமை தமிழர்களிடம் இல்லை விக்கியின் வீடு தேடிச் சென்று ரணில் சொன்ன விடயம்

பொது வேட்பாளரை நிறுத்த கூடிய ஒற்றுமை தமிழ் மக்கள் மத்தியில் இல்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னிடம் தெரிவித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள விக்னேஸ்வரனின் இல்லத்திற்கு 25 மே 2024 சனிக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரில் சென்று சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார். குறித்த சந்திப்பு தொடர்பில் வழமை போன்று விக்னேஸ்வரன் தெரிவிக்கையில்



யாழ்ப்பாணத்தில் நடை பெற்ற ஜனாதிபதியின் நிகழ்வுகளுக்கு என்னால் செல்ல முடியவில்லை. அதனால் அவர் என்னை வீடு தேடி வந்து சந்தித்தார். அதன் போது அரசியல் ரீதியாக நாங்கள் பேசிக்கொள்ளவில்லை. பொருளாதார ரீதியாக வடக்கு மக்களை மேலே ஏற்றி விட வேண்டும் என்பதே ஜனாதிபதியின் நோக்கமாக இருக்கிறது இளைஞர்கள் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு உண்டு. அரசியல் ரீதியான பிரச்சனைகள் பற்றி கதைக்கவில்லை. எல்லாவற்றையும் பொருளாதார ரீதியான பிரச்சனைக்குள் வைத்தே பார்க்கின்றார். பொது வேட்பாளர் சம்பந்தமாக பேச்சு எழுந்தது. அதன் போது தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்த கூடிய ஒற்றுமை தகுதி பின்னணி இல்லை என ஜனாதிபதி கூறினார்,

நான் சிரித்து விட்டு எனக்கு அது பற்றி தெரியாது. அதற்கு உரிய குழுக்கள் அது பற்றி பேசிக் கொண்டு இருக்கிறார்கள் அவர்கள் பொது வேட்பாளர் தொடர்பில் அறிவிப்பார்கள் என கூறினேன்.

சிறுபான்மையினரின் ஆதரவு தனக்கு தேவை என்பதனை அவர் ஏற்றுக்கொண்டார். ஜனாதிபதி தேர்தல் முடிய பாராளுமன்ற தேர்தலை நடத்தப்படும் எனவும் அதனை தொடர்ந்து மாகாண சபை தேர்தல் நடைபெறும் என தெரிவித்தார். எங்களின் வாழ்க்கை தரத்தை மேல் எழுப்பினாலும் , அரசியல் ரீதியான தீர்வுகள் தரவோ எம்மை நாம் வலுப்படுத்தவோ விடமாட்டார்கள் என்பது தெரிகிறது என சி.வி, விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இவரைப் போன்ற பச்சோந்தி அரசியல்வாதி யாரும் இல்லை. ரணில் சொன்னதற்கு முகத்தில் அடித்தாற் போல் பதில் கொடுக்காது சிரித்துக் கொண்டிருந்தாராம். இந்நிகழ்வு சுமந்திரனுடன் நடந்திருந்தால் தமிழ்த் தேசியம் பேசுவோர் என்ன கதை விட்டிருப்பார்கள்? ஆனால் நேரடியாக சுமந்திரன் பதில் சொல்லி இருப்பார்.

# கேப்பாப்பிலவில் போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களைச் சந்தித்த ரணில்! அதிரடியாக உத்தரவு!



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 26 மே 2024 ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்தில் உறுமய வேலைத்திட்டத்தின் கீழ் காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வில் பங்கேற்பதற்காக புதுக்குடியிருப்பு மத்திய மகா வித்தியாலயத்துக்குச் சென்ற போது ஜனாதிபதியைச் சந்திக்க வேண்டும் எனக் கூறி அப்பகுதியைச் சேர்ந்த இரண்டு பெண்கள், பாடசாலைக்கு முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து அறிந்த வட மாகாண ஆளுநர் பி. எஸ்.எம். சார்ள்ஸ், இரு பெண்களும் இருந்த இடத்துக்குச் சென்று அவர்களின் பிரச்சினை தொடர்பாக வினவ, அதன் போது அவர்களின் பிரச்சினையை ஜனாதிபதியிடம் முன்வைக்க வேண்டும் எனக் கூறியுள்ளனர். அதனையடுத்து, வட மாகாண ஆளுநர் அந்த இரு பெண்களை பற்றி ஜனாதிபதிக்கு அறிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போராட்டம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார். காணிப் பிரச்சினை காரணமாக தாம் உட்பட கேப்பாப்பிலவு கிராமத்தில் வசிக்கும் 56 குடும்பங்கள் கடும் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும், எனவே இதற்கு உடனடியாக தீர்வு காண ஏற்பாடு செய்யுமாறும் அந்த பெண்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தனர்.(22ம்பக்கம் பார்க்க)

# எந்த அடிப்படையில் வாக்களிப்பது?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கு வருகையின்போது அவர் பங்கு பற்றிய நிகழ்வுகளில் பாரபட்சமில்லாமல் இலங்கை தமிழ் அரசு கட்சியும் பங்கு பற்றியிருக்கின்றது. இதேபோன்று, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியும் பங்கு பற்றியிருக்கின்றது. பங்கு பற்றிய தமிழ் அரசியல்வாதிகள் ரணிலுக்கு நெருக்கமாக நிற்பதும் அதன் போதான அவர்களின் உடல்மொழியும் அவர்களின் மனோநிலையை காண் பிக்கின்றன. இதனை விடவும் முக்கியமானது ரணில் விக்னேஸ்வரன் சந்திப்பு.

ரணில் வீடு தேடிச் சென்று, ஒரு செய்தியை சொல்லிச் சென்றிருக்கின்றார். இதனையும் விக்னேஸ்வரன் தான் வெளிப்படுத்தியிருக்கின்றார் அதாவது, அனைத்துக் கட்சிகளும் ஒற்றுமையாக ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தப் போவதில்லை அவர்களால் அது முடியாது.

அத்துடன், ரணில் தெரிவித்திருக்கும் இன்னொரு தகவல்தான் தமிழர் தரப்புகள் ஊன்றிக் கவனிக்க வேண்டியது. அதாவது, 'இப்போது அரசியல் தீர்வு அவசரமானதல்ல அதனை விடவும் மக்களின் பொருளாதார பிரச்னை முக்கியமானது.

மேலும், நானும் அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தில் பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் தான் பேசுகின்றேன் சஜித் பிரேமதாஸவும் அப்படித் தான் பேசுகின்றார். இதன் மூலம் ரணில் விக்கிரமசிங்க எதனை உணர்த்த முற்படுகின்றார்? தமிழர்கள் விரும்புவது போன்றதோர் அரசியல் தீர்வு தொடர்பில் எந்தவொரு தென்னிலங்கை வேட்பாளரும் பேசப் போவதில்லை நானும் பேசப்போவதில்லை என்பதைத் தானே அவர் கூறிச் சென்றிருக்கின்றார்.

இந்தத் தகவலை கூறும்போதே, தமிழ் கட்சிகளால் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த முடியாதென்றும் கூறியிருக்கின்றார் என்றால் ஒன்றில், ரணில் தன்னை விட்டால் உங்களுக்கு வேறு தெரிவில்லை என்கிறாரா அல்லது தங்களை தவிர்த்து மாற்று திட்டமொன்றை முன்னெடுக்கக்கூடிய வல்லமையுடன் தமிழ் கட்சிகள் இல்லையென்று கூறுகின்றாரா? அவரால் இந்தளவு உறுதியாக எவ்வாறு கூற முடிகின்றது? ஒரு தென்னிலங்கை அரசியல்வாதி எவ்வாறு தமிழ் கட்சிகளின் இயலுமை பற்றி இந்தளவு உறுதியாகப் பேச முடிகின்றது? இதற்கு யார் காரணம்? பதினைந்தாவது முள்ளிவாய்க்கால் நினைவுகூரலுக்கு பின்னர் கூட ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும் என்னும் எண்ணம் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் மத்தியில் வரவில்லை.

அனைத்துக் கட்சிகளுமே தங்களுக்கான பாராளுமன்ற கதிரைகளை எண்ணுகின்றனவே தவிர தமிழர் அரசியலை எவ்வாறு பலம்வாய்ந்த நிலையில் முன்னெடுக்க முடியுமென்று எண்ணவில்லை. இதன் காரணமாகவே ரணில் விக்கிரமசிங்கவால் தமிழ் கட்சிகள் பற்றி இவ்வாறு பேச முடிகின்றது.

ஒருவேளை ரணில் எவர்மீது நம்பிக்கை வைக்காது விட்டாலும் கூட, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) மீது அதிக நம்பிக்கை வைத்திருக்கக்கூடும். ஏனெனில், கடந்த பதினைந்து வருடங்களாக எந்தவோர் இணக்க முயற்சிக்கும் காங்கிரஸ் ஒத்துவரவில்லை.

இப்போதும் கூட தமிழ் சிவில் சமூக அமைப்புகளிடம் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை பொதுவெளிகளில் எதிர்ப்பதில்லை என்று உறுதிமொழி வழங்கிவிட்டு அதற்கு மாறாக பொதுவெளிகளில் எதிர்த்தும் விமர்சித்தும் வருகின்றனர்.

அரசியல் தீர்வு பற்றி பேச வேண்டியதில்லை என்றால் ஜனாதிபதித் தேர்தலின் போது, எந்த அடிப்படையில் தமிழ் மக்கள் ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்கு வாக்களிப்பது? தமிழ் மக்களை எந்த அடிப்படையில் வாக்களிக்குமாறு தமிழ் கட்சிகள் கோரப் போகின்றன? அரசாங்கத்துடன் இருக்கின்ற கட்சிகள் அதனை கோர முடியும். ஏனெனில் அவர்கள் அரசியல் தீர்வு தொடர்பில் பேசவில்லை ரணில் என்ன கூறுகின்றாரோ அது தான் அவர்களுக்கான தாரக மந்திரமாகும்.

ஆனால், தமிழ்த் தேசிய கட்சிகள் அவ்வாறு செயல்பட முடியுமா? அவ்வாறு செயல்பட்டால் உங்களுக்கும் அரச ஆதரவு கட்சிகளுக்கும் உள்ள வேறுபாடு என்ன? தமிழ் பொது வேட்பாளரை எதிர்ப்போர் விமர்சிப்போர் இப்போது கூறுங்கள், எந்த அடிப்படையில் தமிழ் மக்கள் தென்னிலங்கை வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிப்பது? பகிஷ்கரிப்புப் பற்றி பேசுவதில் பயனில்லை. அதுவும் தமிழ் மக்களை ஒரு தமிழ் பொது வேட் பாளரை நோக்கி திரட்ட முடியுமா தாங்கள் கூறு வதை மக்கள் செவிமடுப்பார்களா என்னும் சந்தேகத்திலிருந்து எழும் ஒன்று தான்.ஜனநாயக கட்சி ஒன்றின் பகிஷ்கரிப்பு கோரிக்கையானது அடிப்படையில் ஓர் அரசியல் இயலாமையாகும்.

# இலங்கையை விசேட கண்காணிப்புப் பட்டியலில் சேர்க்குமாறு பைடன் அரசிற்கு பரிந்துரை

மத சிறுபான்மையினருக்கு எதிராக பௌத்த பிக்குகளால் தூண்டப்பட்ட ஒடுக்குமுறைகளைத் தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் தவறியிருக்கிறது. இலங்கையின் மதச்சுதந்திரம் தொடர்பான வருடாந்த அறிக்கையில் அமெரிக்க ஆணைக்குழு சுட்டிக் காட்டும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பௌத்த பிக்குகளால் மத சிறுபான்மையினருக்கு எதிராகத் தூண்டப்பட்ட அமைதியின்மை மற்றும் வன்முறைகளைத் தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் தவறியிருப்பதாக தமது வருடாந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கும் சர்வதேச மதச் சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக் குழு, மதச் சுதந்திரத்துடன் தொடர்புடைய விவகாரத்தில் இலங்கையை விசேட கண்காணிப்புப் பட்டியலில் சேர்க்குமாறு ஜோ பைடன் தலைமையிலான அரசாங்கத்துக்குப் பரிந்துரை செய்துள்ளது.



2023ஆம் ஆண்டில் சர்வதேச நாடுகளின் மதச்சுதந்திரப் போக்கு எத்தகைய மட்டத்தில் காணப்பட்டது, அந்நாடுகளின் மதச்சுதந்திர நிலைவரம் தொடர்பில் அமெரிக்க அரசாங்கம் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பன உள்ளடங்கலாக மதச் சுதந்திரம் தொடர்பில் விரிவான தகவல்களை உள்ளடக்கிய 102 பக்க வருடாந்த அறிக்கையை மதச்சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக்குழு வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையில் இலங்கையின் நிலைவரம் குறித்து சுட்டிக் காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

இலங்கையின் மதச்சுதந்திர நிலைவரம் 2023இலும் தொடர்ந்து பின்னடைவை சந்தித்தது. இலங்கை அரசாங்கம் மத சிறுபான்மையினரை தொடர்ச்சியாக ஒடுக்கியும், அச்சுறுத்தியும் வந்திருப்பதுடன், சில வேளைகளில் அவர்களது வழிபாட்டுத் தலங்களுக்குள் பிரவேசிப்பதற்கு அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

தேவாலயங்களைப் பதிவு செய்வதில் கிறிஸ்தவ சமூகம் சிக்கல்களுக்கு முகங்கொடுத்தது. அது மாத்திரமன்றி மத சிறுபான்மையினரை இலக்கு வைப்பதற்கும், கண்காணிப்பதற்கும், தடுத்து வைப்பதற்கும் அரசாங்கம் அடக்குமுறைச் சட்டங்களைப் பயன்படுத்தியது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களின் பின்னர் குறிப்பாக முஸ்லிம்களைக் கைது செய்வதற்கும், தடுத்து வைப்பதற்கும் பயன்படுத்தப்பட்ட பரந்துபட்ட அதிகாரங்களைக் கொண்ட பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

2023ஆம் ஆண்டு முழுவதும் பயங்கரவாத தடைச்சட்டம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயச்சட்டம் (ஐ.சி.சி.பி.ஆர்) ஆகியவற்றின் கீழ் நபர்களைப் பலவந்தமாக தடுத்து வைத்ததன் ஊடாக இலங்கை அரசாங்கம் மதச் சுதந்திரத்தை வெகுவாக மட்டுப்படுத்தியது. புத்த பெருமானின் புனித தந்த தாது அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டதாகக ˙கூறி 2023 ஜனவரியில் யூ டியுப் பதிவரான சேபால் அமரசிங்க கைது செய்யப்பட்டார். அதே போன்று பௌத்த மற்றும் கிறிஸ்தவ மதங்களை அவமதித்தாகக் கூறி நகைச்சுவைப் பேச்சாளரான நடாஷா எதிரிசூரிய 2023 மே மாதம் ஐ.சி.சி.பி.ஆர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். அதேவேளை கடந்த ஆண்டு முழுவதும் தொல்பொருள் திணைக்களமானது பௌத்த பிக்குகள் மற்றும் ஏனைய அரச கட்டமைப்புக்களுடன் ஒன்றிணைந்து பௌத்த விகாரைகளை நிர்மாணிப்பதற்காக வட, கிழக்கு மாகாணங்களில் இந்து மற்றும் முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகளை ஆக்கிரமித்தது.

2023 மார்ச்சில் பௌத்த பிக்குகள் மற்றும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் இணைந்து திருகோணமலையில் புத்தர் சிலையொன்றை நிறுவுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். அதற்கு எதிராகப் போராட்டம் மேற்கொண்ட தமிழ், முஸ்லிம்களை சுட்டுத்தள்ளுவோம் எனக்கூறி அச்சுறுத்தினர். அடுத்ததாக குருந்தூர்மலை ஆலய விவகாரத்தில் 2022ஆம் ஆண்டு நீதிபதி ரி.சரவணராஜாவினால் வழங்கப்பட்ட உத்தரவு 2023 செப்டெம்பரில் தொல்பொருள் திணைக்களத்தினால் மீறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து உயிரச்சுறுத்தல் எனக் குறிப்பிட்டு பதவியை இராஜினாமா செய்த நீதிபதி சரவணராஜா, நாட்டை விட்டு வெளியேறினார். அது மாத்திரமன்றி பல்வேறு சந்தர்ப்பங்களில் பௌத்த பிக்குகளால் மத சிறுபான்மையினருக்கு எதிராகத் தூண்டப்பட்ட அமைதியின்மை மற்றும் வன்முறைகளைத் தடுப்பதற்கு அரசாங்கம் தவறியிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில் மதச்சுதந்திரத்துடன் தொடர்புடைய விவகாரத்தில் இலங்கையை விசேட கண்காணிப்புப் பட்டியலில் சேர்த்தல், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு அல்லது (22ம் பக்கம் பார்க்க)


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com




# தமிழ்ப் பொது வேட்பாளர் தமிழ்ப் பொது நிலைப்பாட்டின் குறியீடு!

**கட்டுரையாளர்**
**– நிலாந்தன் –**

தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கும் சிவில் சமூகங்களின் கூட்டிணைவு யாராலோ இயக்கப்படுகிறது என்று ஒரு சந்தேகத்தை சில கட்சிகளும் சில ஊடகங்களும் பெரிதாக்கி வருகின்றன. மேற்படி சிவில் சமூகங்களின் கூட்டிணைவு வவுனியாவில் கூடிய பொழுது அந்தக் கூட்டத்துக்கு யாரோ நிதி உதவி வழங்கியிருப்பதாகக் கூறப்படுவது சரியா?

சிவில் சமூகங்களின் கூட்டிணைவைச் சேர்ந்தவர்கள் தரும் தகவல்களின்படி வவுனியா தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின் அங்கே ஓர் உண்டியல் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த உண்டியலில் கூட்டத்தில் பங்கு பற்றிய அனைவரையும் தங்களால் இயன்ற நிதிப் பங்களிப்பைச் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அக்கூட்டத்தில் பங்கு பற்றிய மதத் தலைவர்களும் உட்பட பெரும்பாலான குடிமக்கள் சமூகப் பிரதிநிதிகள் தங்களால் இயன்ற பங்களிப்பை நல்கியியிருக்கிறார்கள். மண்டபத்துக்குரிய வாடகையைக் கூட ஒரு சிவில் சமூகப் பிரதிநிதிதான் வழங்கியிருக்கிறார். அந்த உண்டியலில் சேர்க்கப்பட்ட தொகை மொத்தச் செலவில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்குக்குக் கிட்ட வரும் என்று சம்பந்தப்பட்டவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் அந்தக் காசை யாரோ ஒரு வெளிநாடு வழங்கியதா என்ற சந்தேகம் சில தரப்புகளால் எழுப்பப்படுகிறது. இக்கேள்விக்கு பதிலாக சில கேள்விகளையே திருப்பி கேட்கலாம்.

முதலாவது கேள்வி இக்குற்றச்சாட்டை முன் வைப்பவர்கள் அதற்குரிய ஆதாரங்களை வெளிப்படுத்துவார்களா?

இரண்டாவது கேள்வி, வவுனியா தீர்மானத்தை நிறைவேற்றிய குடிமக்கள் சமூகங்கள் தமது தீர்மானத்தில் எதனைக் கூறுகின்றன? தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டப் போவதாகக் கூறுகின்றன. அப்படியென்றால் தமிழ் மக்கள் இப்பொழுது ஒரு தேசமாக இல்லையா?

இல்லை. தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரள விடாது பிரிக்கும் சக்திகள் பலமடைந்து வருகின்றன என்பது தான் உண்மை. தமிழ் மக்களின் தாயகத்தை வடக்கு கிழக்காக பிரிப்பதற்கு உழைக்கும் சக்திகள் கிழக்கில் வாக்கு பலத்தோடு மேலெழுந்துள்ளன. அதே சமயம் தமிழர் தாயகம் எங்கும் தமிழ் மக்களைக் கட்சிகள் பிரிக்கின்றன. கட்சி ஆதரவாளர்களாக தமிழ் மக்கள் பிரிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

ஒரு கட்சி எதிர்க் கட்சிக்காரர்களை அரசாங்கத்தின் அடிவருடிகள் அல்லது துரோகிகள் அல்லது கைக்கூலிகள் என்றெல்லாம் வர்ணிக்கின்றது. இவ்வாறு தமது அரசியல் எதிரிகளை ஒருவர் மாறி ஒருவர் துரோகியாகச் சித்தரிப்பதன் மூலம் தமிழ் மக்கள் துரோகிகளாகவும் தியாகிகளாகவும் பிரிக்கப்படுகின்றார்கள்.

இது தவிர தீவிர இந்து மத நிலைப்பாட்டைக் கொண்ட தரப்புக்களால் மதப் பிரிவுகள் ஊக்குவிக்கப்படுகின்றன. இந்தப் பிரிவுகளைத் தாண்டி தமிழ் மக்களை ஒன்றாக்க வேண்டிய கட்சிகள் தங்களுக்கு இடையேயும் ஒற்றுமையாக இல்லை மட்டுமல்ல, கட்சிகளுக்குள்ளேயும் உடைவுகள் வந்து விட்டன.

இப்படிப் பார்த்தால் தமிழ் மக்களைப் பிரிக்கும் சக்திகள் தான் தாயகத்தில் பலமாகக் காணப்படுகின்றன. அப்படித் தான் புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும். அங்கேயும் இறந்தவர்களை நினைவு கூரும் விடயத்தில் தமிழர்கள் இரண்டாகி நிற்கிறார்கள். அது மட்டுமல்ல இறந்தவர்களை உயிர்பிக்கும் விடயத்திலும் தமிழ் மக்கள் இரண்டாக நிற்கிறார்கள். தாயகத்தில் உள்ள தமிழ் மக்களை கலந்து பேசாமல் புலம் பெயர்ந்த தமிழர் அமைப்புக்கள் சில இமாலய பிரகடனத்தை வெளியிடுகின்றன.

இப்படியாக தாயகத்திலும் புலம்பெயர்ந்த பரப்பிலும் தமிழர்கள் தொடர்ந்து பிரிக்கப்படுகிறார்கள். இத்தகைய பொருள்படக் கூறின் தமிழ் மக்களைத் தேசமாகத் திரட்டுவதற்குரிய சக்திகள் பலவீனமாக இருக்கின்றன என்று தான் கூற வேண்டும். அதனால் தான் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்ட வேண்டும் தமிழ் சக்தியை ஒரு மையத்தில் குவிக்க வேண்டும் தமிழ் பலத்தை ஒரு மையத்தில் குவிக்க வேண்டும் என்று குடிமக்கள் சமூகங்கள் கேட்கின்றன. அவ்வாறு தமிழ் மக்களை ஒரு மையத்தில் திரட்டுவது தமிழ் மக்களுக்கு நல்லதா கெட்டதா?

ஆனால் சில அரசியல்வாதிகள் கூறுகிறார்கள், அவ்வாறு தமிழ் மக்களைத் திரட்டும் நடவடிக்கைகளுக்கு பின்னணியில் ஏதோ ஒரு தூதரகம் அல்லது வெளிநாடு இருப்பதாக. இப்பொழுது மேலும் ஒரு அடிப்படைக் கேள்வியைக் கேட்கலாம். உலகில் ஒரு மக்கள் கூட்டத்தை –அது சிறியதோ பெரியதோ– ஆள நினைக்கின்ற அல்லது தோற்கடிக்க நினைக்கின்ற அல்லது கையாள நினைக்கின்ற வெளிநாடுகள் அந்த மக்கள் கூட்டத்தை பிரித்துப் பிரித்துக் கையாளுமா? அல்லது சேர்த்துக் கூட்டிக்கட்டிக் கையாளுமா?

அதற்கு ஆங்கிலத்தில் டிவைட் அண்ட் ரூல் என்ற கோட்பாடு உண்டு. எல்லாப் பேரரசுகளும் தமக்கு அருகே உள்ள சிறிய நாடுகளை பிரித்துத் தான் கையாண்டன. அப்படிப் பார்த்தால் ஒரு மக்கள் கூட்டத்தைக் கையாள முற்படும் எல்லா வெளித் தரப்புகளும் அந்த மக்கள் கூட்டத்தை எப்படி பல்வேறு கூறுகளாகப் பிரிக்கலாம் என்று தான் சிந்திக்கும். ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள சில கட்சிகள் கூறுகின்றன, தமிழ் மக்களைப் பிரிக்கும் சக்திகளுக்கு எதிராக செயல்படுவது ஒரு வெளிநாட்டு நிகழ்ச்சி நிரல் என்று. உலகிலேயே ஐக்கியம் அல்லது ஒற்றுமை எனப்படுவதனை ஒரு வெளிநாட்டுச் சதி என்று சந்தேகிக்கும் மக்கள் கூட்டமாக ஈழத் தமிழர்கள் மாறி விட்டார்கள்.

2009க்குப் பின்னரான தமிழ்க் கூட்டு உளவியலின் அடுத்த கட்ட வீழ்ச்சி இது. 2009க்குப் பின்னரான தமிழ்க் கூட்டு உளவியல் எனப்படுவது ஆறாக் காயங்களும் ஆறாத் துயரங்களும் நிறைந்த கொந்தளிப்பான ஒரு கூட்டு மனோ நிலை. கொந்தளிப்பான மனோநிலை காரணமாக தமிழ் மக்கள் யாரைத் தங்களுடைய பிரதிநிதிகளாகத் தெரிவு செய்கின்றார்களோ அவர்களையே மிகவும் கீழ்த்தரமாக விமர்சித்து வருகிறார்கள். தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள எல்லா தலைவர்களின் மீதும் பெட்டி கை மாறிய குற்றச்சாட்டு அல்லது மதுபானக் கடைக்கான லைசன்ஸ் வாங்கிய குற்றச்சாட்டு அல்லது தூதரகங்களிடம் மாதாந்தச் சம்பளம் பெறுவதான குற்றச்சாட்டு போன்ற பல்வேறு வகைப்பட்ட குற்றச்சாட்டுகளும் உண்டு. அப்படியென்றால் இவ்வளவு குற்றச் சாட்டுகளையும் அவர்கள் மீது வைத்துக் கொண்டு ஏன் அவர்களை தலைவர்களாக தெரிவு செய்தார்கள்? கடந்த 15 ஆண்டுகளிலும் தமிழ் மக்கள் மத்தியில் விமர்சனத்திற்கு இடமற்று ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜன வசியம் மிக்க தலைவர் என்று யார் உண்டு? பதவியேற்ற புதிதில் விக்னேஸ்வரனுக்கு ஏதோ ஒரு ஜனவசியம் இருந்தது. ஒரு பண்பாட்டுத் தோற்றமும் இருந்தது. ஆனால் இப்பொழுது அது இல்லை. இப்பொழுது அரங்கில் ஜன வசியம் மிக்க தலைவர்கள் அனேகமாக இல்லை என்று ஒரு நிலை.



இந்த வெற்றிடத்தை மிக ஆழமாக வியாக்கியானம் செய்தால் தமிழ் மக்களை ஒன்று திரட்டி வழி காட்ட வல்ல கவர்ச்சியான தலைவர்கள் யாருமே இல்லை என்று பொருள். இது மிகவும் பாரதூரமான ஒரு வெற்றிடம். கடந்த 15 ஆண்டு காலத் தேர்தல் அரசியலானது தமிழ் மக்களை தங்களுடைய பிரதிநிதிகளை நம்பாத ஒரு மக்கள் கூட்டமாக ஒருவர் மற்றவரைச் சந்தேகிக்கும் ஒரு மக்கள் கூட்டமாக் எல்லாப் புதிய நகர்வுகளுக்கும் பின்னால் சூழ்ச்சி கோட்பாடுகளைத் தேடி அலையும் ஒரு மக்கள் கூட்டமாக மாற்றி விட்டதா?

இவ்வாறு தமிழ் மக்கள் அவிழ்த்து விட்ட பாக்கு மூட்டையைப் போல சிதறிப் போவதைத் தடுப்பதற்காகத் தான் குடிமக்கள் சமூகங்கள் முதலில் ஒன்று திரண்டு வவுனியாத் தீர்மானத்தை நிறைவேற்றின. நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை முன்னிறுத்துவதன் மூலம் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்ட வேண்டும் என்ற பெருவிருப்பத்தை சிவில் சமூகங்கள் வவுனியா தீர்மானத்தில் வெளிப்படுத்துகின்றன.

சிவில் சமூகங்களின் இந்த விருப்பத்தை உள்வாங்கி அரசியல் கட்சிகள் முதலில் தங்களுக்கு இடையிலான வேறுபாடுகளைக் களைந்து தங்களுக்கு இடையே விசுவாசமான ஐக்கியத்தைக் கட்டி எழுப்ப வேண்டும். அதன் மூலம் தமது வாக்காளர்கள் மத்தியில் தங்கள் மதிப்பையும் அந்தஸ்தையும் உயர்த்தி கொள்ள வேண்டும். அடுத்த கட்டமாக கட்சிக்காக வாக்கு சேர்ப்பதற்கு பதிலாக தேசத்துக்காக வாக்குச் சேர்க்கும் ஒரு கட்சி அரசியலைக் கட்டி எழுப்ப முன் வர வேண்டும். அப்பொழுதுதான் தமிழ் மக்கள் முழுமையான பொருளில் ஒரு தேசமாகத் திரள்வார்கள்.தமிழ் மக்கள் மத்தியில் இப்பொழுது நிலவும் அவநம்பிக்கைகளையும் கசப்பையும் வெறுப்பையும் குற்றச் சாட்டுகளையும் சூழ்ச்சி கோட்பாடுகளையும் தோற்கடிப்பதற்கு ஒரே வழி விசுவாசமான உருகிப் பிணைந்த ஐக்கியம் தான்.

அதை எந்த ஒரு வெளிநாடும் காசு கொடுத்துச் செய்யப் போவதில்லை. எந்த ஒரு அனைத்துலக அரசு சார்பற்ற நிறுவனமும் அதற்கு நிதி உதவி வழங்கப் போவதில்லை. அது ஒரு சதியல்ல அது ஒரு புரொஜக்ட் அல்ல. அது ஒரு பெருஞ் செயல். அது தமிழ் மக்கள் தாங்களாகவே செய்ய வேண்டிய ஒன்று. அதைத் தமிழ் மக்களைத் தவிர வேறு யாருமே செய்ய முடியாது. அதைத் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள கட்சிகளும் குடிமக்கள் சமூகங்களும் புத்திஜீவிகளும் ஊடகங்களும் மத நிறுவனங்களும் ஒன்றிணைந்து செய்ய வேண்டும்.

ஒரு காலம் உலகத்தையே திரும்பி பார்க்க வைத்த உன்னதமான தியாகங்களையும் வீரச் செயல்களையும் செய்த ஒரு மக்கள் கூட்டம் தான் ஈழத் தமிழர்கள். மகத்தான சித்தர்களையும் ஞானிகளையும் சான்றோர்களையும் அறிஞர்களையும் நிறுவன உருவாக்கிகளையும் கலைஞர்களையும் உற்பத்தி செய்த ஒரு மக்கள் கூட்டம்த ான் ஈழத் தமிழர்கள். இப்பொழுது புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் இரண்டாம் தலைமுறையானது ஏனைய சமூகங்களைக் கூர்ந்து கவனிக்க வைக்கும் கவர்ச்சியான வெற்றிகளைப் பெறத் தொடங்கி விட்டது.

தமிழ் மக்கள் பண்பாட்டுச் செழிப்பு மிக்கவர்கள். பண்பாட்டுச் செழிப்பு மிக்க ஒரு நடுத்தர வர்க்கத்தை கொண்ட மக்களை எந்தப் புறத்தி யாரும் தோற்கடித்து விட முடியாது. பண்பாட்டுச் செழிப்பு மிக்க நடுத்தர வர்க்கத்தை கொண்ட ஒரு மக்கள் கூட்டத்தை இலகுவாக தோற்கடித்து விட முடியாது என்பதனை அமில்கார் கப்றால் (22ம் பக்கம் பார்க்க)

## 14வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி துரையப்பா மங்கையற்கரசி

புளியங்கூடல் தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி மங்கையற்கரசி துரையப்பா அவர்களது 14வது ஆண்டு நினைவு நாள் 31 மே 2024 வெள்ளிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாகவும் தந்தையார் திரு கார்த்திகேசு துரையப்பா அவர்களது நினைவாகவும் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி மங்கையற்கரசி துரையப்பா திரு கார்த்திகேசு துரையப்பா இணையர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அன்னார்களது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# 13வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! யூன் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

13 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 13 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

18 மே 2024 - 31 மே 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு கணேசன் வேலுப்பிள்ளை

அனலைதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மில்ரன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கணேசன் வேலுப்பிள்ளை (இளமுழக்கம் ஆசிரியர்) அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 23 மே 2024 வியாழக்கிழமையாகும் அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, பாரதி, செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கணேசன் வேலுப்பிள்ளை அவர்களை நினைவு கூரும் அன்னாரின் குடும்பத்தினருடன் மூன்று இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பேரம்பலம் முருகேசபிள்ளை

புளியங்கடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு பேரம்பலம் முருகேசபிள்ளை அவர்களின் நான்காவது ஆண்டு நினைவு நாள் 28 மே 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பேரம்பலம் முருகேசபிள்ளை அவர்களை நினைவு கூரும் அன்னாரது குடும்பத்தினர் நண்பர்களுடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தனலெட்சுமி சண்முகலிங்கம்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தனலெட்சுமி சண்முகலிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 22 மே 2024 புதன்கிழமை அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தனலெட்சுமி சண்முகலிங்கம் அவர்களை நினைவு கூரும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இரத்தினம் சபாரெத்தினம்

காரைநகரைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வதிவிடமாகவும் கனடாவை வாழ் விடமாகவும் கொண்டிருந்த திருமதி இரத்தினம் சபாரெத்தினம் அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாள் 25 மே 2024 ஆகும். அன்றைய தினத்திற்காக அன்னாரது குடும்பத்தினர் 27 மே 2024 திங்கட்கிழமை அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி இரத்தினம் சபாரெத்தினம் அவர்களை நினைவு கூரும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு அருளானந்தம் இராசலிங்கம்

சுதுமலை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு அருளானந்தம் இராசலிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 26 மே 2024 ஞாயிற்றுக் கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு அருளானந்தம் இராசலிங்கம் அவர்களை நினைவு கூரும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி

வேலணை தலைகாட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாள் 28 மே 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி அவர்களை நினைவு கூரும் அன்னாரின் குடும்பத் தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## நினைவழியா நினைவஞ்சலிகள்



### திரு செல்லையா சோமசுந்தரம்

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த திரு செல்லையா சோமசுந்தரம் திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி ஆகியோரது நினைவு நாளையொட்டி கனடாவில் வசிக்கும் அன்னாரது குடும்பத்தினர் 29 மே 2024 புதன்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு செல்லையா சோமசுந்தரம் திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி இணையரை நினைவுகூரும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்





18 மே 2024 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பிரசாந்தன் சாமினி தம்பதிகளின் செல்வப்புதல்வி வெண்பாவின் 6வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வி வெண்பா பிரசாந்தன் தனது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




18 மே 2024 சனிக்கிழமை மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவனேஸ்வரி சிவானந்தன் அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




22 மே 2024 புதன்கிழமை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தனலெட்சுமி சண்முகலிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




23 மே 2024 வியாழக்கிழமை அனலைதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மில்ரன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த முன்னாள் இனமுழக்கம் ஆசிரியர் - அனலை செழியன் என்று அன்பாக அழைக்கப்பட்ட திரு கனேசன் வேலுப்பிள்ளை அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




23 மே 2024 வியாழக்கிழமை அனலைதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மில்ரன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த முன்னாள் இனமுழக்கம் ஆசிரியர் - அனலை செழியன் என்று அன்பாக அழைக்கப்பட்ட திரு கனேசன் வேலுப்பிள்ளை அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




23 மே 2024 வியாழக்கிழமை அனலைதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மில்ரன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த முன்னாள் இனமுழக்கம் ஆசிரியர் - அனலை செழியன் என்று அன்பாக அழைக்கப்பட்ட திரு கனேசன் வேலுப்பிள்ளை அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




23 மே 2024 வியாழக்கிழமை புங்குடுதீவு 11ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திருமதி யோகநாயகி அமரசிங்கம் அவர்களது 80வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி யோகநாயகி அமரசிங்கம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்





24 மே 2024 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ரஜீதன் பிரசாந்தி இணையர்களது திருமண நன்நாளை நினைத்து மகிழ்ச்சி கொள்ளும் தினமாகும். அன்றைய நாளுக்காக இணையர்கள் 25 மே 2025 சனிக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




26 மே 2024 ஞாயிற்றுக்கிழமை சுதுமலை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு அருளானந்தம் இராசலிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




25 மே 2024 சனிக்கிழமை காரைநகரைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி இரத்தினம் சபாரெத்தினம் அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து 27 மே 2024 திங்கட்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




28 மே 2024 செவ்வாய்க்கிழமை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பேரம்பலம் முருகேசபிள்ளை அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




28 மே 2024 செவ்வாய்க்கிழமை வேலணை தலையாட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து புனிதபூமி பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




29 மே 2024 புதன்கிழமை தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்களான திரு சோமசுந்தரம் செல்லையா திருமதி செல்வநாயகி சோமசுந்தரம் இணையர்களது நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் இணையர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




30 மே 2024 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி மலரவன் கேசிகா இணையர்கள் சீரடிபாபா உபயமாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




31 மே 2024 வெள்ளிக்கிழமை புளியங்கூடல் தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துரையப்பா மங்கையற்கரசி அவர்களது 14வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
AJITH SABARATNAM President
Cell: 647.401.5800
email: ajithsaba@gmail.com
125 Topflight Dr, 2nd floor
Mississauga ON. L5S 1Y1
Tel: 416.439.2800

Cash Point
PAWN BROKERS
$1000 $20/month
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000

உங்கள் அனைத்து விதமான சட்ட ஆலோசனைகளுக்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்!
SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION
T: 416-949-0404
F: 416-948-0303
Vivekananthan Sasitharan - Rajabalini Sasitharan
Barristers, Solicitors & Notaries Public
10 Milner Business Court, Suite # 709, Scarborough Ontario, M1B 3C6

நியூ ரங்கனாஸ்
தங்கச்சுரங்கம்
சிங்கப்பூர், டுபாய் தங்க நகைகளை
கோடைகால சிறப்புத் தள்ளுபடி விலையில்
கொள்வனவு செய்ய அரிய சந்தர்ப்பம்.
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
Markham & Steeles,Yellow Building,6055 Unit C-102
Scarbrough,ON M1X 0A7 - Canada. 647 702 2159

Outstanding Agent for Outstanding Results.
In Your Neighbourhood Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
DIR: 416-333-6115
nanohomes@gmail.com
RE/MAX Excel Realty Ltd., Brokerage

Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மடம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும்
குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
1.5% முதல் 2% வட்டி மட்டுமே (per month)
416-757-0034 • 416-994-3861
105A - 2425 Eglinton Ave, E, Scarborough. ammapawnbroker@gmail.com

VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
905.769.1509 | 1.888.674.7770
vibranthospitalitygroup.com

FUNERAL ARRANGEMENTS OF YOUR LOVED ONES
Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE
Funeral Director
S. Christeen
416-258-6759

N.K.S DRAPERY & BLINDS FABRIC
• Custom Made Vertical Blinds • Venetian Blinds • Draperies • Curtain • Shutters • Roller Blind
Contact: Ketha
416-321-6420
210 Silver star Blvd, Unit # 825, Scarborough, ON M1V 5J9
Email:Info@nksdrapery.com Web:www.nksdrapery.com

MORTGAGE LOAN
ALMOST ALL SERVICES AVAILABLE
J.R.B UNIVERSAL INC.
R.R.Rajkumar
Call for More Info
647-289-6164

CSC Credit Solution Centre
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
Main Branch Scarborough 309-80 Corporate Dr Scarborough, ON M1H3G5
Mississauga Branch 45-2355 Derry Road Mississauga, ON L5S1V6
creditsolutioncanada.com
Tel: 416.439.0224 Fax: 416.439.0226

Century 21 Innovative Realty Inc.
Jude GNANENDRAN
Sales Representative
416-827-2347 Direct
jude.gnanendran@century21.ca
www.century21jude.com
2250 Markham Road, Unit 3, Toronto ON M1B 2W4
Office: 416-298-8383 Fax: 416-298-8303

Chapel Ridge
Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman, B.Eng
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

SR Reliance Auto Collision Inc.
Complete Auto Body Repairs & Painting
Rasan
Proprietor
Tel: 416-822-4272
Fax: 647-352-4272
Email: atsrasan@gmail.com
15 Granger Ave. Toronto, ON. M1K 3K9

747 AUTOPARTS
Need Auto Parts? Look No Further!
Markham Rd: 905-471-4447
Markham - Heritage Rd: 905-294-5773
Newmarket - Davis Rd: 905-836-7447
Scarborough - Lawrence Ave: 416-285-4447
Scarborough - Milliken Blvd: 416-335-7747
Ajax - Fuller Road: 905-686-4447
www.747autoparts.com

விழா சிறப்புற வாழ்த்துகிறோம்
Netwyn www.netwyn.com
Kula Sellathurai
CEO
10 Thornmount Drive
Scarborough, ON M1B 3J4
D: 416.902.9462
O: 416.906.1414
kula@netwyn.com

அன்பு இல்லக் குழந்தைகளுக்காக
ஈழநாடு பத்திரிகை நடாத்தும் விழா
சிறப்புற வாழ்த்துகின்றேன்.
சாந்தா பஞ்சலிங்கம்
416 200 5470
(முன்னாள் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத் தலைவர்)

காப்புறுதி ஒன்றே!
• Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance
• Mortgage Insurance • Super Visa Insurance • RESP, RRSP and TFSA
Arun KULASINGAM 416.357.2847
Life Insurance Agent
kulasingam33@yahoo.ca

தமிழீழத்தின் மூத்த தேசப்பற்றாளர் **தமிழேந்தல் ஈழவேந்தன்** நினைவரங்கில்



முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்

உங்கள் அபிமான **ஈழநாடு** பத்திரிகை

13வது ஆண்டாக நடாத்தும்

# ஊட்டும் கரங்கள்







# தமிழும் இசையும்

## இராப்போசன விருந்தும்



## இன்பத் தமிழ்ப் பேச்சு

சிறப்புச் சொற்பொழிவாளர், தமிழ் கூறும்
நல்லுலகின் தன்னிகரற்ற பேச்சாளர்,
சொல்லின் செல்வி, மொழி அரசி, , பேராசிரியை

## பர்வின் சுல்தானா

**யூலை 28, 2024**
ஞாயிற்றுக்கிழமை - 5:30PM

**METROPOLITAN CENTRE**
3840 FINCH AVE EAST
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

நட்சத்திரா இசைக்குழுவின் இசையில்
Zee தமிழ் சரிகமப புகழ்

## கோபாலகிருஷ்ணன்

கனேடிய தமிழ்ப் பாடகர்களுடன்
இணைந்து வழங்கும்

## இன்னிசை மாலை

என் இனிய வாசகர்களே! கருணையாளர்களே! கடந்த 12 ஆண்டுகளாக நீங்கள் வழங்கி வருகின்ற ஒத்துழைப்புக்கும் வாரி வழங்கும் நன்கொடைகளுக்கும் மனமார்ந்த நன்றிகள். நீங்கள் வழங்குகின்ற ஒவ்வொரு டொலர்களும் அன்பு இல்லத்தில் வாழும் 423 குழந்தைகளுக்கு சிறப்பான முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாண்டு கனடிய மண்ணில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பொருட்களின் விலையேற்றம், வேலை வாய்ப்புக் குறைவு, பொருளாதார நலிவுகள் காரணமாக எமது நிகழ்வுக்கும் பெருமளவு பணம் தேவைப்படுகின்றது. நீங்கள் ஒரு தரமான நிகழ்வைக் கண்டு களிப்பது மாத்திரமல்ல உங்கள் பணம் ஓர் தர்ம காரியத்திற்கு - 423 குழந்தைகளின் பசிப்பிணி போக்க உதவுகின்றது என்பதை மறவாதீர்கள்.

அன்பர்களே! நீங்கள் முற்கூட்டியே உங்கள் பெயர், விபரங்களை பதிவு செய்வதன் மூலம் செலவுகளை எம்மால் கட்டுப்படுத்த முடியும் என்பதால் உங்கள் பூரண ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்.

**தொடர்புகளுக்கு- ஈழநாடு பரமேஸ்**
416-841-9600 •eelanadu1993@gmail.com

நந்தா NANTHA CATERS
Sri Lankan & Indian Food
BEST CATERS IN TOWN
Catering, Bakery & Take Out
Brimley & Steeles - 4915 Steeles Ave.E | Warden & Finch - 3268 Finch Ave.E
Kippling & Steeles - 5010 Steeles Ave. |
Call 416 NANTHA 1 - 416 626 8421

TECHSOURCE
Computer, Electronics & Cellphones Liquidator
1260 Kennedy Rd, Scarborough, ON
416.757.9111
994 Albion Rd
Etobicoke, ON
647.352.2229

INCOME TAX SERVICE
PERSONAL, SMALL BUSINESS, UNINCORPORATED AND INCORPORATED TAXES, TAXES AND ASSOCIATED SERVICES
THANAM KANAGARATNAM
Tax Analyst
416.298.6781
1080 Tabscott Rd, Unit 5
Scarborough, ON M1X 1E7

வீடு வாங்க, விற்க அல்லது அது சம்பந்தமான
விடயங்கள் அறிய இலவச ஆலோசனைகளுக்கு
உங்கள் நண்பன் ஆனந் தர்மலிங்கம்
ANANTH Tharmalingam
Sales Representative
416.939.9525
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
1265 Morningside Ave, Suite 203 Toronto ON M1B 3V9
Office: 416.287.2222

AJAX CREMATORIUM & VISITATION CENTRE
CALL: DHARMA, B.Com., Licenced Funeral Pre-Planner 647-713-6049

TIMES IRON WORKS INC.
Fabricators & Erectors
Times Metals Sales

# முதலாவது ஆண்டு நினைவஞ்சலி





**குப்பிளானைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த**

**அமரர் உயர்திரு இளையதம்பி கந்தையா**

**(ஓய்வுபெற்ற உதவி வைத்தியர்)**

**திருமதி தங்கமலர் கந்தையா இணையர்கள்**

எம் உயிரோடு கலந்து நின்று எம்மை வாழ வைக்கும் தெய்வங்களே!
எம் உயிரோ கலந்து உணர்வோடு உறைந்து நின்று
உங்கள் நினைவுகளை மீட்டுகின்றீர்கள்!
கலங்கி நிற்கும் எம் மனமதனில் உங்கள் நினைவாலே
சிலை அமைத்து நாம் வாழும் வரை
எம்மோடு தங்கி நின்று நித்தம் உமை தரிசிக்க உத்தரவும் தந்து விடுங்கள்!
எம்மை விட்டுப் பிரிந்தே போனாலும்
எம் உயிரோடு கலந்தே எம் நினைவோடு வாழ்வீரே!
மரணித்தும் மறையாத எம்மைப் பெற்றெடுத்து
வாழ வைத்து அழகு பார்த்த நாம் கண்ட தெய்வங்களே!
எம் உயிரோடு கலந்தே நம் நினைவோடு வாழ்வதனால்
ஓராண்டு போனதாக நாம் உணரவில்லை! - அப்பா!
உங்களோடு அன்பாக வாழ்ந்திருந்த அம்மாவை அழைத்தே
உங்கள் பாசத்தை உணர்த்தி விட்டீர்கள்
இறையருளில் இருவருமே இணைந்தே பயணித்து
ஆத்மா சாந்தி பெற நம் இஷ்ட குலதெய்வமான
குப்பிளான் கேணியடி வைரவரையும் சொக்கர்வளவு சோதிவிநாயகர்
கற்கரை கற்பக விநாயகரையும் வேண்டி நிற்கின்றோம்

உங்கள் நினைவில் வாழும் பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
உறவுகள், நண்பர்கள்

ஓம்சாந்தி! ஓம் சாந்தி! ஓம்சாந்தி!

**தகவல்:- சந்திரன் (மகன்) 647 707 5036 சேகர் (மகன்) 647 886 8938**

# தமிழ்ப் பொது வேட்பாளரை எதிர்ப்பவர்களிடம் சில கேள்விகள்

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் தமிழரசியலில் ஒரு உத்வேகத்தை – momentum– தோற்றுவித்திருக்கிறது என்று கொழும்புமைய ஊடகம் ஒன்றில் ஆசிரியராக இருந்த ஒரு மூத்த ஊடகவியலாளர் தெரிவித்துள்ளார். அதனால்தான் பொது வேட்பாளருக்கு எதிராக கருத்துக்களைத் திரட்டுபவர்கள் அதிகம் ஆவேசமாகவும் உணர்ச்சிகரமாகவும் காணப்படுகிறார்கள். அதில் பல கருத்துக்கள் தர்க்கபூர்வமானவை அல்ல.

தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற தெரிவு அதை எதிர்ப்பவர்களை எந்த அளவுக்கு தற்காப்பு நிலைக்குத் தூண்டியிருக்கிறது என்பதற்கு கடந்த வாரம் வெளிவந்த ஒரு செய்தி நல்ல எடுத்துக்காட்டு. அச்செய்தியில் சம்பந்தர் ஒஸ்லோ பிரகடனம் என்று அழைக்கப்படும் ஆவணத்தை முன்வைத்து கருத்து தெரிவித்திருக்கிறார். 13 சக, எக்கிய ராஜ்ய என்றெல்லாம் உரையாடப்பட்ட ஓர் அரசியல் பரப்பில், இப்பொழுது ஒஸ்லோ ஆவணத்தை முன்னிறுத்த வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தை பொது வேட்பாளர் என்ற தெரிவு ஏற்படுத்தியிருக்கின்றதா?

கடந்த 15 ஆண்டுகளாக ஏன் அந்த ஆவணத்தை முன் வைத்து உரையாடப்படவில்லை? அதை விட முக்கியமாக அந்த ஆவணத்தை அடிப்படையாக வைத்துத்தான் 2015–2018 வரையிலும் ஒரு புதிய யாப்புக்கான இடைக்கால வரைபு தயாரிக்கப்பட்டதா?

முதலில் அந்த ஒஸ்லோ ஆவணத்தைப் பார்க்கலாம்.அது ஒரு பிரகடனம் அல்ல. ஆங்கிலத்தில் Oslo communique என்று தான் காணப்படுகின்றது. தமிழில் அதனை நிலைப்பாட்டு ஆவணம் என்று கூறலாம். அதில் போரில் ஈடுபட்ட இரண்டு தரப்புகளும் ஒரு பொது நிலைப்பாட்டுக்கு வந்திருந்தன. அந்த நிலைப்பாடு பின்வருமாறு... உள்ளக சுய நிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில், தமிழ் பேசும் மக்களுக்கு,தமது வரலாற்று ரீதியிலான பாரம்பரிய வாழ்விடத்தில், ஐக்கிய இலங்கைக்குள் சமஸ்ரி அடிப்படையிலான தீர்வு தொடர்பாக இரு ஆராய இரு தரப்பும் உடன்படுகின்றன.

அதாவது உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஸ்ரி அடிப்படையிலான ஒரு தீர்வை ஆழமாக ஆராய்வது என்றுதான் அங்கு கூறப்பட்டிருக்கிறது. அதே சமயம் அந்த உடன்பாடு எத்தகைய ஓர் அரசியல் சூழலில் எட்டப்பட்டது? அது நோர்வையின் அனுசரணையோடு இணைத்தலைமை நாடுகளால் முன்னெடுக்கப்பட்ட ஒரு சமாதான முயற்சி. அதாவது மூன்றாவது தரப்பு ஒன்றின் அனுசரணையோடு முன்னெடுக்கப்பட்ட ஒரு சமாதான முயற்சி.

இது மிக முக்கியமானது. இலங்கையின் இனப்பிரச்சினை ஒரு உள்நாட்டுப் பிரச்சினை அல்ல. அது ஓர் அனைத்துலகப் பிரச்சினை. உலகில் உள்ள எல்லாத் தேசிய இனப்பிரச்சனைகளும் சாராம்சத்தில் அனைத்துலகப் பிரச்சனைகள் தான். உள்நாட்டு பிரச்சினை ஒன்றில் வெளிநாடுகள் தலையிடும் போது தான் தேசிய இனப்பிரச்சினைகள் உலகின் கவனத்தை ஈர்க்கும் வளர்ச்சிகளைப் பெறுகின்றன. எனவே தேசிய இனப் பிரச்சனைகள் சாராம்சத்தில் அனைத்துலகப் பிரச்சினைகள் தான். அவற்றுக்கு அனைத்துலகத் தீர்வுகள் தான் உண்டு. உள்நாட்டுத் தீர்வுகள் கிடையாது.

திம்புவில் தொடங்கி ஒஸ்லோ வரையிலும் அதுதான் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. கடந்த 15ஆண்டுகளாக ஐநா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களும் அதைத் தான் நிரூபிக்கின்றன. இலங்கை இனப்பிரச்சனைக்கு அனைத்துலகத் தீர்வுதான் உண்டு. மூன்றாவது தரப்பு ஒன்றின் தலையீட்டோடு அந்த தீர்வு உருவாக்கப்பட வேண்டும். எனவே ஒஸ்லோ நிலைப்பாட்டு ஆவணத்தை அதன் அனைத்துலகப் பரிமாணத்துக்குள் வைத்து முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில் பார்த்தால் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மூன்றாவது தரப்பின் கண்காணிப்பின் கீழ் ஓர் உடன்படிக்கைக்கு வர எந்த ஜனாதிபதி வேட்பாளர் தயார்? அவ்வாறு எந்த ஒரு ஜனாதிபதி வேட்பாளராவது தயாராக இருந்தால், ஒரு பொது வேட்பாளருக்கான தேவை இருக்குமா?

எனவே பொது வேட்பாளர் என்ற தெரிவுக்கு எதிராக ஒஸ்லோ நிலைப்பாட்டு ஆவணத்தை முன்வைப்பவர்கள் அந்த விடயத்தில் தென்னிலங்கையில் உள்ள மூன்று பிரதான வேட்பாளர்களில் யார் ஒரு மூன்றாவது தரப்பின் மேற்பார்வையில் தமிழ் மக்களோடு உடன்பாட்டுக்கு வரத்



தயார்? என்பதனை வெளிப்படுத்த வேண்டும். கடந்த மே தினத்தில் கிளிநொச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் உரையாற்றியது போல தமிழ் மக்களோடு அப்படி ஓர் உடன்படிக்கைக்கு வரக்கூடிய தென்னிலங்கை வேட்பாளர் தமிழ்மக்கள் மத்தியில் 100வாக்குகளை பெறலாம். ஆனால் தென்னிலங்கையில் அவர் ஆயிரம் வாக்குகளை இழக்க வேண்டியிருக்கும் என்பது தான் இலங்கைத் தீவின் இன யதார்த்தம். 15ஆண்டுகளின் பின்னரும் அதுதான் இலங்கைத்தீவின் இன யதார்த்தமாக உள்ளது என்பது எத்துணை குரூரமானது?

தமிழ் மக்களோடு மிகச் சாதாரண அடிப்படைகளில் ஓர் உடன்படிக்கைக்கு வரக்கூட எந்த ஒரு தென்னிலங்கை வேட்பாளரும் தயாராக இல்லை. இப்போதுள்ள ஜனாதிபதிதான் ஒஸ்லோ நிலைப்பாட்டு ஆவணம் உருவாக்கப்படுகையில் பிரதமராக இருந்தவர். அவர் இப்பொழுது என்ன கூறுகிறார்? இனப்பிரச்சினையை வடக்கின் பிரச்சினையாகத் தந்திரமாகக் குறுக்குகிறார். இப்பொழுது பொருளாதார நெருக்கடிக்குத் தான் தீர்வு தேவை என்று சூசகமாகக் கூறுகிறார்.

எல்லாவற்றையும் விட முக்கியமாக போலீஸ் அதிகாரம் இல்லாத ஒரு 13ஐத் தரலாம் என்று கூறுகிறார். அதாவது 13மைனஸ். மற்றவர் சஜித் பிரேமதாச அவர் 13பிளஸ் என்று கூறுகிறார். ஒரு தீர்வை முன் வைத்து மூன்றாவது தரப்பு ஒன்றின் மேற்பார்வையின் கீழ் ஒரு பன்னாட்டு உடன்படிக்கைக்கு வர அவர் தயாரா? மூன்றாவது அனுரகுமார. அவர் தமிழ் மக்களுக்கு என்ன தீர்வு என்பதை இதுவரை துலக்கமான வார்த்தைகளில் தெரிவிக்கவில்லை.

எனவே மேற்சொன்ன மூன்று வேட்பாளர்களில் யாருமே தமிழ்மக்களோடு மூன்றாவது தரப்பு ஒன்றின் மேற்பார்வையின் கீழ் உடன்பாட்டுக்கு வரத் தயாராக இருக்கப் போவதில்லை. இப்படிப்பட்டதோர் பின்னணியில் தென்னிலங்கை வேட்பாளர் ஒருவரோடு ஏதோ ஒரு உடன்பாட்டுக்கு வரலாம் என்று கருதும் தரப்புக்கள் தமிழ்மக்களுக்குப் பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்த வேண்டும்.

தென்னிலங்கையில் உள்ள எந்த ஒரு பிரதான வேட்பாளராவது தமிழ் மக்களோடு மூன்றாவது தரப்பு ஒன்றின் கண்காணிப்பின் கீழ் உடன்பாட்டுக்கு வரத் தயாராக இருக்கிறாரா? அது ஒஸ்லோ ஆவணத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியாக இருக்குமா? அல்லது 2015–2018 வரையிலும் கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தோடு இணைந்து உருவாக்கிய ஒரு புதிய யாப்புக்கான இடைக்கால வரைபில் காணப்படும் எக்கிய ராஜ்ஜிய என்ற தீர்வா?

இவற்றுடன் மேலும் ஒரு கேள்வியை கேட்கலாம். கடந்த 15 ஆண்டுகளில் நடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களின் போதும் தமிழ்த் தரப்பின் ஆதரவைப் பெற்ற ஒரே ஒரு வேட்பாளர் – மைத்திரிபால சிறிசேன தான்– வெற்றி பெற்றார். அவர் உருவாக்கிய நல்லாட்சி அரசாங்கம் 2015 ஆம் ஆண்டு ஐநா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 30:1 தீர்மானத்தின்படி நிலைமாறு கால நீதியை நிலைநாட்ட அதாவது பொறுப்புக் கூறலுக்கு ஒப்புக் கொண்டது. அதன்படி ஒரு புதிய யாப்பை உருவாக்கும் நோக்கத்தோடு நாடாளுமன்றம் சாசனப் பேரவையாக மாற்றப்பட்டது. 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் புதிய யாப்பு ஒன்றுக்கான இடைக்கால வரைபு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் அந்த இடைக்கால வரைபின் பெற்றோரில் ஒருவராகிய மைத்திரிபால சிறிசேன அதனைக் காட்டிக் கொடுத்தார்.ஒரு யாப்புச் சதி முயற்சி மூலம் அவர் நல்லாட்சி அரசாங்கத்தைக் கவிழ்க்க முயற்சித்தார். இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால், 2015 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் அவருக்கு வழங்கிய மிக அரிதான ஒரு மக்கள் ஆணைக்குத் துரோகம் செய்தார். அதாவது தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றதால் ஜனாதிபதியாக வந்த ஒருவர் தமிழ் மக்கள் தனக்கு வழங்கிய மக்கள் ஆணைக்குத் துரோகம் இழைத்தார்.

நல்லாட்சிக் காலத்தில் காணிகள் விடுவிக்கப்பட்டன, கைதிகள் விடுவிக்கப்பட்டார்கள் என்று கூறப்படுகிறது. ஆனால் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரான சுமார் 10 ஆண்டுகால வளர்ச்சியில் அவை இயல்பாக ஏற்பட வேண்டிய மாற்றங்கள் தான். ஆனால், மைத்திரியுடனான சமாதானத்தின் இதயம் என்று கூறத்தக்கது, ஒரு புதிய யாப்பை உருவாக்கும் முயற்சி தான். ஆனால் அதைத் தோற்கடித்ததே அவர்தான். இவ்வாறான ஏமாற்றுகரமான 15 ஆண்டுகளின் பின்னணியில் தமிழ்த்தரப்பின் ஆதரவைப் பெற்று ஜனாதிபதியாக வந்த ஒருவர் மைத்திரியைப்போல மஹிந்தவின் வீட்டில் அப்பம் சாப்பிட்டு விட்டு தலைகீழாக நிற்க மாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

மேற்படி கேள்விகளுக்கு பொது வேட்பாளரை எதிர்க்கும் தரப்புகள் தெளிவான விடைகளை வழங்க வேண்டும்.கடந்த 15 ஆண்டுகளிலும் நடந்த எந்த ஒரு பேச்சுவார்த்தை மேசையிலும் தொட்டுக் கூடப் பார்க்கப்படாத ஒஸ்லோ நிலைப்பாட்டு ஆவணத்தை இப்பொழுது மீண்டும் ஞாபகப்படுத்த வேண்டிய தேவை என்ன?

அதைக் குறித்து உரையாட வேண்டிய ஒரு கால கட்டத்தில் அது பற்றி உரையாடப்படவில்லை. தமிழ் மக்களின் நவீன வரலாற்றில் இனப் பிரச்சனையைத் தீர்க்கும் நோக்கத்தோடு அதிகளவு முன்மொழிவுகள் மேசையில் வைக்கப்பட்ட ஒரு காலகட்டமாக 2018–2021வரையிலுமான காலகட்டத்தை குறிப்பிடலாம். 2015–2018 வரையிலும் ஒரு புதிய யாப்பை உருவாக்கும் முயற்சிகள் இடம் பெற்றன. இதன் போது தமிழ்க்கட்சிகளும் தமிழ் மக்கள் பேரவை போன்ற மக்கள் அமைப்புகளும் வெவ்வேறு தீர்வு முன்மொழிவுகளை மேசையில் வைத்தன. தவிர தமிழ் மக்களிடமும் அது தொடர்பாகக் கருத்து அறியப்பட்டது. அந்த யாப்புருவாக்க முயற்சியைத் தான் மைத்திரி குழப்பினார்.

அதன் பின் கோட்டாபய ராஜபக்ஷ ஒரு நிபுணர் குழுவை உருவாக்கினார். தமிழ்த் தரப்பு அங்கேயும் யோசனைகளை முன்வைத்தது. இவ்வாறாக நவீன தமிழ் வரலாற்றில் தமிழ் மக்கள் அதிகளவு தீர்வு முன்மொழிவுகளை முன்வைத்த அக்கால கட்டத்தில் ஒஸ்லோ நிலைப்பாட்டு ஆவணத்தைக் குறித்து யாரும் உரையாடவில்லை. இப்பொழுது மட்டும் ஒரு பொது வேட்பாளருக்கு எதிராக ஏன் அந்த ஆவணம் தூசு தட்டி எடுக்கப்பட்டிருக்கிறது? விடுதலைப் புலிகள் இயக்கம் சம்பந்தப்பட்ட ஒரு நிலைப்பாட்டு ஆவணத்தை முன்னிறுத்தினால் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற தெரிவைப் பலவீனப்படுத்தலாம் என்று சிந்திக்கப்படுகின்றதா?

ஆனால் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற தெரிவை முன்வைக்கும் சிவில் சமூகங்கள் தென்னிலங்கையில் உள்ள எந்த ஒரு ஜனாதிபதி வேட்பாளரையும் தாம் நம்பவில்லை என்றுதான் கூறுகின்றன. ஜனாதிபதித் தேர்தலை ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தல் என்ற அடிப்படையில் அவை நிராகரிக்கின்றன. இது ஏறக்குறைய தேர்தலைப் புறக்கணிக்கும் கட்சியின் நிலைப்பாட்டுக்கு சமாந்தரமானது.

சிவில் சமூகங்களைப் பொறுத்த வரை தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற தெரிவு தமிழ்த் தேசிய ஐக்கியத்தின் குறியீடு.தமிழ் மக்களை ஒரு பொது நிலைப்பாட்டின் கீழ் ஒன்றிணைப்பதற்கான ஆகப்பிந்திய முயற்சி.அவ்வாறு தமிழ் அரசியல் சக்தியை தமிழ் வளத்தை,தமிழ்ப் பலத்தை ஒரு பொது நிலைப்பாட்டின் கீழ் ஒன்றிணைப்பது ஏன் தவறானது என்பதற்கு அதை எதிர்ப்பவர்கள் விளக்கம் கூறுவார்கள்?

மாதம் இருமுறை வெளியாகும்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
14 யூன் 2024
வெள்ளிக்கிழமை
அச்சுப் பத்திரிகையாக
அனைத்து வர்த்தக நிலையங்களிலும்
பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு 416 841 9600
வாரம் தோறும்
eelanadu.ca மின்னிதழ்
மூலம் பார்வையிடலாம்

# உலக ஒழுங்கின் வீழ்ச்சி

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்





இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த சர்வதேச மன்னிப்பு சபையின் செயலாளர் நாயகம், அக்னெஸ் கலமார்ட் அம்மையார், தனது பயணத்தின் முடிவில் கொழும்பில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார். முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தலில் பங்கேற்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களை சந்தித்த பாதிக்கப்பட்ட சமூகத்தினருடன் கலந்துரையாடிய சிவில் சமூகத்தினருடன் கலந்து பேசிய விடயங்களின் அடிப்படையில், அவர் செய்தியாளர் சந்திப்பில் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டிருந்தார். இதன்போது, ஐ.நா.வின் மீதான நம்பிக்கையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி மற்றும் விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச ஒழுங்கில் ஏற்பட்டிருக்கின்ற வீழ்ச்சி என்பன தொடர்பாக கேள்விகள் எழுப்பப்பட்டிருந்தனர்.

அதற்கு அவர் அளித்திருந்த பதில் முக்கியமானது. புதிய ஒழுங்குமுறையை உருவாக்குவதில் பங்களிப்பு செய்தவர்களே. அதனை அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அமெரிக்கா, பிரித்தானியா ரஷ்யா, சீனா போன்ற நாடுகளே விதிமுறைகளை அடிப்படையாக கொண்ட சர்வதேச ஒழுங்குமுறை வீழ்ச்சியடைவதற்குக் காரணமாக உள்ளன.

காசாவில் இடம் பெறும் விடயங்களை அவதானிக்கும் போது இது புலப்படுகிறது என்று அவர் பதிலளித்திருந்தார். விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச ஒழுங்குமுறையை குழப்புகின்ற நாடுகளாக இந்த நாடுகளை அக்னெஸ் கலமார்ட் அடையாளப்படுத்தியிருக்கிறார். இது காசாவுக்கு மாத்திரம் பொருத்தமானதல்ல. இலங்கைக்கும் கூட பொருத்தமானது தான்.

இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட போரில் மனித உரிமைகள் பெருமளவில் மீறப்பட்டன. போர் என்றால் மீறல்கள் இருக்கத் தான் செய்யும் என்று அதனை நியாயப்படுத்திக் கொண்ட நாடுகள் தான் அதிகம். தமிழர்கள் பெருமளவில் கொன்று குவிக்கப்பட்டு, இன அழிப்பு செய்யப்பட்ட போதும் அதற்கு நியாயம் பெற்று தருவதற்கு, நீதியை நிலைநாட்டுவதற்கு, ஒத்துழைக்க முன் வந்த நாடுகள் மிகமிகக் குறைவு.

இலங்கை அரசாங்கத்தை பொறுப்புக்கூற வைப்பதற்காக ஜெனிவாவில் தீர்மானங்கள் முன் வைக்கப்பட்டது உண்மை. அந்தத் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு, தார்மீக ஆதரவு வழங்குவதற்கு எத்தனை நாடுகள் முன் வந்தன? அந்தத் தீர்மானங்களை அமெரிக்கா தனது செல்வாக்கையும் அதிகாரத்தையும் பயன்படுத்தியே நிறைவேற்ற வேண்டிய சூழல் இருந்தது.

சீனா, ரஷ்யா, கியூபா, ஈரான், பாகிஸ்தான் போன்ற நாடுகள் இலங்கை அரசாங்கத்தை இந்த நெருக்கடியில் இருந்து காப்பாற்றுவதற்கு மிகக் கடுமையாக முயற்சித்தன. இந்தியாவும் கூட மிகத் தந்திரமாக நடந்து கொண்டது. இலங்கைக்கும் வலிக்காமல் அமெரிக்காவுக்கும் நோகாமல் தனது மென் இராஜ தந்திரத்தை பயன்படுத்தி தீர்மானங்களை நீர்த்துப் போக செய்வதற்கு தேவையான அளவு முயற்சிகளை



முன்னெடுத்தது. ஒவ்வொரு முறை தீர்மானத்தையும் தோற்படிப்பதற்காக இந்த நாடுகள் ஜெனிவாவிலும் ஏனைய நாடுகளின் தலைநகரங்களிலும் மேற்கொண்ட முயற்சிகளை யாரும் இலகுவில் மறந்து விட முடியாது. முள்ளிவாய்க்காலில் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு 15 ஆண்டுகளாகிய பின்னரும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி, பொறுப்பு கூறல் என்பன நிறைவேற்றப் படவில்லை.

இதற்கு ஒரே காரணம் விதிமுறைகளை அடிப்படையாக கொண்ட உலக ஒழுங்கில் ஏற்பட்டிருக்கின்ற வீழ்ச்சி தான். பொறுப்புக்கூறலை நோக்கிய நீதியை நோக்கிய பார்வையை விடுத்து, ஒவ்வொரு நாடும் தங்களுக்கு தேவையான ஒழுங்கை உருவாக்கவே முயன்றன. தங்களுக்கு சார்பான நாடுகளை பாதுகாப்பதே ஒழுங்கு முறையாக வரையறுத்துக் கொண்டன. அதனையே சர்வதேச ஒழுங்குமுறையாக மாற்றுவதற்கு முற்படுகின்றன. இதுதான் சர்வதேச ஒழுங்கின் வீழ்ச்சிக்குப் பிரதான காரணம். இன்று பாதிக்கப்பட்ட தரப்பினரான தமிழ் மக்கள், ஐ.நா. வின் மீதும் சர்வதேசத்தின் மீதும் நம்பிக்கை இழந்து போய் இருக்கிறார்கள்.

15 ஆண்டுகளாக பொறுப்புக்கூறல் வெறும் பேச்சளவிலேயே இருந்து கொண்டிருக்கிறது. இதனால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் ஐ.நா. மற்றும் சர்வதேச முயற்சிகளின் மீது நம் பிக்கை இழந்து போய் இருக்கிறார்கள்.. தங்களை சர்வதேசம் கைவிட்டு விட்டதாக அவர்கள் உணர்கிறார்கள். சர்வதேசம் தங்களுக்கு நியாயத்தை பெற்றுக் கொடுக்காது என்று முடிவெடுக்கும் நிலையை நோக்கி தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இந்த விரக்தி நிலை தோற்றம் பெற்றதற்கு பிரதான காரணம் வல்லரசு நாடுகள் உலக ஒழுங்கை குழப்பியது தான். இலங்கையை காப்பாற்றுவதற்காக, பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களை விலைபேச முற்பட்டன. ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குள் இலங்கையின் பொறுப்புக்கூறல் விவகாரத்தை முடக்கி வைத்து, அரசாங்கத்தை பாதுகாக்க முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. சர்வதேச நீதியைக் கோரும் தமிழ் மக்களுக்கு, மீண்டும் மீண்டும் உள்நாட்டு பொறிமுறையும், கலப்பு பொறிமுறையும் மட்டுமே நீட்டப்படுகிறது. அதனை ஏற்றுக் கொள்ள முடியாத தமிழ் மக்கள் வெறுப்பு நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.


இது ஐ.நா. மற்றும், சர்வதேசத்தின் மீதான நம்பிக்கை தேய்ந்து போகத் தொடங்கியிருப்பதற்கு முக்கியமான காரணம். காசாவிலும் இது தான் நடந்து கொண்டிருக்கிறது. அங்கு. இஸ்ரேல், பலஸ்தீனர்களை இனப்படுகொலை செய்து கொண்டிருக்கிறது. ஆனால் அதனை ஏற்றுக் கொள்ள அமெரிக்காவும் அதன் கூட்டாளி நாடுகளும் மறுக்கின்றன. காசாவில் இடம் பெற்ற போர்க் குற்றங்களுக்கு நீதிகோரி தென்னாபிரிக்கா சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நாடியிருக்கிறது. இதே தென்னாபிரிக்கா, இலங்கையில் இழைக்கப்பட்ட அநீதிக்கு உள்நாட்டு பொறிமுறையைத் தான் பரிந்துரைக்கிறது. இலங்கை அரசு உண்மை நல்லிணக்க ஆணைக் குழுவை உருவாக்க ஆதரவு வழங்கி வருகிறது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ள காசா படுகொலை விவகாரத்தில் புதிய திருப்பங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இஸ்ரேலிய பிரதமர் பெஞ்ஜமின் நெதன்யாகு, பாதுகாப்பு அமைச்சர் மற்றும் ஹமாஸ் அமைப்பின் தலைவர்களுக்கு பிடியாணை பிறப்பிக்க வேண்டும் என்று சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் சட்டத்தரணி கோரியிருக்கிறார். இந்த சந்தர்ப்பத்தில் அமெரிக்கா, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு எதிராக தடைகளை விதிக்கப் போவதாக எச்சரித்து இருக்கிறது.

ஏற்கனவே 2018ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் போர்க் குற்றங்களில் ஈடுபட்ட அமெரிக்க படையினருக்கு எதிரான வழக்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரிக்க முற்பட்டபோதும், இவ்வாறு தான் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் அதிகாரிகளுக்கு எதிராக பொருளாதார தடைகளை விதிக்கப் போவதாக அமெரிக்கா கொந்தளித்தது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை அமெரிக்கா அங்கீகரிக்கவில்லை. அது போல தான் சீனா, இந்தியா, ரஷ்யா போன்ற நாடுகளும் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் 124 நாடுகள் அதற்கு அங்கீகாரம் அளித்திருக்கின்றன. அந்த நாடுகள் உருவாக்கியிருக்கும் சர்வதேச ஒழுங்கை சிறிய நாடுகளின் கூட்டம் குழப்ப முற்படுகிறது. அமெரிக்க குடிமக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதா, அமெரிக்காவின் கூட்டாளிகளுக்கு எதிராக சர்வதேச குற்ற வியல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பிப்பதா என்பதே அமெரிக்காவின் பிரச்சினையாக இருக்கிறது.

இதே அமெரிக்கா, உக்ரேன் மீது படையெடுப்பை நடத்திய ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கு எதிராக, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்த போது, அதனை ஆதரித்திருந்தது. தங்களுக்கு வசதியான நாடுகள், நபர்களுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றமும் ஏனைய ஐ.நா. அல்லது அமைப்புகள் செயற்பட முனையும் போது, அதனை தடுத்து அல்லது (22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# இலங்கையில் ஈழத்தமிழர் அரசியலின் தாக்கம்!

கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முயற்சி வெற்றி பெறுமா? முன்னரை விடவும் இந்தக் கேள்வி இப்போது சற்றுக் கவனத்தை பெற்றிருக்கின்றது.



ஏனெனில், தமிழ்ப் பொதுவேட்பாளர் நிலைப்பாட்டை முன் கொண்டு செல்வதில் அரசியஸ் கட்சிகள் மத்தியில் இன்னும் தெளிவான நிலைப்பாடு இல்லை. இலங்கை தமிழரசுக் கட்சி வழமை போல் நழுவலான பதிலை வழங்கியிருக்கின்றது. அவசரப்படக் கூடாது என்பது தான் தமிழரசுக் கட்சியின் பதில். இது சம்பந்தன் தமிழ் அரசியலுக்கு அறிமுகம் செய்திருக்கும் அரசியல் மரபு.

தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை முன் கொண்டு செல்வதில் ஏற்படும் தடைகளும் தடுமாற்றங்களும் உண்மையில் எதனை உணர்த்துகின்றன? தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பது தான் ஈழத் தமிழர் அரசியல் ஆணிவேராகும். இந்த அடிப்படையில் தமிழ் மக்கள் ஒரு அரசியல் சமூகமாக எழுச்சி பெறுவதற்கான ஒரு கருத்தியல் தான் தமிழ்த் தேசியமாகும். இது ஒவ்வொரு கால கட்டங்களில் அந்தந்த காலகட்டங்களில் அரசியலுக்கு தலைமை தாங்குவோரால் முன்னெடுக்கப்படுகின்றது. ஐரிஸ் அரசியல் சிந்தனையாவர் பிரட் ஹலிடே,

தேசியவாதம் என்பது இயக்கங்களின் தொகுப்பு என்று வரையறுக்கின்றார். தமிழ் தேசியவாத அரசியலை இந்தப் பின்புலத்தில் மிகவும் இலகுவாக புரிந்து கொள்ள முடியும். ஜி.ஜி.பொன்னம்பலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை பிரதிபலிக்கவில்லை என்னும் குற்றச்சாட்டின் அடிப்படையில் தான் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் இவலங்கை தமிழரசுக் கட்சியை உருவாக்கினார். தமிழ் மக்களுக்கு ஒரு தேசிய இயக்கம் தேவை, அதன் மூலம் தான் தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே தீர்மானித்து வாழக்கூடிய அரசியல் வாழ்வொன்றை ஏற்படுத்த முடியும் என்னும் நிலைப்பாட்டின் அடிப்படையில் தான் செல்வநாயகம் கட்சியொன்றை ஸ்தாபித்தார்.

ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் மாற்றமொன்றை ஏற்படுத்துவதே, செல்வாவின் நிலைப்பாடாக இருந்தது. தமிழரசுக் கட்சியின் மூலம் அரசியலை முன்னெடுக்க முடியாதென்னும் நிலைமை ஏற்பட்டபோது, தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாகியது. கூட்டணியின் உருவாக்கம் அன்றைய அரசியல் மாற்றத்தின் வெளிப்பாடாகும். தமிழ் தேசிய அரசியலை முன்னெடுப்பதற்கு ஏற்கனவே இருக்கின்ற அரசியல் தலைமை பொருத்தமற்றது என்பதை உணர்ந்து கொண்ட போது தான், செல்வநாயகம் புதியதொரு அரசியல் கூட்டணி தொடர்பில் சிந்தித்தார்.

பின்னர், தமிழர் விடுதலைக் கூட்டணியினால் அன்றைய அரசியல் மாற்றங்களுக்கு தலைமை தாங்க முடியாமல் போன போது தான், ஆயுத இயக்கங்கள் தோற்றம் பெற்றன. அன்றைய அரசியல் மாற்றங்களை புரிந்து கொண்டு செயற்பட்டிருந்தால் தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஆயுதப் போராட்டம் ஒன்றுதான், ஒரேயொரு வழியென்னும் நிலைமை ஏற்பட்டிருக்காது. தனிநாட்டுக் கோரிக்கையை முன் வைத்த தமிழர் விடுதலைக் கூட்டணி, அதற்கான வேலைத்திட்டம் இன்றி இருந்தது மட்டுமல்லாமல், மாவட்ட சபையை நோக்கியும் கீழிறங்கியது. இது தொடர்பில் இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்ட அரசியல் அதிருப்தியே ஆயுதப் போராட்டத்தின் மீதான நம்பிக்கையை தீவிரப்படுத்தியது. பின்னர் ஆயுதப் போராட்ட இயக்கங்களுக்குள் ஏற்பட்ட உள் முரண்பாடுகள், மோதல்களானதைத் தொடர்ந்து, தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரேயொரு போராட்ட இயக்கமாக எழுச்சியுற்றது.

ஒவ்வொரு கால கட்டத்திலும் தமிழ் தேசியவாதம், எவ்வாறு இயக்கங்களின் வழியாக நிலை நிறுத்தப்பட்டது என்பது இதன்மூலம் புரிந்துகொள்ள முடியும். அதற்காகவே இந்தச் சுருக்க வரலாற்றைத் தருகின்றேன். இந்த வரலாற்றிலிருந்து நாம் எதை கற்றுக் கொள்ள முடியும்? பதில் சுலபமானது. ஒவ்வொரு கால கட்டத்திலும் அந்தக் காலகட்டத்தில் மேலாதிக்கம் செலுத்திய ஈழத் தமிழ் அரசியல் இயக்கங்களே, (மிதவாதிகள், இயக்கங்கள்) தமிழ் தேசிய அரசியலை தீர்மானித்திருந்தது.

இன்றைய அரசியல் சூழல் முற்றிலும் மாறுபட்டது. அடிப்படையில் தங்களைத் தாங்கவே தீர்மானித்து வாழ்தல் என்னும் கோரிக்கை முன்னரைப் போன்று பெறுமதியானதல்ல. ஏனெனில், இன்றைய உலக அரசியல் ஒழுங்கில் அவ்வாறான அரசியல் வாழ்வு சாத்தியமானதல்ல. ஒப்பீட்டடிப்படையில் அனைத்து சமூகங்களுமே, விரும்பியோ விரும்பாமலோ சர்வதேச ஒழுங்கை சார்ந்துதான் வாழ வேண்டியவர்களாக இருக்கின்றனர். இந்த அடிப்படையில் சிந்தித்தால் 2009 இற்குப் பின்னரான அரசியல் சூழலில் தமிழ் தேசிய அரசியல் மீள்கட்டமைப்புச் செய்யப்படவில்லை. அது இப்போதும் பழைய பல்லவிகளில் இசையமைக்கலாம் என்னும் மனோ நிலையுடன் தான் நககின்றது.

2009இற்குப் பின்னரான, விடுதலைப் புலிகள் அரசியல் அரங்கிலிருந்து அகற்றப்பட்ட பின்னரான சூழலில், தமிழ் தேசிய அரசியல் மீண்டும் ஜனநாயக நீரோட்டத்திற்கு திரும்பியது. இந்தக் கால கட்டத்தை சம்பந்தனின் காலமென்று வரையறுப்பதே பொருத்தமானது. சம்பந்தன் தலைமையிலான தமிழரசுக் கட்சியின் தீர்மானங்களிலேயே கடந்த 15 வருடகால அரசியல் நகர்த்தப்பட்டது. இங்குள்ள பிரச்சினை, சம்பந்தன் தமிழ்த்தேசிய அரசியலுக்கு தலைமை தாங்கவில்லை. சம்பந்தன் தமிழரசுக்கட்சி பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மரபில் வந்திருந்தாலும் கூட, அடிப்படையில் சம்பந்தன் ஒரு தமிழ்த் தேசியவாதி அல்ல,

சம்பந்தன் எப்போதும் தன்னையொரு கொழும்பு அரசியல் உயர் குழாமிற்கு நெருக்கமான ஒருவராக காண்பிப்பதிலேயே கவனம் செலுத்தி வந்திருக்கும் ஒருவர். அவரது கடந்த 15 வருடகால அரசியல் முன்னெடுப்புகள் இதற்கு சிறந்த உதாரணமாகும். கடந்த 15 வருடங்களில் தமிழ்த் தேசிய அரசியல் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகியது. இலங்கைத் தீவின் அரசியலில், தமிழ்த் தேசிய அரசியல் தாக்கம்மிக்கது, தவிர்க்க முடியாது என்னும் நிலைமையை சம்பந்தன் மிகவும் திட்டமிட்ட வகையில் விதைத்தார். சிங்கள மக்கள் தன்னை சந்தேகிக்கக் கூடாது என்னுமடிப்படையிலேயே அவரது ஒவ்வொரு நகர்வுகளும் அமைந்திருந்தன. அவ்வாறு சந்தேகித்தால் அது தனது தனிப்பட்ட நலன்களைப் பாதிக்கும்



என்னுமடிப்படையிலேயே அவருடைய ஒவ்வொரு நகர்வுகளும் இருந்தன. விடுதலைப்புலிகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்பதை நிரூபிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். இதற்காக பல கதைகளைக் கூறினார். இறுதியில் விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத அமைப்பு என்றும் கூறினார்.

இரண்டாவதாக, இந்தியாவின் தலையீடுகள் தேவையற்றது. ஏனெனில் இந்தியாவின் தலையீட்டைக் கோரினால், சிங்களவர்கள் கோபிப்பார்கள் என்றார். மிகவும் திட்டமிட்ட வகையில் இந்தியாவை நோக்கிச் செல்வதைத் தவிர்த்தார், தென்னிலங்கையுடன் நாங்கள் இசைந்து செயற்படுகின்றோம், இந்த நிலையில் வெளித் தலையீடுகள் எவையும் தேவையற்றது என்பது தான் சம்பந்தனின் நிலைப்பாடாக இருந்தது. இந்த மரபையே தற்போதும் தமிழரசுக் கட்சி தொடர்கின்றது. இதன் காரணமாகத் தான் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை தமிழரசுக் கட்சி கொள்கையளவில் ஆதரிக்கவில்லை. சிறிதரன் போன்றவர்கள் தனிப்பட்ட ரீதியில் ஆதரிக்கின்றனர் என்பதும் உண்மை.

ஆனால் இங்கு கவனிக்க வேண்டிய விடயம் வேறு. அதாவது, சம்பந்தன் இந்தளவிற்கு கீழிறங்கியும் கூட தமிழ் மக்கள் சார்பில் எந்தவொரு விடயத்தையும் முன்னெடுக்க முடியவில்லை. கொழும்பு அதன் நிலையிலிருந்து கீழறங்கி வரவில்லை. இது எதனைக் காண்பிக்கின்றது? தமிழ் தேசிய அரசியல் நிலையிலிருந்து கீழிறங்கிச் சென்றால் பல விடயங்களை சாதிக்க முடியும் என்பதும் ஒரு பொய்யாகும்.

சிங்கள அரசியல் தரப்புகளுடன் உரையாடத்தான் வேண்டும். சூழ்நிலை கருதி சில தீர்மானங்களை எடுக்கத்தான் வேண்டும். தண்ணீர் குடிக்க கிளாஸ் இல்லை, ஒரு சிரட்டை தான் இருக்கின்றது என்றால், சிரட்டையை பயன்படுத்தத்தான் வேண்டும். அதுதான் சூழ்நிலைக்கு சரியானது. சூழ்நிலைக்கு சரியானதை கைக்கொள்ள மறுத்தால், சூழ்நிலை நம்மை நிர்மூலமாக்கிவிடும்.

ஆனால் அதற்காக தமிழ் தேசியத்தை கைவிடக் கூடாது. ஏனெனில் தமிழ் மக்கள் இலங்கைத் தீனில் ஒரு தரப்பு என்பதை எப்போதும் கைவிட்டுவிடக் கூடாது. ஆனால் சம்பந்தன் தரப்பு அதனை பலவீனப்படுத்தி விட்டது.

தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு மாற்றம் தேவை. அந்த மாற்றம் ஜனநாயக தளத்தில் நிகழவேண்டும். அந்த மாற்றம் இலங்கைத் தீவில் தமிழர் அரசியல் தாக்கம் மிக்கது என்பதை நிருபிப்பதாக இருக்க வேண்டும். ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தி, அவரை நோக்கி தமிழ் மக்களை திரட்டுவதானது, அந்த மாற்றத்தின் ஆரம்பமாக இருக்கும். ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தும் முயற்சி பெற்றி பெறுவதானது, தமிழ் தேசிய அரசியலில் ஒரு புதிய பாய்ச்சலாக அமையும்.

கடந்த 15 வருடகால அரசியல் செயற்பாடுகள் நமக்கு தந்திருக்கும் படிப்பினையின் அடிப்படையில் சிந்தித்தால், ஈழத் தமிழர் அரசியல் தற்போதிருக்கும் நிலையில் அடுத்தகட்டத்தை நோக்கி செல்லவே முடியாது.

# புலிகளும் எலிகளும்

ஈழத் தமிழர்களின் விடுதலைக்கான அரசியல் இப்பொழுது வெறுமனே தேர்தலுக்கான அரசியலாகச் சுருங்கி விட்டது. அப்படிச் சுருங்கியதன் விளைவுகளே இப்போது நடக்கும் தடுமாற்றங்களும் குத்துக் கரணங்களுமாகும்.

தேர்தலுக்கான அரசியல் என்பது தனியே தேர்தல் வெற்றியை மட்டுமே குறியாகக் கொண்டதாகத் தமிழ்த் தரப்பினரால் ஆக்கப்பட்டு விட்டது. இதை தமிழ் ஊடகவியலாளர்களும் அரசியற் பத்தியாளர்களும் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் ஆதரித்துச் செயற்படுகிறது. சரியாகச் சொன்னால்இ இந்தத் தரப்புகளும் தேர்தல் அரசியலில் தான் தங்களுடைய அடையாளங்களையும் இருப்பையும் பேணிக் கொள்கின்றன. (இதைப்பற்றி அடுத்த கட்டுரையொன்றில் விரிவாகப் பார்க்கலாம்).

தேர்தல் அரசியலையே தமது வழிமுறையாகவும் வாழ் முறையாகவும் கொண்ட தரப்புகள் இதில் ஈடுபடுவது வேறு. விடுதலைக்கான அரசியலில் ஈடுபட்டஇ இரத்தம் சிந்திய போராட்ட வழிமுறையில் வந்தவர்கள் ஈடுபடுவது வேறு.

முதலாவது தரப்பினர் காலாகாலமாகத் தமிழ் வாக்காளர்களைக் கவரும் தந்திரோபயங்களில் கைதேர்ந்தவர்கள். அதற்கேற்றவாறு அவர்கள் அவ்வப்போது எடுபடக் கூடிய கவர்ச்சிகரமான அறிவிப்புகளைச் செய்வார்கள். பிரகடனங்களை விடுப்பார்கள். பிறகு அந்தப் பிரகடனங்களையும் அறிவிப்புகளையும் தாமே மறந்தும் மீறியும் செயற்படுவார்கள்.



1977 இல் தமிழீழத்தில் தான் அடுத்த தேர்தல் என்று தொடங்கிய வீரப் பிரகடனம் இப்பொழுது சர்வதேச சமூகத்துக்கு தமிழ் மக்களின் அபிலாஷையை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். தமிழ் மக்களின் ஒற்றுமையை வலியுறுத்த வேண்டும் என்பது வரையில் வந்துள்ளது. இதற்காகத் தான் 2024 செப்ரெம்பரில் நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப்பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்று இப்பொழுது சொல்லப்படுகிறது. இதற்குப் பிறகு என்ன சொல்வார்களோ!

இதில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். 1977 இல் தமிழீழத்தில் தான் அடுத்த தேர்தல் என்றவர்கள் இப்பொழுது எங்கே தேர்தலில் ஈடுபடுகிறார்கள்? என்பதை. இதையிட்டெல்லாம் இவர்கள் வெட்கப்படுவதேயில்லை. இப்போதுள்ள தமிழ்ப் பெருங்குடி மக்களும் இதையெல்லாம் கேள்வி கேட்பதில்லை.

1977இல் அடுத்த தேர்தல் தமிழீழத்தில் தான் என்ற தமிழரசியற் தலைவர்கள் 1981 இல் அதை மறந்து விட்டு மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் போட்டியிடத் துணிந்தனர். இந்த ஏமாற்றை உணர்ந்த அன்றைய இளைஞர்கள் அப்போதைய தமிழரசியற் தலைவர்களை எதிர்த்தனர். அதற்குப் பிறகு நடந்த ஆயுதப்போராட்டத்தில் தமிழரசியற் தலைவர்களின் இடம் இல்லாமற் போனது. அல்லது மங்கலாக இருந்தது.

ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பிறகு எழுச்சியடைந்த மிதவாதத் தமிழரசியற் தலைமை மறுபடியும் தேர்தலுக்கான அரசியலில் மையங் கொண்டது. அதற்காகத் தனது பழைய பாணியிலான மக்களை ஏமாற்றும் அரசியற் பிரகடனங்களையும் அறிவிப்புகளையும் செய்யத் தொடங்கியது. 2010இல் நடந்த ஜனாதிபதித் தேர்தல் பாராளுமன்றத் தேர்தல் போன்றவற்றில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சில பிரகடனங்களையும் அறிவிப்புகளையும் செய்தது.

1.சர்வதேச ரீதியிலான போர்க்குற்ற விசாரணை.

2 காணாமலாக்கப்பட்டோரின் பிரச்சினைக்குத் தீர்வு.

3.அரசியற் கைதிகளை விடுவித்தல்.

4.படையினரால் ஆக்கிரமிக்கப் பட்டிருக்கும் நிலங்களை மீட்டெடுப்பது.

5.இடம்பெயர்ந்த மக்கள் முழுமை யாக மீள்குடியேற்றம் செய்யப்படுதல்.

6. இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு.

7. பொருளாதார ரீதியாக எம்மை நாமே கட்டியெழுப்புதல்

8.நாமொரு தேசமாக எழுதல் இப்படிப் பல.

ஆனால் இவை எதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்வந்த 15 ஆண்டுகளிலும் நிறைவேற்றவில்லை. இவற்றைப் பற்றிப் பாராளுமன்றத்திலும் மாகாணசபை உள்ளூராட்சி சபைகளிலும் பேசியதோடு சரி. மட்டுமல்ல மாகாணசபை பிரதேச சபைகளின் மூலம் செய்யக் கூடிய செயற்படுத்த வேண்டிய பணிகளைக் கூடச் செய்யாமல்இ அங்கெல்லாம் இந்தப் பிரகடனங்களைத் தீர்மானமாக்கி நிறைவேற்றுவதையே தொழிலாகக் கொண்டது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மட்டுமல்ல தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் தான். போதாக்குறைக்கு சில பிரகடனங்களைப் பற்றிப் பேசுவதற்காக ஜெனீவாவுக்குச் செல்கிறோம் என்று வருடா வருடம் படையெடுத்துப் போகிறார்கள். அப்படியே உலகம் சுற்றுகிறார்கள். அப்படியே தங்களை நன்றாக வளர்த்துக் கொள்கின்றனர். ஆனால் போராட்டத்தில் இணைந்து நின்று அளப்பரிய தியாகங்களைச் செய்து பாதிக்கப்பட்ட மக்களின் நிலையோ மிகப் பரிதாபமானதாக இன்னும் அப்படியே தான் இருக்கிறது. அதை மேலுயர்த்திக் கொள்வதற்கோ அல்லது பாதிக்கப்பட்ட பிரதேசங்களைக் கட்டியெழுப்புதற்கோ யாருமே முன்வரவில்லை. எங்கும் எவரும் மக்களோடு நின்ற எத்தகைய களப் பணிகளையும் ஆற்றவில்லை. அதற்கு இன்னும் தயாராகவும் இல்லை.

இதைப் பகிரங்கமாக ஒத்துக் கொண்டிருக்கிறார் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான எம்.ஏ. சுமந்திரன். இது தொடர்பாக அவர் 11.05.2024இல் விடுத்துள்ள அறிக்கையில் விரிவாகச் சொல்லியிருக்கிறார். அதனுடைய சாராம்சம் இது தான். கடந்த 15 வருட காலத்தில் எங்களுடைய அரசியல் சமூக பொருளாதார விடுதலைக்காக நாம் மேற்கொண்ட அணுகுமுறைகள் வெற்றியளித்துள்ளனவா என்ற கேள்வியின் அடிப்படையில் சுய விமர்சனத்தை மேற்கொள்வது அவசியம் எனக் கருதுகிறேன் என்று.

ஆனால் இன்று தமிழ்த்தேசிய அரசியற் பரப்பில் இயங்குகின்ற பத்துக்கு மேற்பட்ட கட்சிகளில் எத்தனை கட்சிகள் இத்தகைய சுய விசாரணைக்குத் தயாராக உள்ளன? அல்லது அவற்றில் இயங்கும் பல நூற்றுக்கணக்கானே அரசியலாளர்களில் எத்தனை பேர் இப்படித் துணிவோடு தம்மைச் சுய விசாரணைக்குட்படுத் தயாராக உள்ளனர்?

அரசியற் கட்சிகள் அரசியல்வாதிகள் மட்டுமல்ல எதிர்ப்பு அரசியலை அல்லது விடுதலை அரசியலுக்கான தமிழ்த்தேசியவாதக் கருத்தியலை வலியுறுத்துகின்ற அரசியற் பத்தியாளர்கள் ஊடகங்கள் அவ்வப் போது அறிக்கைகளை விடுத்துக் கொண்டிருக்கின்ற யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் தமிழ்ச்சிவில் அமைப்புகள் என எந்தத் தரப்புமே தம்மைத் திரும்பிப் பார்க்கத் தயாரில்லாத நிலையிற்தான் உள்ளன.

பதிலாக தொடர்ந்தும் தமது விருப்பங்களையும் கனவுகளையும் மக்களின் மீது சுமத்துவதிலேயே தீவிரமாக உள்ளன. இதற்கெல்லாம் மக்களே பரிசோதனை எலிகள். இது எவ்வளவு அநீதியானது? அப்படியான ஒன்று தான் இப்போது மேற்கொள்ளப்படுகின்ற தமிழ்ப்பொது வேட்பாளர் விடயமும்.

2010க்குப் பிறகு நடந்த மாகாணசபைகளுக்கான தேர்தல் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் பாராளுமன்றத் தேர்தல் ஜனாதிபதித் தேர்தல் என ஒவ்வொரு தேர்தலின் போதும் இதே போன்ற வெற்றுப் பிரகடனங்களுக்கு அலங்காரப் பூச்சுகளைச் செய்து மக்களிடத்திலே உலாவ விடப்படுகிறது. அட குறைந்த பட்சம் தாம் வலியுறுத்துகின்றது தாம் பிரகடனப்படுத்தும் பிரகடனங்களையும் அறிவிப்புகளையும் செயற்படுத்துவதற்காவது பாடுபட வேண்டாமா? அந்தப் பொறுப்புணர்வு கூட இவர்களுக்கில்லை.

உண்மையில் இவர்கள் தாங்கள் எழுதிய ஒவ்வொரு வரிகளையும் ஒவ்வொரு பத்திகளையும் திரும்ப எடுத்துப் படித்துப் பார்க்க வேண்டும். அவ்வாறே ஒவ்வொரு கட்சியும் கடந்த காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளையும் மக்களின் முன்னே வைத்த பிரகடனங்களையும் அறிவிப்புகளையும் அமர்ந்திருந்து வாசித்துப் பார்க்க வேண்டும். அவை ஒவ்வொன்றும் வெறும் வரிகளும் வெறும் வார்த்தைகளும் இல்லை. அவை மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள். சத்திய வார்த்தைகள். ஆகவே வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறுவதும் சத்திய வார்த்தைகளை மீறிச் செல்வதும் மிகப் பெரிய தவறு. துரோகம். அப்படித் தான் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரும் மாணவர்களாகிய தங்களுடைய வரையறை என்ன? பொறுப்பென்ன? செயற்பாட்டுப் பரப்பென்ன? என்பதை அறிவது நல்லது. (இதைக் குறித்தும் அடுத்த கட்டுரையில் விரிவாகப் பார்ப்போம்).

தொகுத்துச் சொன்னால் முதலில் நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுக்கு உண்மையாக இருங்கள். போராடிய மக்களுக்கும் தியாயகங்களைச் செய்த மக்களுக்கும் விசுவாசமாயிருங்கள். அவர்களுக்கு மேலும் மேலும் பாதிப்பை ஏற்படுத்தாதீர்கள். உங்கள் அபிலாஷைகளுக்கு நீங்கள் தான் முதலில் முன்னின்று உழைப்பவர்களாக இருக்க வேண்டும். அந்த உழைப்பே பிறருக்கு வழியைக் காட்டுவதாக இருக்க வேண்டும். அதன் பிறகே மக்கள் உங்களைப் பின்தொடர்வர்.

இதற்கு மக்கள் மத்தியில் களப்பணிகள் அவசியமாகும். அரசியலை நடைமுறைப்படுத்துவது எப்படி என்று கற்றுக் கொள்ள முயற்சிப்பதாகும். நடைமுறைகள் உருவாகும் போதே அரசியல் வெற்றிகளை அடையலாம்.

பதிலாக ஊடக மையங்களில் கூடுவதோ தங்கள் தங்கள் அலுவலங்களில் இருந்து கொண்டு அறிக்கை விடுவதோ நான்கு பேர் சேர்ந்து கொண்டு புதுப்புது அமைப்புகளை உருவாக்குவதோ அப்படி இப்படி என நான்கு ஆறு அமைப்புகள் இணைந்து கொண்டு அறிக்கைகளைத் தயாரிப்பதோ தூதுவரங்களுக்குக் காவடி எடுப்பதோ இல்லை.

தெற்கிலே பொதுஜன பெரமுனவும் ராஜபக்ஸவினரும் இப்படித் தான் தங்களோடு 100க்கு மேற்பட்ட அமைப்புகள் இணைந்திருக்கின்றன என்று அரசியல் செய்ய முற்பட்டார்கள். அந்த அரசியலின் பெறுமதியை உலகம் நன்கறியும். அதை வரலாறு பழித்துரைக்கிறது.

விடுதலைக்கான அரசியல் என்பது வேறு. தேர்தலுக்கான அரசியல் என்பது வேறு. இரண்டையும் இணைத்துச் செய்வதும் செயற்படுத்தும் செல்வதும் வேறு. அது அதுக்கென அடிப்படைகளும் வேறுபாடுகளும் உண்டு. இதற்கான அரசியற் கணிதங்களை நாம் அறிய வேண்டும்.

விடுதலை அரசியலுக்கு நாம் யாராக இருக்கிறோம் என்பது நம்முடைய செயல்களின் மூலமே அடையாளப் படுத்தப்படும். வார்த்தைகளின் மூலமாக அல்ல. இதற்கு அண்மைய செழிப்பான உதாரணம் தமிழ் மக்கள் பேரவையாகும். மிக ஊக்கத்துடன் உற்சாகமாகத் தொடங்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவை மூன்று ஆண்டுகளால் காணாமற்போனவைகளின் பட்டியலில் சேர்ந்து கொண்டது. தமிழ் மக்கள் பேரவையின் தோல்வியை மறைப்பதற்காக அதன் உற்பத்தியாளர்கள் வேறு மார்க்கங்களில் முயற்சிக்கிறார்கள். அதில் ஒன்று தான் பொதுவேட்பாளர் பற்றிய அறிவிப்புமாகும்.

இப்பொழுது நடந்து கொண்டிருப்பது எலிகள் பல சேர்ந்து வளையெடுக்கும் முயற்சிகள்.

ஆம் புலிகளின் காலம் முடிந்தது. இது செயற்படும் எலிகளின் காலமாகியிருக்கிறது. செயற்படுவோரின் காலம் போயொழிந்தது. செயற்படாதோரின் அரங்கு திறந்திருக்கிறது. என்பதால் தான் தாய் மண்ணை விட்டு ஆயிரமாயிரமாய்த் தினமும் வெளியேறிச் செல்கிறார்கள் மண்ணின் மைந்தர்கள்.

இந்தச் சீரில் தான் தேசமாய்த் திரள்வோம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறோம்

**- கருணாகரன்**

# நம்பிக்கையை இழந்து செல்லும் தமிழ்ச்சமூகம்

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



யுத்தம் முடிந்து 15 ஆண்டுகள் கடந்து விட்டன. ஈழத் தமிழரின் அரசியல் இன்னும் மூக்குச் சிந்தும் (அழுது புலம்பும்) நிலையிலிருந்து மீளவில்லை. மட்டுமல்ல, அது உடைந்தும் நலிந்தும் சீர்குலைந்த நிலைக்குள்ளாகி, அதைத் தூக்கி வளர்த்தவர்களையே இன்று துக்கத்துக்குள்ளாக்கியுள்ளது. பெரிய கூட்டுக்கள் உடைந்து சிறிய கூட்டுக்கள் உருவாக்கியுள்ளன. கட்சிகளுக்குள்ளே உடைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. மக்கள் இயக்கங்கள் தோன்றிப் பின் மறைந்திருக்கின்றன. போரின் பின், யார் உயிருடன் இருக்கிறார்கள்? யாருக்கு அஞ்சலி செய்யலாம்? செய்யக்கூடாது? என்ற விடயத்தில், புலம் பெயர்ந்த தமிழர்கள் மேலும் இரண்டாக உடைந்திருக்கிறார்கள் என இந்தத் துக்கத்தை பத்தியாளர் நிலாந்தனும் வெளிப்படுத்தியிருக்கிறார். நிலாந்தனுக்கு மட்டுமல்ல, பெரும்பாலான தமிழ் மக்களுடைய கூட்டுத் துக்கமும் இதுவே தான்.

இந்தப் பலவீனமான பரிதாபமான பாதகமான நிலைமைக்குரிய கூட்டுப் பொறுப்பை, தமிழரின் தீவிர அரசியலைக் கேள்விக்கும் விமர்சனத்துக்கும் ஆய்வுக்கும் இடமின்றித் தொடரும் ஊடகர்கள், புத்திஜீவிகள், பத்தியாளர்கள், அரசியற் தரப்பினர், பல்கலைக் கழக சமூகத்தினர், தமிழ்ச் சிவில் சமூகத்தினர் உட்பட சில மதப் பிரமுகர்கள் அனைவரும் பொறுப்பேற்க வேண்டும். அவர்களுடைய கூட்டுத் தவறே இந்த நிலைக்குக் காரணமாகும்.

காரணம் எளியதே. யுத்தத்திற்குப் பிறகான சூழல் (Post – War period) என்பது முற்றிலும் வேறானது. அது தமிழ்ச் சமூகத்தையும் அதனுடைய அரசியலையும் புத்தாக்கம் செய்ய வேண்டியது.

1.அரசியற் சிந்தனை மாற்றத்தின் அடிப்படையில். துரோகி தியாகி என்று கறுப்பு வெள்ளையாக அரசியலைச் சுருக்கிப் பார்க்காமல், முடிந்த அளவுக்கு அனைத்துத் தரப்புகளோடும் ஒருங்கிணைப்பை மேற் கொள்வதற்கு முயற்சித்திருக்க வேண்டும். தமிழ்ச் சமூகத்தை ஒருங்கிணைத்துத் திரட்டி அரசியல், பொருளாதார, அறிவியல் ரீதியாகப் பெரும் அணியாக்கியிருக்க வேண்டும். இதில் புலம்பெயர் மக்களையும் உள்வாங்கிருக்க முடியும். இதில் உள்ள சிக்கலான அக புற நெருக்கடிகளைப் புரிந்து கொண்டு அவற்றைக் கையாளக் கூடிய எந்தத் தலைமையும் மேலெழவில்லை. அதனால் இவை எல்லாம் அப்படி நிகழவில்லை.

அரசாங்கத்தோடு இணைந்து நிற்கின்ற தரப்புகளும் தமிழ்த்தேசியத் தரப்புகளும் எப்படி ஒருங்கிணைந்து செயற்பட முடியும்? என்ற கேள்வி எழலாம். இதற்குச் சிறந்த பதில், இந்த இரண்டு தரப்புகளும் இவை இரண்டுக்கும் அப்பாலான சமூக விடுதலையுடன் கூடிய இனவிடுதலையை முன்னிறுத்தும் தரப்புகளைக் கூட தம்முடன் இணைத்துக் கொள்வதற்கு முயற்சிக்கவில்லை என்பதாகும். காரணம், இந்த இரண்டு தரப்பும் தேர்தல் அரசியலில் மட்டும் மையங் கொண்டிருந்ததேயாகும். அதற்கு அப்பால், விடுதலை அரசியலை இவை முன்னிறுத்திச் சிந்தித்திருந்தால், அதைப் பலப்படுத்தும் மூலோபாயம், தந்திரோபாயம், வேலைத்திட்டம் என்ற அடிப்படையிலேயே செயற்பட முயன்றிருக்கும்.

ஆகவே இதில் பெரும் தவறு நிகழ்ந்தது. இதைச் சுட்டிக்காட்டி, புத்தாக்க அரசியலை மேற் கொள்வதற்குரிய அழுத்தத்தைக் கொடுப்பதில் தமிழ்ச் சிவில் அமைப்புகளும் புத்திஜீவிகளும் பத்தியாளர்களும் பல்கலைக்கழக சமூகத்தினரும் தவறி விட்டனர். பதிலாக இதைச் சுட்டிக் காட்டிய தரப்பினரை விலக்கம் செய்வதிலேயே இந்தத் தரப்பினர் குறியாக இருந்தனர். இன்னும் அப்படித் தான் உள்ளனர். கெட்டாலும் பரவாயில்லை, எந்தப் புத்திமதியையும் கேட்க மாட்டோம் என்ற பிடிவாதமும் அறியாமையும் இவர்களைச் சூழ்ந்துள்ளது.



2.தமிழ்ச் சமூகத்தின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்படவில்லை. மீள்குடியேற்றத்தையும் புனரமைப்பையும் அரசாங்கமே தனித்து மேற்கொண்டது. அதற்கான செயலணியைக் கூட யுத்தப் பாதிப்பு நடந்த வடக்குக் கிழக்கில் செயற்படுத்தவில்லை. யாரும் இதில் இடையீட்டைச் செய்யவில்லை. இதில் தமிழ்ப் புத்திஜீவிகளும் துறைசார் வல்லுனர்களும் பெரும் தவறிழைத்தனர்.

இதைப் பற்றி இந்தக் கட்டுரையாளர் மட்டுமே பல தடவை சுட்டிக்காட்டியிருந்தார் மேலும் சிலரும் பேசியுள்ளனர். தமிழ் அரசியற் கட்சிகள், அவற்றின் தலைவர்கள் (அரச ஆதரவு எதிர்ப்பு இரு தரப்பும் தான்) எவையும் இதைப் பற்றிச் சிந்தித்ததில்லை. இதனால் தமிழ்ச்சமூகம் பொருளாதார ரீதியாகம் சமூக நிலையிலும் நலிவடைந்து கொண்டே செல்கிறது. குறிப்பிடத்தக்க அளவுக்குப் புதிய தொழில்துறைகள் எதுவும் 15 ஆண்டுகளில் வடக்குக் கிழக்கில் உருவாக்கப்படவில்லை. இப்போது இந்தப் பிராந்தியத்திலுள்ள தமிழர்களுக்கான ஒரே தெரிவு நாட்டை விட்டு வெளியேறுதல். அல்லது அரச தொழில் வாய்ப்புகளில் சரணடைதல் மட்டுமே.

3.தமிழ்ச்சமூகத்தின் அக புற முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்வதில் நேர்மையான வழிமுறைகளை தமிழ்த் தேசியச் சக்திகள் எவையும் உரிய முறையில் கவனப்படுத்திச் செயற்படவில்லை. இதனால் இதை வேறு தரப்புகள் தமக்கிசைவாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. இதைக் குறித்த சமூகவியல், பொருளியல் ஆய்வுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. இதில் குறைந்த பட்சம் தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள பல்கலைக்கழகங்களாவது பங்களித்திருக்க முடியும். சற்று முயற்சித்திருந்தால், இலங்கையில் உள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் இதைக்குறித்த ஒரு கவனத்தை உண்டாக்கி ஒட்டு மொத்தமாக அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு ஆய்வுகளைச் செய்திருக்க முடியும். அப்படிச் செய்திருந்தால், களநிலையை பொதுவெளியில் சரியாக முன் வைத்திருக்க முடியும். அது செய்யப்படவே இல்லை.

4. வடக்குக் கிழக்குத் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான உறவைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் பலமான முறையில் மேற்கொள்ளப்படவில்லை. ஏன், சம்பிரதாயமாகக் கூட அது நிகழவில்லை. இன்னும் கடந்த காலத் தவறுகள், பிரச்சினைகளுக்கு ஒருவரையொருவர் குற்றம் சாட்டும் பகைமை நிலையே நீடிக்கிறது. அத்துடன் இன்னொரு தமிழ் பேசும் சமூகத்தினரான மலையக மக்களுடனான அரசியல் உறவையும் வளர்க்கவில்லை. இதனால் தான் தற்போது தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டைத் தனியே வடக்குக் கிழக்குத் தமிழ்ச் சமூகத்துக்குள் மட்டும் மட்டுறுத்திப் பார்க்கும் அவலம் நேர்ந்திருக்காது. இதிற்கூட இன்னும் நெருக்கடியே உண்டு. தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரம் மட்டுமல்ல, எத்தகைய அரசியல் நிலைப்பாட்டையும் ஒரு முகப்பட்டு எடுப்பதற்கு தமிழ்த்தேசியக் கட்சி களிடத்தில் கூட ஒருங்கிணைவும் புரிந்துணர்வும் இல்லை. இந்தப் பலவீனத்தைப் புரிந்து கொள்வதில் கூட இன்னும் அரசியற் கட்சிகள், அவற்றின் தலைமைகள் உள்ளிட்ட தமிழ்ச்சக்திகள் எவையும் உருப்படவில்லை.

5.எதிர்ப்பு அரசியல் இணக்க அரசியல் இரண்டுக்கும் இடையிலான அர்த்தப்பாடுகளில் உள்ள குழப்பமாகும். உண்மையில் தமிழ்த் தரப்பு இவை இரண்டையும் அதன் சரியான பொருளில் இங்கே மேற்கொள்ளவில்லை. இங்கே எதிர்ப்பு அரசியல் என்பது, செயற்தன்மையற்ற தனியே வாய்ச்சவாடல் அரசியலாகவும் இணக்க அரசியலானது, சரணடைவு அரசியலாகவுமே சுருங்கிப் போயுள்ளது. இவை இரண்டினாலும் எந்தப் பெரும் பயன்களும் மக்களுக்குக் கிடையாது. மட்டுமல்ல, இவை எந்த வகையிலும் ஒடுக்கப்படும் மக்களுடைய விடுதலைக்குரியவை இல்லை.

இதனால் தான் தமிழ்ச் சமூகம் தமிழ் அரசியற் சக்திகளிடத்திலும் அதை வலியுறுத்துவோரிடத்திலும் நம்பிக்கையற்றிருக்கிறது. எவரிடத்திலும் நம்பிக்கை கொள்ள முடியாது என்ற நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதற்கான பொறுப்பையும் இந்தச் சக்திகளே ஏற்க வேண்டும். வெறுமனே புலம்புவதால் பயனில்லை. கூடவே பகையை மறப்பதற்கான களமும் காலமும் இதுவாகும்.

எந்த வகையிலும் இலங்கையில் இனிமேல் முரண்பாடுகளை மீளுருவாக்கம் செய்ய முடியாது. அப்படி மீள வளர்த்தால் அதனால் பாதிப்புக்குள்ளானோரே தொடர்ந்தும் பாதிப்பைச் சந்திக்க நேரும். அரசுக்கும் ஆட்சித் தரப்பினருக்கும் அதனால் பெரிய சேதங்கள் ஏதும் ஏற்படாது. அது தான் இப்பொழுது நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதற்கு நான்கு காரணங்கள் உண்டு.

1.பிராந்திய சக்தியான இந்தியா தொடக்கம் அவுஸ்திரேலியா, யப்பான் மற்றும் மேற்கு நாடுகள் அனைத்தும் இலங்கையின் முரண்பாட்டைத் தணிவு நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்றே வலியுறுத்தின இன்னும் அப்படித்தான் சொல்கின்றன. நல்லிணக்கம், பகை மறப்பு, கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில் தீர்வை எட்டுங்கள் என்றே எல்லா நாடுகளும் வலியுறுத்துகின்றன. இதை செய்ய வேண்டியது அரசாங் கம் மட்டுமல்ல, நாட்டிலுள்ள அனைத்துத் தரப்பும் தான். முக்கியமாகத் தமிழ்த் தரப்புமாகும். ஆனால், இது நிகழவில்லை. இதனால் இந்த நாடுகள் அனைத்தும் இலங்கையின் இனப் பிரச்சினையில் தமது கவனக்குவிப்பை மட்டுப்படுத்தியுள்ளன. அதாவது இது தொடர்பாக அவை சீரியஸாக இல்லை. எனவே இலங்கை அரசை விடச் சர்வதேச சமூகத்தை நம்பிக் கொண்டிருக்கும் தமிழ்ச் சமூகத்துக்கே பாதிப்பும் ஏமாற்றமும் ஏற்படும்.

2.செயற்பாட்டு அரசியல் இல்லாதொழிந்து விட்டது. இதனால் அரசின் ஒடுக்கு முறையையும் இனவாத நடவடிக்கைகளையும் தடுத்து நிறுத்தும் பலமற்றுப் போனது. ஆகவே அரசின் இனவாதச் செயற்பாடுகளை எந்த வகையிலும் மட்டுப்படுத்த முடியாத நிலை உருவாகியுள்ளது. அரகலய போன்றதொரு மக்கள் போராட்டத்தை (சர்வதேச சமூகத்தின் ஆதரவோடு) மேற்கொள்வற்கு தமிழ்ச் சமூகத்தினால் முடியுமா? முடியாது என்பதே வெளிப்படையான பதில். காரணம், அப்படியான அரசியற் கூருணர்வும் அர்ப்பணிப்பு மனப்பாங்கும் இன்று தமிழர்களிடத்தில் இல்லாதொழிந்துள்ளது.

3.பாதிக்கப்பட்ட மக்களையும் பிரதேசங்களையும் மீள்நிலைப்படுத்துவதற்கான பணிகளைச் செய்வதற்கு அரசாங்கம் இடமளிக்கவில்லை என்றொரு புலுடா தொடர்ந்து விடப்படுகிறது. ஆனால், இதைக் கடந்து பலர் தனியாகவும் கூட்டாகவும் பல விதமான பணிகளைச் செய்து கொண்டுதானிருக்கிறார்கள். எந்த அரசியற் கட்சியையும் விடத் தனியாட்களாகவும் அமைப்புகளாகவும் செய்து வரும் பணி பெரிது. இதைச் சிவில் செயற்பாட்டாளர்களும் பல்கலைக்கழக மாணவர் சமூகமும் அரசியற் கட்சிகளும் செய்யாது ஒதுங்கின. இதனால் தாம் கையறு நிலைக்குள்ளாகியுள்ளதாகத் தமிழர்களிற் பெரும்பாலானோர் சிந்திக்கின்றனர். இதை எதிர்கொண்டு எழுவதற்குப் பதிலாக தாம் தப்பித்தால் போதும் என்று விலகிச் செல்கின்றனர்.

4.தமிழ் மக்கள் சமாதானத்திலும் அமைதித் தீர்விலும் பற்றுக் கொண்டவர்கள். அதையே அவர்கள் நாடுகிறார்கள் என்ற நம்பிக்கை பிற சமூகங்களிடம் வலுப்பெறவில்லை. தாம் சமாதானத்தின் கதவுகளைத் திறந்து வைத்திருக்கிறோம் என்று சத்தியம் செய்தாலும் அதை நம்பக்கூடிய சூழல் இன்னும் பிற சமூகங்களிடம் உருவாகவில்லை. இதைப் பற்றிய மீளாய்வும் கள ஆய்வும் மிக அவசியமானது. சமாதானத்திலும் தீர்விலும் மெய்யாகவே எமக்குப் பற்றிருக்குமானால் இந்த ஆய்வைச் செய்து, அதற்கான பரிகாரமும் காணப்பட வேண்டும். இல்லையெனால் இந்த மாதிரி அணிகள், குழுக்கள், பிரிவுகள் என்றே நிலைமை நீடிக்கும்.

Friends MATRIMONY

உங்கள் திருமணத் தேடலுக்கோர் முற்றுப்புள்ளி...

10,000க்கு மேற்பட்ட வரன்கள் கையிருப்பில்! 10,000+

இலங்கைத் தமிழர்களுக்கான உலகளாவிய திருமண இணையத்தளம்.



கனடாவில் வசிக்கும் வயது 40, (Divorced) Hindu, Vellaler, Bachelor's Degree, வரை படித்த மணமகளுக்கு பொருத்தமான வரனை எதிர்பார்க்கின்றோம். (FMID 120566)

கனடாவில் வசிக்கும் வயது 33. (Single) Hindu, Vellaler, Diploma, வரை படித்த மணமகனுக்கு பொருத்தமான வரனை எதிர்பார்க்கின்றோம். (FMID 120556)

கனடாவில் வசிக்கும் 23 வயது முதல் 45 வயது வரையான (Catholic / Christian) High School, Diploma, Bachelor Degree, Master Degree, PHD, வரை படித்த மணமகன்களுக்கு (Single / Divorced / Annulled) பொருத்தமான வரனை எதிர்பார்க்கின்றோம்.

- +1 416 477 2259
  +1 647 709 1761
  +1 647 709 1536
  +1 416 477 6854
- GTA Square- 5215 Finch Ave. E. Unit 257
- friendsmatrimonym@gmail.com

Mon to Fri
11AM to 6PM
Sat
12PM to 6PM

www.friendsmatrimony.com

# 6வது இனிய பிறந்த நாள் நல்வாழ்த்துகள்



## கனடாவில் வசிக்கும்
## திரு திருமதி பிரசாந்தன் சாமினி இணையர்களின்
## செல்வப்புதல்வி வெண்பா

கனடாவில் வசிக்கும் திரு திருமதி பிரசாந்தன் சாமினி இணையர்களின் செல்வப் புதல்வி வெண்பா பிரசாந்தனின் ஆறாவது பிறந்த நன்நாள் 18 மே 2024 சனிக் கிழமையாகும். அன்றையதினம இனிய பிறந்த நன் நாளை தனது இல்லத்தில் மிக எளிமையாகக் கொண்டாடிய செல்வி வெண்பா அன்றைய தினம் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து முல்லைத்தீவு புனிதபூமி பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார். அகவை ஆறு காணும் செல்வி வெண்பா பல்கலையும் கற்றுப் பார் போற்றும் பைந்தமிழ் மகளாக வாழ வேண்டுமென வாழ்த்தும் அவரது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து வாழ்க வளர்கவென வாழ்த்துகின்றார்கள்.

செல்வி வெண்பா பிரசாந்தன் வாழ்க வளமுடனும்! நலமுடனும்! தமிழுடனும்!

வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START





Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  Give you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation



Over 20 Years Experience in the field of Insolvency

Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# ஒஸ்லோ இரு தரப்பாலும் அங்கீகரிக்கப்பட்ட பிரகடனமா? அல்லது நிலைப்பாட்டு ஆவணமா?

ஈழத்தமிழரது அரசியல், மீளெழுச்சி பெற முடியாத அறிவியல் வறுமைக்குள் அகப்பட்டுள்ளதை காணமுடிகிறது. ஈழத்தமிழ் அரசியல் கட்சிகளும் அதன் தலைமைகளும் அவ்வப்போது வேறுபட்ட கோணத்தில் தந்திரோபாயங்களை மேற்கொண்டாலும் அவை அனைத்துமே விரும்பியோ, விரும்பாதோ எதிரிக்கு சேவையாற்றுவதாகவே தெரிகிறது.

அத்தகைய தெரிவுகளில் கட்சி நலன் முதன்மையானதாகத் தோன்றினாலும் கணிசமான தீர்மானங்கள் தனிப்பட்ட நலன் சார்ந்து எடுக்கப்படுகிறது. அத்தகைய தனிப்பட்ட நலன்கள் தேசியம் என்ற ஒற்றைச் சொல்லுக்கூடாக கையாளப்படுகிறது. இத்தகைய ஏமாற்றுத்தனத்து



க்குள் கட்சிகள் மட்டுமல்ல, கட்சிகளின் உறுப்பினர்கள் மட்டுமல்ல அத்தகைய நலன் விரும்பிகளது ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் சேர்ந்து செயல்படும் நிலையையே ஈழத் தமிழர் தமிழ் தேசியம் என்று கருதுகின்ற நிலைக்கு வழியமைக்கிறது. இக்கட்டுரையும் மீளப் பேசப்படும் ஒஸ்லோ நிலைப் பாட்டு ஆவணம் (Oslo Communique) பற்றியதாக அமையவுள்ளது.

ஒஸ்லோ நிலைப்பாட்டு ஆவணத்தின் உள்ளடக்கத்திலுள்ள பிரதான விடயங்களை தெரிந்து கொள்வது அவசியமானது. அதன் பிரகாரம் நோர்வே தலைநகரில் நடைபெற்ற மூன்றாம் கட்டப் பேச்சுகளில் இலங்கை அரசாங்கத் தரப்பு, விடுதலைப்புலிகள் தரப்பு மற்றும் நோர்வே மத்தியஸ்ததரப்பு என்பன ஒன்றிணைந்து நிலைப்பாட்டு ஆவணத்தை தயாரித்தன. அதனை நோர்வே தரப்பு அறிக்கையாக (05,டிசம்பர்,2002) வெளியிட்டது.

அதில் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்விடப் பிரதேசங்களில் உள்ளக சுபநிர்ணயக் கொள்கை தொடர்பில் கண்டறியப்பட்டதொரு தீர்வினை ஐக்கிய இலங்கைக்குள் ஒரு சமஷ்டிக் கட்டமைப்பினை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வதற்கு இக்குழுக்கள் உடன்பட்டன. இத்தீர்மானமானது, அனைத்து சமூகங்களுக்கும் ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இருக்க வேண்டும் என்பதையும் இரு தரப்புகளும் ஏற்றுக் கொண்டன.

இந்த இலக்கினை வழிகாட்டியாகக் கொண்டு இரு தரப்புகள் பின்வரும் பிரச்சினைகள் போன்ற ஆனால் மட்டுப் படுத்தப்பட்டிராத முக்கிய அரசியல் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல்களை ஆரம்பிப்பதற்கு உடன்பட்டன. அதன்படி, மத்திக்கும் பிராந்தியத்திற்கும் இடையிலானதும் மத்திக்குள்ளுமான அதிகாரப் பரவலாக்கல், புவியியல் சார் பிராந்தியங்கள், மனித உரிமைப் பாதுகாப்பு, அரசியல் மற்றும் நிர்வாகப் பொறிமுறைகள், பொதுமக்கள் நிதி மற்றும் சட்டம் ஒழுங்கு என்பன முதன்மைப்படுத்தப்பட்டன. இவை சார்ந்து கலந்துரையாடல் நிகழ்ந்துள்ளதை அந்த அறிக்கையில் கண்டு கொள்ளக்கூடியதாக உள்ளது. இதன் முழுமையை 'போரும் சமாதானமும்' என்ற விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் நூலில் கண்டு கொள்ள முடியும்.

இதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை தமிழ் பொது வேட்பாளர் பொறுத்து வெளியிட்ட அறிவிப்பின் உள்ளடக்கத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இணைந்த வடக்கு, கிழக்கு சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வுடன் கூடிய தீர்வு என்பது தான் சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசும் சேர்ந்து இணங்கிக் கொண்ட கடைசி விடயம். அதற்கு பாதிப்பு, குந்தகம் ஏற்படுத்தும் விதத்திலான முடிவு எதையும் தமிழ்பொது வேட்பாளர் என்ற விஷப் பரீட்சை ஊடாக செய்வதற்கு தமிழரசுக் கட்சியினர் இணங்கி விட, இறங்கி விடக் கூடாது என்பதாக அமைந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையின் அறிக்கையில் அதிகமான சந்தேகங்கள் எழுப்பப்படுகிறது. அதன்படி, ஒன்று, ஒஸ்லோ நிலைப்பாட்டு ஆவணம் இரு விடுதலைப்புலிகளாலும் அரசாங்கத்தாலும் எட்டப்பட்ட உடன்படிக்கையா என்பது முதன்மையானதாகும். நோர்வேயின் பேச்சுவார்த்தையாளர்கள் ஒவ்வொரு பேச்சுகளுக்கும் பின்னர் வெளியிடும் பத்திரிகை அறிவிப்பாகவே இந்த விடயத்தை முன் வைத்துள்ளனர். இதனை நோர்வே பிரகடனம் அல்லது ஒஸ்லோ பிரகடனம் என்றும் அழைத்துள்ள தன்மை காணப்பட்டது.

ஆனால் உடன்படிக்கையாகவோ அல்லது பிரகடனமாகவோ இதனைக் கொள்ளலாமா என்பது அதன் வடிவத்தைப் பார்க்கும் போது தெளிவாகத் தெரிகிறது. உடன்பாடு என்பது இரு தரப்பாலும் ஒப்பமிட்டிருக்க வேண்டும். 2015 போல் இதயங்களால் எட்டப்பட்ட உடன்பாடு என்று கூட 2002 ஊடக அறிக்கையைப் பற்றி எந்தத் தகவலும் இரு தரப்பாலோ அல்லது ஒரு தரப்பாலோ முன்வைக்கப் படவில்லை. உடன்பாடு எட்டப்படுவதற்கு ஆராயும் முயற்சியாக மட்டுமே தெரிகிறது. இதனை பிரகடனமாகவோ, உடன்பாடாகவோ கொள்வதற்கான முனைப்புகள் எதனையும் கொண்டிருக்கவில்லை என் பது அதன் பிரதியை பார்க்கும் போது கண்டுகொள்ள முடிகிறது. ஆனால் அது ஒரு தெளிவான வடிவத்தை ஆராய தலைப்பட்டுள்ளதை கண்டு கொள்வது அதிகம் கடினமானதாகத் தெரியவில்லை. இது ஒரு நிலைப்பாட்டு ஆவணமாகவே தெளிவாகத் தெரிகிறது.

இரண்டு, இதனை ஒரு பிரகடனமாக அல்லது உடன்பாடாக அங்கீகரிக்கப் பட்டிருந்தால் அதன் கீழ் பயணிப்பது தமிழ் மக்களுக்கு பொருத்தமானதும் அவசியமானதுமாகும். சுயநிர்ணயம், உள்ளகம், வெளியகம் என்பதற்கு அப்பால் சுயநிர்ணயம் தனித்துவமானது. சுயநிர்ணயத்தை உள்ளக வடிவத்தில் ஏற்றுக் கொள்வதென்பது கூட தமிழ் மக்களின் தனித்துவத்தை அடையாளப் படுத்த போதுமானது. அதனது அர்த்தம் முழுமையாக விளங்கிக் கொள்வது மட்டுமல்ல நடைமுறைத் தன்மையையும் உறுதிப்படுத்தும் போது மட்டுமே சாத்தியமான வடிவத்தை எட்டக் கூடியதாக அமையும். அதனால் தமிழ் மக்கள் சுயநிர்ணயத்திற்கு உரித்துடையவர்கள் என்பதை காட்டுவதற்கான அங்கீகாரமாகவே பேசப்பட்ட விடயம் உள்ளது. ஆனால் அது இரு தரப்பாலும் ஏற்றுக் கொள்ளாத வரையும் அதன் உள்ளடக்கம் அனைத்தும் ஆய்வுக்குரியது.

அதாவது சாத்தியமாகுமா அல்வது இல்லையா என்பதும் அனைத்து சமூகங்களும் ஏற்றுக் கொள்வதில் தங்கியுள்ளது என்று அறிக்கையே கூறுகிறது. அதனால் உடன்பாடு எட்டப்படாத ஒன்று பற்றி அதனை எப்படி பிரகடனமாகக் கொள்வது, அதன் மீது எப்படி நம்பிக்கை கொள்வது, உலகம் இப்படி ஒன்றை ஏற்றுக் கொண்டுள்ளது என்று கூறிவிட முடியுமா? அல்லது இலங்கை அரசு இவ்வாறான உடன்பாட்டை தான் எட்டியுள்ளதாக கூறிவிட முடியுமா?

மூன்று, இணைந்த வடக்கு, கிழக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வை நோக்கி பயணிப்பதே தமிழ் மக்களது அபிலாசையாக உள்ளது. நோர்வேயின் பிரகடனத்தின் கீழ் அவ்வகைத் தீர்வு ஏற்றுக் கொள்ளப்பட்டதென்பதை 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு வரைபில் ஏன் உள்ளடக்கப்படவில்லை என்பது தமிழ் மக்களிடமுள்ள கேள்வியாகும்.

ஏக்கிய ராச்சியம் என்பதற்கு அதிக விளக்கமளித்த தரப்புகள் 2002 பிரகடனத்தை இலகுவாக உள்வாங்கியிருக்க முடியும். ஏன் அப்போது அத்தரப்புகளால் அத்தகைய விடயத்தை முன்னகர்த்த முடியவில்லை என்பது இன்னோர் கேள்வியாகும். இதற்கு யாரும் ஏதாவது சப்பைக்கட்டு விளக்கமளிக்க முயலலாம். ஆனால் எதனை குறிப்பிட்டாலும் அக்காலப்பகுதியில் நோர்வே பிரகடனத்தை உள்வாங்காததன் நோக்கம் மட்டுமல்ல தற்போது அத்தகைய பிரகடனத்தை முன்னகர்த்த வேண்டிய தேவை தவிர்க்க முடியாது அத்தகைய தரப்புகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனை முன்னகர்த்தி தமிழ் பொது வேட்பாளர் என்ற கருத்தியலை முடிவுக்கு கொண்டு வர முயல்கின்றனர். தமிழ் பொது வேட்டாளர் என்பது தமிழர் அரசியலை உயிர்ப்பிக்கும் உத்தி ஒன்றாக உள்ளது. இதில் வெற்றி, அதிக வாக்குகள் என்றெல்லாம் அதிக குழப்பம் கொள்ளப்படுகிறது.. ஆனால் இதற்குள் அடங்கியுள்ள தமிழர் அரசியல் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். அப்படியாயின் அனைவரும் இணைந்து அத்தகைய தமிழர் அரசியலை ஏன் வென்றெடுக்க முடியாது என்ற கேள்வி இயல்பானது. நிராகரிப்பவர்கள் ஒன்றிணைந்து அதிக வாக்குகளை எட்ட முடியும். ஏன் அதற்கு அத்தகைய தரப்புகள் முன் வரத் தயாரில் வைத்துள்ளனர்.

தமிழ் அரசியல்வாதிகள் மட்டும் கொழும்புடன் சங்கமிக்கவில்லை. தமிழ் மக்களில் ஒரு குறிப்பிடப்பட்ட தரப்பினர் கொழும்பு அரசியலுடன் சங்கமித்து விட்டார்கள். எதிர்காலத்தில் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாகவோ, சுயநிர்ணயத்திற்கு உரித்துடையவர்களாகவோ வடக்கு, கிழக்கு தமிழர் தேசம் என்று கருத முடியாத நிலை வேகமாக அரங்கேறுகிறது. இதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சியினரும் பொறுப்புடையவர்கள் என்பதை நிராகரிக்க முடியாது.

தமிழ் பொது வேட்பாளரை நிராகரிக்கும் தரப்புகளிடம் இருக்கும் தமிழ் மக்களது தேசியம், ஐக்கியம், சுயநிர்ணயத்திற்கு அமைவான மாற்றுத் திட்டத்தை முன்வைக்கக் கோருவது தேவையாக உள்ளது. தமிழ் மக்களுக்கு ஆதரவான நிலையை தென்னிவகையும் கருத்தில் கொள்ளாது, பிராந்திய அரசான இந்தியாவும் அதனை ஒருபோதும் தமிழ்

**கட்டுரையாளர்:**
**இலங்கையில் இருந்து**
**பேராசிரியர்**
**– K.T.கணேசலிங்கம் –**



மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்காது, சர்வதேச அரசியல் சூழலும் அதற்கு இசைவாக செயல்படாது. தமிழ்க் கட்சிகளும் தமிழ் மக்களின் அரசியல் விடயத்தில் சரியான உத்திகளை வகுத்துச் செயல்படாது. அப்படியாயின் தமிழ் மக்களது அரசியல் இருப்பு அடிமையாகி, சிதைந்து, அழிந்து போவது மட்டும் தானா?


நான்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது என்பது முட்டாள்தனமான யோசனை மற்றும் பைத்தியக்காரத் தனமான திட்டமும் கூட. இது தமிழ் மக்களின் எதிர்காலத்தை ஆபத்திற்குள் சிக்கவைக்கும் விஷப்பரீட்சை என்று குறிப்பிட்டுள்ளார். தமிழ் மக்களை ஒன்றிணைப்பது முட்டாள்தனமா? தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்க முயல்வது தவறான அணுகுமுறையாக இருக்கலாம். ஆனால் தமிழ் மக்களது அரசியலை மீளமைக்க தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதன் மூலம் சாத்தியமாக்க முடியும் எனக் கருதுவது பைத்தியக்காரத்த னமானதாக அமையுமா? இது விஷப்பரீட்சை எனில் அரசியல் என்பதெல்லாம் எத்தகைய பரீட்சை? சாத்திய மற்றதை சாத்தியமாக்குவது அரசியல் என்பது அடிப்படையான நியதியாகும்.

அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து தமிழர் அரசியலை மீட்க முடியுமென கருதுவது புரட்சிகரமான பரிசோதனையாகும். அத்தகைய பரிசோதனையில் ஈடுபடுவதென்றும் முட்டாள்தனமானதாக தெரியவில்லை. இதயத்தால் ஒன்றிணைந்து எட்டப்பட்ட உடன்பாட்டின் முடிவில் அடைந்த நிலையை விட அரசியலுக்கான பரிசோதனை ஒன்றும் பைத்தியக்காரத் தனமாக தென்படவில்லை. நேசியம், தாயகம், சுயநிர்ணயத்தைக் கோருவது ஈழத்தமிழர் மத்தியில் முட்டாள்தனமானதாகவும் பைத்தியக் காரத்தனமானதாகவும் ஆகி விட்டதென்பதே எஞ்சியுள்ள கட்சி அரசியலாக உள்ளது.


எனவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் தமிழரசுக் கட்சிக்குள் தலைமைக்கான போட்டியில் தேர்தல் வேண்டாம் என்ற போதும் கட்சியின் பிணக்கை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டாம் என்ற போதும் அதனை கட்சி உறுப்பினர்கள் யாரும் கேட்கவில்லை. தற்போது எப்படி தமிழ் வேட்பாளருக்காக செயல்படும் தமிழரசுக்கட்சி உறுப்பினர்களைக் கோருவது? எப்படி அதனை நியாயப்படுத்துவது?

ஒஸ்லோ பிரகடனமும் அதற்கான கோரிக்கையும் தமிழ் பொது வேட்பாளரை பலவீனப்படுத்தும் செய்முறையாகவே தென்படுகிறது. தமிழ் பொது வேட்பாளரை தமிழ் மக்களிடம் வாக்குக் கோரும் அரசியல் கட்சிகளே முன்னின்று செயல்படுத்தியிருக்க வேண்டும். அதனை அவர்கள் தட்டிக்களித்தாலேயே சிவில் அமைப்புகள் முன்வந்துள்ளன. சிவில் அமைப்புகளது முயற்சியையும் பலவீனப்படுத்த முயல்வது தமிழ் மக்கள் அரசியலை பலவீனப்படுத்துவதாகவே அமையும். தமிழ் மக்களின் அரசியல் பலவீனம், தமிழ் அரசியல் கட்சிகளை பலவீனப் படுத்தும்.


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! நிதானமாக பேசுவது காரிய வெற்றிக்கு உதவும். மற்றவர்களின் காரியங்களில் ஈடுபடும் போது கவனம் தேவை. திட்டமிட்டு எதையும் செய்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் கூடுதல் கவனம் தேவை. வாடிக்கையாளர்களை அனுசரித்து நிதானமாக பேசுவது நன்மை தரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். மேலதிகாரிகளுடன் கவனமாக பேசுவது நல்லது.




ரிஷபராசி அன்பர்களே! சில குழப்பங்கள் நேர்ந்தாலும் இது வரை நடக்காமல் இருந்த காரியத்தை சிறப்பாக செய்து முடித்து மனநிம்மதி அடைவீர்கள். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் நடந்து முடியும். முக்கிய நபர்கள் மூலம் எதிர்பார்த்த உதவியும் கிடைக்கும். பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் நடக்க தேவையான உதவிகள் கிடைக்கும்.





மிதுனராசி அன்பர்களே! சில சங்கடங்கள் நேரலாம். கெட்ட கனவுகள் உண்டாகலாம். எதிர்பாராத இடமாற்றம் ஏற்படும். உஷ்ண சம்பந்தமான நோய் ஏற்படலாம். எதிர்பார்த்த பணம் கைக்கு வர தாமதமாகும். இடம் பொருள் அறியாமல் பேசுவதால் அடுத்தவர்களிடம் மனஸ்தாபம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் திடீர் செலவுகள் உண்டாகும். வீண் அலைச்சல் இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் தேவையற்ற பயணம் செல்ல நேரலாம்.





கடகராசி அன்பர்களே! எந்த விஷயத்தையும் எளிதாக எடுத்து கொள்வீர்கள். சுக்கிரன் சஞ்சாரத்தால் அலைச்சலை சந்திக்க நேரிடும். எதிர்பாலினத்தாரிடம் பழகும் போது கவனம் தேவை. விருப்பத்திற்கு மாறான சம்பவங்கள் நடக்கலாம். தொழில் வியாபாரத்தில் குறிப்பாக கூட்டு தொழிலில் இருப்பவர்கள் எச்சரிக்கையாக செயல்படுவது நல்லது.கணவன். மனைவிக்கிடையே நீடித்து வந்த மனவருத்தம் நீங்கி சந்தோஷமான சூழ்நிலை ஏற்படும்.





சிம்மராசி அன்பர்களே! அறிவு திறமை வெளிப்படும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண்டாகும். அடுத்தவர்களின் குற்றச்சாட்டுக்கு ஆளாக நேரிடலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும். அடுத்தவர்கள் கூறும் ஆலோசனைகளை ஏற்கும் போது கவனம் தேவை. அவற்றை ஆராய்ந்து பார்த்து செய்வது நல்லது. புதிய பொறுப்புகள் கிடைக்கும். புதன்கிழமை அவதானம் தேவை.




கன்னிராசி அன்பர்களே! சுபச் செலவுகள் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியங்கள் நன்றாக நடந்து முடியும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அடுத்தவர் பிரச்னைகளில் தலையிடாமல் ஒதுங்கி செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்காமல் இருப்பது நல்லது. குடும்பத்தில் சுபகாரியங்கள், மகிழ்ச்சியான கொண்டாட்டங்கள் இருக்கும்.




துலாம்ராசி அன்பர்களே! மனதில் குறிக்கோளை வைத்து துணிவுடன் செயலாற்றுவீர்கள். உங்கள் பேச்சு திறமையால் பல காரியங்கள் சிறப்பாக நடந்துமுடியும். முக்கிய பிரமுகர்களின் அறிமுகம் அவர்களால் உதவி கிடைக்கலாம். நீங்கள் செய்யும் காரியங்களுக்கு உதவுவதற்காக யாராவது ஒருவர் துணை நிற்பார். தொழில் வியாபாரம் விரிவாக்கம் செய்ய எடுக்கும் முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். போட்டிகள் விலகும். உத்தியோகஸ்தர்களுக்கு உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரியங்களை சாதிப்பீர்கள். வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பதற்கான வாய்ப்புகள் வரும். வெளியூர் பயணங்கள் சாதகமான பலன் தரும். மற்றவர்களின் நலனுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். கவுரவம், அந்தஸ்து உயரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இடமாற்றம் உண்டாகலாம்.








தனுசுராசி அன்பர்களே! எதிலும் லாபமான நிலை காணப்படும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். எதிலும் தயக்கமோ பயமோ இருக்காது. தந்தையின் உடல்நிலையில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் லாபம் கூடும். ஆனால் கைக்கு பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மேன்மை அடைவார்கள். குடும்பத்தில் இருப்பவர்கள் உங்கள் விருப்பத்திற்கு மாறாக எதையும் செய்வார்கள்




மகரராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை தைரியமாக உறுதியுடன் செயல்படுத்துவீர்கள். உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.வீடு, மனை வாங்க திட்டமிடுவீர்கள். எடுக்கும் காரியம் சிறிது முயற்சிக்கு பின் நடைபெறும். தொழில் வியாபாரம் ஏற்ற இறக்கமாக இருந்தது இனி சீராகும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டி இருக்கும். தேவையான வசதி வாய்ப்புகள் கிடைக்கும்.




கும்பராசி அன்பர்களே! எந்த காரியத்தையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்து வெற்றி பெறுவீர்கள். மனதில் தைரியமும், தன்னம்பிக்கையும் பிறக்கும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நண்பர்கள், உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். தந்தையுடன் மனஸ்தாபம் ஏற்படலாம். கணவன், மனைவிக்கிடையே ஒற்றுமை காணப்படும். நம்பிக்கையுடன் செயலாற்றி நன்மை அடைவர்.




மீனராசி அன்பர்களே! எதையும் சாதிக்கும் திறமை உண்டாகும். எடுத்த காரியத்தை செய்யும் போது எது சரி, எது தவறு என்று தடுமாற்றம் ஏற்பட்டாலும் திறமையால் அதனை செய்து முடிப்பீர்கள். பண வரவு எதிர்பார்த்தபடி இருக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்ற பாதையில் செல்லும். நிதி உதவி கிடைக்கும். வாடிக்கையாளர் மத்தியில் மதிப்பு கூடும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கலாம்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## இலங்கையை விசேட கண்காணிப்புப்..

(8ம் பக்கத் தொடர்ச்சி) சர்வதேச நியமங்களுக்கு அமைவாகத் திருத்தியமைக்குமாறு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிக்கும்படி கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகளிடம் வலியுறுத்தல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51-1 தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான அழுத்தம் பிரயோகித்தல் ஆகிய நடவடிக்கைகளை அமெரிக்க அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

அதேபோன்று இலங்கையில் தற்போது நிலவும் மதச்சுதந்திரம் சார்ந்த பிரச்சினைகளை கருத்துக்கோரல், சந்திப்புக்கள், கடிதங்கள் ஊடாகக் கேட்டறிவதற்கு அமெரிக்க காங்கிரஸ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவ்வருடாந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## உலக ஒழுங்கின் வீழ்ச்சி

(16ம் பக்கத் தொடர்ச்சி) முடக்கி வைப்பது தான் பிரதான வல்லரசுகளின் இலக்காக இருக்கிறது. அண்மையில் அமெரிக்கத் தூதுவர் ஜீலி சங், இலங்கையில் இடம்பெற்ற போர்க்கால மீறல்களுக்கு பொறுப்புக் கூறுவது தொடர்பாக வெளியிட்ட கருத்துக்கு ரஷ்ய தூதரகம் எதிர்ப்பை வெளியிட்டிருக்கிறது.

மனித உரிமை விவகாரங்களை வைத்து இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் சில நாடுகள் தலையீடு செய்ய முனைவதாகவும், மேற்குலகம் மனித உரிமைகள் விடயத்தில் இரட்டை வேடம் போடுவதாகவும், குற்றம் சாட்டி அந்த அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. பிற நாடுகளின் உள்விவகாரங்களில் அமெரிக்கா நாடுகள் தலையிடுவதாக கூறுகின்ற ரஷ்யா, உக்ரேயின் மீது படையெடுப்பை நடத்தி போரை நடத்துவது மட்டும் எந்த வகையில் நியாயமானது? தாய்வானின் இறைமையை சீனா மீறுவதும், அமெரிக்கா, கனடா, இந்தியா போன்ற நாடுகளின் தேர்தல்களில் சீனா தலையீடு செய்ய முனைவதும் இதே போன்ற, நியாயங்களுக்குட்பட்டது தான். இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் ஐ.நா. அமைப்பு உருவாக்கப்பட்ட போது, ஏற்படுத்தப்பட்ட உலக ஒழுங்கு நியாயமானது அல்ல.

ஐ.நா. பாதுகாப்பு சபையில் உலகப் போரில் வெற்றி பெற்ற ஐந்து பிரதான நாடுகளுக்கு, வீட்டோ அதிகாரம் கொடுக்கப்பட்டது எல்லா நாடுகளையும் சமமாக நோக்கும் வகையில் பாதுகாப்புச் சபை உருவாக்கப்படவில்லை. அங்கிருந்து தொடங்கிய சமத்துவமற்ற நிலை தான் இன்று விதிமுறைகளை கொண்டு உருவாக்கப்பட்ட உலக ஒழுங்கில், ஏற்பட்டிருக்கின்ற வீழ்ச்சிக்கு காரணம்.

நாடுகள், இனங்கள், மதங்கள் என்று இல்லாமல் நீதி, பொறுப்புக் கூறல், அமைதி போன்றவற்றை இலக்காகக் கொண்ட விதிமுறைகளை உள்ளடக்கிய உலக ஒழுங்கு உருவாக்கப்படவில்லை. அந்த குறைபாட்டின் தொடர்ச்சிதான் இன்றைய நம்பிக்கை வீழ்ச்சி நிலைக்கு காரணம்.

இந்த நிலை மாறவேண்டுமானால் அதிகாரத்துவ சக்திகளின் விதிமுறைகளால், உருவாக்கப்பட்ட உலக ஒழுங்கு முற்றாக மாற்றி அமைக்கப்பட வேண்டும். அது சாத்தியமான ஒன்றாக இருக்குமா?

## கேப்பாப்பிலவில் போராட்டத்தில் ஈடுபட்ட

(7ம் பக்கத் தொடர்ச்சி) இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்தப் பிரச்சினையை விரைவாகக் கண்டறிந்து அதற்குத் தீர்வு காணுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கவுள்ளதாக தெரிவித்தார்.

அத்துடன், வட மாகாணத்தில் பெருமளவிலான காணிகளை விடுவிக்க அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், எஞ்சியுள்ள காணி பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண்பதே தமது எதிர்பார்ப்பு எனவும் குறிப்பிட்டார். போராட்டத்தில் கலந்து கொண்ட தம்மை சந்தித்து, தமது பிரச்சினைகளைக் கேட்டறிந்து தீர்வு வழங்குவதாக ஜனாதிபதி உறுதியளித்தமைக்கு, போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் தமது நன்றியை வெளிப்படுத்தினர்.

## தமிழ்ப் பொது வேட்பாளர்

(9ம் பக்கத் தொடர்ச்சி) போன்ற தேசியவாத சிந்தனை யாளர்கள் அழுத்திக் கூறுகிறார்கள். பண்பாட்டு மறுமலர்ச்சியே விடுதலை யின் திறவுகோல். தமிழ் மக்கள் மத்தி யில் ஒரு புதிய பண்பாட்டு விழிப்பை ஏற்படுத்த வேண்டும். இப்போது நிலவும் அவநம்பிக்கைகள், குற்றச் சாட்டுகள், சூழ்ச்சிக் கோட்பாடுகள் போன்ற வற்றிலிருந்து தமிழ் மக்களை விடுவித்து, உருகிப் பிணைந்த ஒரு தேசமாகத் தமிழ் மக்களைக் கட்டி யெழுப்ப வேண்டும்.

ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்தும் அரசியல் தெரிவானது அதைச் செய்யுமாக இருந்தால் கடந்த 15 ஆண்டுகளில் தமிழ் மக்கள் பெற்ற மகத்தான வெற்றியாக அது அமையும்.

## கார்த்திகைப் பூ பொறிக்கப்பட்ட செருப்புகளை

(24ம் பக்கத் தொடர்ச்சி) போரில் உயிரிழந்த தமிழ் மக்களை நினைவு கூர்ந்து கார்த்திகை மலரை அலங்கரித்த பல சந்தர்ப்பங்களில் அந்த அலங்காரத்தை பொலிஸார் அழித்துள்ளனர். கார்த்திகை மலரை பேஸ்புக்கில் பகிர்ந்த சிலர் பொலிஸாருக்கும் பதில் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கார்த்திகை பூவை பயன்படுத்தும் தமிழ் மாணவர்களை பொலிஸார் ஊடாக அடக்கும் பேரினவாத அரசாங்கம், கார்த்திகை பூ பொறிக்கப்பட்ட கால் செருப்புகளை அனுமதிக்கும் அந்த மனநிலையை தமிழர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென வடமாகாணசபையின் முன்னாள் விவசாய அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

"வடக்கில் அவர்கள் கார்த்திகை பூவை, மாணவர்கள் பயன்படுத்தினால், இல்ல விளையாட்டுப் போட்டிகளில் இல்ல அலங்காரங்களுக்கு பயன்படுத்தினால் அதனை இரும்புக் கரம் கொண்டு பொலிஸாரின் கரத்தால் அடக்கும் அரசாங்கம் தென்னிலங்கையில் காலுக்கு கீழே மிதிபடுகின்ற அளவுக்கு இந்த கார்த்திகை பூ பொறிக்கப்பட்ட கால் செருப்புகளை அனுமதிக்கும் என்று சொன்னால் இந்த பேரினவாத அரசாங்கத்தின் மனநிலையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதனை உற்பத்தி செய்த நிறுவனம் கால் செருப்பை விற்பனையில் இருந்து மீளப் பெற்று இதுத் தொடர்பாக வருத்தம் தெரிவிக்கும் வரையில் அந்த நிறுவனத்தின் உற்பத்திகளை புறக்கணிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன் எனவும் தெரிவித்துள்ளார்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com














# கார்த்திகைப் பூ பொறிக்கப்பட்ட செருப்புகளை சந்தையில் இருந்து அகற்றுமாறு தமிழ் மக்கள் சார்பில் கோரிக்கை! இன்றேல் புறக்கணிப்பு!

வடக்கில் காட்சிப்படுத்தப்பட்ட போது பொலிஸாரால் கேள்வி எழுப்பப்பட்ட மலரான கார்த்திகைப் பூ மிகப் பெரிய வர்த்தக நிறுவனத்தால் நாடு முழுவதும் வர்த்தக நடவடிக்கைகளுக்கு தடையின்றி பயன்படுத்தப்படுவது சர்ச்சைகளை தோற்றுவித்துள்ளது.

நாட்டின் முதல் தர பாதணிகளை விளம்பரப்படுத்தும் வகையில் தெற்கில் உள்ள நிறுவனம் ஒன்று செருப்புகளில் தமிழ் தேசிய மலரான கார்த்திகை மலரின் உருவத்தை பொறித்துள்ளமையால் தமிழர்கள் மிகுந்த கவலையடைந்துள்ளனர்.

செருப்பு விற்பனை நிறுத்தப்படா விட்டால் அவற்றை தமிழர்கள் புறக்கணிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கார்த்திகை பூக்கள் பொறிக்கப்பட்ட செருப்புகளை சந்தையில் இருந்து உடனடியாக மீளப் பெறுமாறு காலணி தயாரிக்கும் நிறுவனத்திடம் தமிழ் அரசியல் கட்சி ஒன்றின் பேச்சாளர் சுகாஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழர்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் வெளியிடப்பட்டுள்ள கார்த்திகைப் பூ பொறிக்கப்பட்ட பாதணிகளை, உற்பத்தி நிறுவனம் அதனை மீளப்பெற வேண்டுமென விநயமாக வேண்டுகின்றோம்.என




தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரட்ணம் சுகாஸ் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு மீளப்பெறத் தவறும் பட்சத்தில் குறித்த நிறுவனத்தினுடைய உற்பத்திகளை புறக்கணிக்குமாறும் அவர் தமிழ் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். அவ்வாறு மீளப்பெறத் தவறும் பட்சத்தில், குறித்த நிறுவனத்தினுடைய உற்பத்திப் பொருட்களையும் அவற்றை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களையும் புறக்கணிக்குமாறு எம் உறவுகளைக் கோருகின்றோம்!

வட மாகாணசபையின் முன்னாள் விவசாய அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் செவ்வாய்க்கிழமை (மே 28) யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடாத்தி, காலணியில் கார்த்திகை பூ பொறிக்கப்பட்டமை தமிழ் மக்களை மிதிக்கும் வகையிலான செயற்பாடு என விமர்சித்துள்ளார்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஒரு புனிதமான பூவாக போற்றுகின்ற இந்த பூவை, காலில் போட்டு மிதிக்கின்றோம் என அவர்கள் சொல்லத் தக்க வகையில் அவர்கள் கால் செருப்பில் பயன்படுத்தியிருக்கின்றார்கள்.

தமிழர்கள் அதிகம் வாழும் வெள்ளவத்தை பகுதியில் உள்ள செருப்பு கடை ஒன்றில் கார்த்திகை மலரின் உருவத்தை பொறித்து வடிவமைக்கப்பட்ட காலணி கண்டுபிடிக்கப்பட்டதாக பல தமிழ் செய்தி இணையதளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த காலணிகள் பிரபல தனியார் காலணி தயாரிப்பு நிறுவனத்தின் தயாரிப்பு ஆகும். இது அதிக எண்ண்ணிக்கையிலான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு காலணி தயாரிப்புகளை விற்பனை செய்யும் நாட்டின் மிகப் பெரிய காலணி வர்த்தக சங்கிலியாகும்.

ஒரு தேசத்தை அவமதிக்கும் வகையில் கார்த்திகை மலரை பகிரங்கமாக பயன்படுத்த தென்னிலங்கை நிறுவனத்திற்கு எந்த தடையும் இல்லை என்றாலும், அதே பூவை மரியாதையுடன் பயன்படுத்தும் போது பாதுகாப்புப் படையினர் அதற்கு எதிராகச் செயற்பட்ட பல சந்தர்ப்பங்கள் உண்டு.

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் கடந்த ஏப்ரல் மாதம் நடை பெற்ற இல்ல விளையாட்டுப் போட்டிக்காக மாணவர்கள் இல்லங்களை வடிவமைக்கும் போது, யுத்த தாங்கி மற்றும் கார்த்திகை பூ வடிவங்களை பயன்படுத்தி அலங்காரங்களை மேற்கொண்டமையால் அவர்கள் இராணுவம், பொலிஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

தெல்லிப்பளை பொலிஸார் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை பொலிஸுக்கு அழைத்து அந்த படைப்புகள் தொடர்பில் விசாரணை நடத்தியிருந்தனர். (22ம் பக்கம்)




உ

அன்னை
ஸ்ரீ இராஜமகாமாரி துணை







# செருத்தனைப்பதி அருள்மிகு
# இராஜ மகாமாரி அம்மன் திருக்கோவில்
## புளியங்கூடல் , ஊர்காவற்றுறை
# பெருந்திருவிழா -2024



ஓம் சக்தி தாய்சக்தி
ஓம் சக்தி மகாசக்தி

அம்பிகை அடியார்களே!

செந்தமிழும் சைவமும் சிறந்தோங்கும் சப்த தீவில் விந்தைகள் புரிந்து, வியாபகமாய் எங்கும் நிறைந்து,இல்லையென்றிடாது வந்தார்க்கு வரம் வாரி வழங்கும் இராஜ அன்னையாய் எம் சகல செல்வங்களுக்கும் அதிபதியாய் புண்ணிய பதியாம் புளியங்கூடல் செருத்தனைப்பதியில் வீற்றிருந்து திருவருள் பாலிக்கும் அருள்மிகு இராஜ மகாமாரி அம்மனுக்கு குரோதி ஆண்டின் பெருந்திருவிழா மங்கலகரமான வைகாசி மாதம் 32ம் நாள் [14.06.2024] வெள்ளிக்கிழமை பூர நட்சத்திரமும், சித்த யோகமும் கூடிய காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினெட்டுத் தினங்கள் வெகு சிறப்பாக நடந்தேற மாற்றத்தின் மகாசக்தியாக விளங்கும் தாய்சக்தி ஸ்ரீ இராஜ மகாமாரி திருவருள் பாலித்துள்ளாள்.

## விழாக்கால நிகழ்வுகள்

| திகதி | கிழமை | திருவிழா | வாகனம் | உபய விபரம் |
|---|---|---|---|---|
| 13.06.2024 | வியாழக்கிழமை | மஹா கணபதி ஹோமம் | | காலை 06.30 மணிக்கு சமய தீட்சை, காலை 08.30 மணிக்கு விநாயகர் வழிபாடு, நவக்கிரக வழிபாடு, மாலை 05.15 மணிக்கு கிராம சாந்தி |
| 14.06.2024 | வெள்ளிக்கிழமை | 1ம்திருவிழா | [சிம்ம வாகினி – சிங்க வாகனம்] | கொடியேற்றம் காலை 10.00 மணிக்கு |
| 15.06.2024 | சனிக்கிழமை | 2ம் திருவிழா | [அலங்கார ரூபி– ஆனை வாகனம்] | |
| 16.06.2024 | ஞாயிற்றுக்கிழமை | 3ம் திருவிழா | [ஆனந்த வல்லி–ஆட்டுக்கடா வாகனம்] | |
| 17.06.2024 | திங்கட்கிழமை | 4ம் திருவிழா | [தாய் சக்தி– தாமரைப்பூ வாகனம்] | காலை உற்சவ மூர்த்திகளுக்கான சங்காபிசேகம், பாற்குடம் |
| 18.06.2024 | செவ்வாய்க்கிழமை | 5ம் திருவிழா | [அன்னபூரணி – அன்ன வாகனம்] | காலை துர்க்கை அம்மன் வழிபாடு, மாலை தேசிக்காய் விளக்கு வழிபாடு |
| 19.06.2024 | புதன்கிழமை | 6ம் திருவிழா | [கற்பக வல்லி – காமதேனு வாகனம்] | மூலமூர்த்தி சங்காபிஷேகம் |
| 20.06.2024 | வியாழக்கிழமை | 7ம் திருவிழா | [முக்கண்ணன் தேவி – முத்துச் சப்பை ரதம்] | |
| 21.06.2024 | வெள்ளிக்கிழமை | 8ம் திருவிழா | [மரகத வல்லி – மகரச் சிங்க வாகனம்] | காலை கோமாதா பூசை மாலை திருவிளக்கு பூசை |
| 22.06.2024 | சனிக்கிழமை | 9ம் திருவிழா | [வடிவாம்பிகை – பூந்தண்டிகை] | மாலை முப்பெரும் தேவியார் வழிபாடு |
| 23.06.2024 | ஞாயிற்றுக்கிழமை | 10ம் திருவிழா | [பூலோகநாயகி – பூமஞ்சம்] | |
| 24.06.2024 | திங்கட்கிழமை | 11ம் திருவிழா | [திரிசூலி – இடப வாகனம்] | காலை மாம்பழத் திருவிழா |
| 25.06.2024 | செவ்வாய்க்கிழமை | 12ம் திருவிழா | [மங்கல ரூபினி – மயில் வாகனம்] | மாலை மாவிளக்கு வழிபாடு |
| 26.06.2024 | புதன்கிழமை | 13ம் திருவிழா | [கைலை ஈஸ்வரி – கைலாச வாகனம்] | காலை கற்பூரச்சட்டி நேர்த்திக்கடன் வழிபாடு,மாலை பூரதம், |
| 27.06.2024 | வியாழக்கிழமை | 14ம்திருவிழா | [குலநாயகி – குதிரை வாகனம்] | பகல் வேட்டைத்திருவிழா, மாலை தங்கத்தேர் |
| 28.06.2024 | வெள்ளிக்கிழமை | 15ம் திருவிழா | [சாந்தமனோகரி – சப்பை ரதம்] | மாலை சப்பை ரதம் |
| 29.06.2024 | சனிக்கிழமை | 16ம் திருவிழா | [இராஜ மகாமாரி – இராஜ இரதம்] | காலை 08.00 மணிக்கு தேரோட்டம் |
| 30.06.2024 | ஞாயிற்றுக்கிழமை | 17ம் திருவிழா | [கருநாக பூசனி – நாக வாகனம்] | காலை தீர்த்தத் திருவிழா [சிருங்கார பொய்கை] |
| 01.07.2024 | திங்கட்கிழமை | 18ம் திருவிழா | [சண்டேஷ்வரி – இடப வாகனம்] | காலை சண்டேசுவரி வழிபாடு, குரு வழிபாடு, இரவு பூங்காவனத் திருவிழா பூச்சொரிதல் |

கும்ப பூசை: காலை 06.15 மணி
தம்ப பூசை: காலை 08.30 மணி
வசந்த மண்டபம் காலை 09.30

அறிந்தேன் எவரும் அறியா மறையை, அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கே, திருவே! வெருவிப்
பிறிந்தேன் நின்அன்பர் பெருமைஎண்ணாதகரும நெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக்கு உறவாய மனிதரையே.

தம்ப பூசை: மாலை 04.00 மணி
வசந்த மண்டப பூசை மாலை 05.00

எமையாளும் தாய்சக்தி அன்னை ஸ்ரீ இராஜ மகாமாரி அம்மன் அடியார் பெருமக்கள் யாபேரும் பெருந்திருவிழாக்காலங்களில் அன்னையின் பெரும் புகழையன்றி பிறவார்த்தைகள் யாதொன்றும் பேசாமல் அமைதி காத்து அன்னையின் பேரருள் பெற்று பேரானந்தப் பெருவாழ்வினை பெறுவதற்கு சைவசமய ஆசார சீலர்களாக தமிழ்ப்பண்பாட்டு உடையணிந்து திருக்கோவிலுக்கு எழுந்தருள அவர்தம் பொன்னார் திருவடிகளை மனம்,மொழி,மெய்களால் வணங்கி கேட்டுக்கொள்கின்றோம்.

முக்கிய குறிப்பு:- விழாக்காலங்களில் அனுமதியின்றி திருக்கோவில் உட்பிரகாரத்தினுள் ஒளிப்படக்கருவிகள் கையடக்க தொலைபேசி பாவிப்பதை தவிர்க்கவும்.
பாலஸ்தாபனபிஷேகம் : 08.07.2024 திங்கட்கிழமைஅன்று நடைபெறும். மகா கும்பாபிஷேகம் : 30.04.2025 புதன்கிழமை அன்று நடைபெறும்.

செருத்தனைப்பதி
ஸ்ரீ இராஜமகாமாரி அம்மன் திருக்கோவில்
புளியங்கூடல்.
10.05.2024

சுபம்

இங்ஙனம்:-
அம்பிகையின் அரும்பணியின் கீழ்
ஆலய அறங்காவலர்
து.சி.செந்தூரன்